திருச்சிற்றம்பலம்

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

# தமிழ் வியாசங்கள்

248

இஃது

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத்

தமிழ்ப் பண்டிதராயிருந்த

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி.ஏ.,

அவர்கள் இயற்றியது.

T000248
Sarasvati Mahal Library. Thanjavur



பப்ளிஷர் :

வி. சூ. சுவாமிநாதன்

மதுரை : : திருநெல்வேலி.

[பதிப்புரிமை]

# ஆக்கியோன் பெயர்

இஃது திருமயிலை வித்துவான்

மகா-ா-ா-ஸ்ரீ சண்முகம்பிள்ளையவர்கள் சொல்லியது.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பொலம்பூத்த தற்காப்பு நியம மெனும் விடயமரும் புலவோர் நாட, நலம்பூத்த சுவைசெறிசெந் தமிழ்வசன நடையினனி நலக்கத் தந்தான், குலம்பூத்த பிறப்பொழுக் கங் குன்றாத நான்மறையோர் குலத்துட்டோன்றி, வலம் பூத்த வேற்கு கற்றாழ் சூரியநா ராயணநாவலவ ரேறே. (க)

# PREFACE

NEARLY two decades have elapsed since the lamented demise of V. G Suryanarayana Sastriar whose life in its brief compass had been so full of promise and performance for the restoration of the glory of Tamil Literature and the revival of Tamil studies. During these two decades, strange to say, the student of Tamil in our University has had little chance of becoming acquainted with the works of that scholar, with almost the single exception of **The History of the Tamil Language** which has often been prescribed as a text-book. One of the greatest votaries of the Deity of Tamil Culture is thus rapidly passing into oblivion, very possibly because, in spite of the eminence of his literary productions, there are few of them capable of being used as text-books. That such an excuse is poor and ridiculous goes without saying. But even such a halting excuse will become impossible with the publication of this small volume of essays culled from various magazines to which they had been contributed by the author. Written

in elegant prose, brief in compass, and replete with those excellences which are demanded of the best literature and which are known in Tamil as சொல்நயம் and பொருள்நயம், these essays are in every way of remarkable and worthy of close study. We would commend, in particular, to the reader's attention the ability with which scientific ideas (of reputed Western growth and mordernity) have been expounded in Tamil without any violence to sense or sound. This must serve as an eye-opener to the opponents of vernacular medium of instruction. But the object of the publisher-who, by the way will feel extremely grateful to Editors of magazines and reviews who will bring to light any more essays of V. G. Suryanarayana Sastriar not yet published in a collected form-will be more than achieved, if this volume serves to familiarise students of Tamil in our University with the name and something of the work of this great scholar, who did so much for our Literature, but alas! was not spared by unkind Fate to do more.

**S. S. Suryanarayanan.**

*Reader in philosophy, Limbidis Garden, Royapettah*

# முகவுரை

இவ் வியாசநூல் சென்னை கிறிஸ்தவக் கலாசாலை யில் தலைமைத் தமிழ்ப்புலமை நடாத்திய பிரும்மஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி.ஏ., அவர்கள் சில பத்திரிகைகளுக்கு எழுதிவிடுத்த கட்டுரைத் தொகு தியாகும். சாஸ்திரியாரவர்களுடைய தமிழபிமானமும், தமிழ்ப்புலமையும் அவர்கள் இயற்றிய அரிய பல நூல் களாலும், தம் மாணவருள்ளத்து எழுப்பிய கிளர்ச்சி யாலும் தமிழுலகம் நன்கறிந்ததே. ஆங்கிலமுறையிற் கல்விபயின்று, தமிழுலகுக்கு இக்காலத்து வேண்டற் பாலன வாகிய தமிழ்மொழியின் வரலாறு, நாடகவியல் ஆகிய துறைகளிற் புது நூலியற்றிப் புகழ்படைத்த வரும் இவரே.

இக் கலைவல்லாளர் மேற்கூறியவாறு தனி நூல் களியற்றியதோ டமையாது, அவ்வப்பொழுது அவகா சப்பட்டபோதெல்லாம், சபைகளிற் பிரசங்கமூலமாக வும், பத்திரிகைகளில் வியாசரூபமாகவும் நவீன சாஸ் திரக் கருத்துக்களையும், தமிழ் மொழி சம்பந்தப்பட்ட சிற்சில ஆராய்ச்சிகளையும் வெளியிட்டு வந்துளர். இவை அக்காலத்துப் (30, 35 வருஷங்கட்கு முன்னர்) படிப்பார் மனத்தைக் கவர்ந்து பொருள் விளக்கத்தா லும் சொற்றொடராக்கத்தாலும், பெரிதும் மதிக்கப் பெற்றன.

இத்தகைய தனி வியாசங்கள் பழம் பத்திரிகை களிற் பொதியுண்டு படிபோர்க்குக் கிடைத்தற்கரியன

வானமைகண்டு, சாஸ்திரியார் குமாரன் ஆண்டில் இளை ஞனேனும், தமிழபிமானம், செய்தொழிலூக்கம் இவற் றிற் சிறந்தவனாகிய வி. சூ. சுவாமிநாதன் தம் தந்தையா ரது வியாசங்களை முயன்று திரட்டி ஒருநூலாக வெளி யிட்டிருக்கின்றனன். தமிழில் பல்வகைய வசனநூல் கள் பல்கிவரு மிக்காலத்தில், அதிலும் ஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் தமிழ் வியாசம் கட்டாய பாடமா யிருக்கும் நிலைமையில் இந்நூல் வெளிவருவது சால வும் வேண்டற்பாலது.

இதனைக் கலாசாலைகளில் உரியவர்கள் பாட புத் தகமாகத் திட்டஞ்செய்து நற்பயனெய்த முன் வரு வார்களென்று நம்புகிறேன்.

வே. முத்துசாமி ஐயர், எம்.ஏ., எல்.டி.,

டிப்டி இன்ஸ்பெக்டர் முசிரி ரேஞ்சு.



V. G. Suriyanarayana Shastri, B.A.

# முன்னுரை

எந் தந்தையார் அப்போதைக் கப்போது எழுதி, பல பத்திரிகைகளின் மூலமாய் வெளிவிடுத்த பல தமிழ் வியாசங்களை யொருங்கு சேர்த்து, "தமிழ் வியாசங்கள்" என்ற தலைப்பின்கீழ் வெளிவிடவேண்டுமென்ற பேரவா வெகு நாட்களாக எனக்கு இருந்து வந்தது. அப் பேரவா கைகூடும் காலம் இப்போது, வாய்த்ததைப்பற்றி யான் பெரிதும் மனமுவக்கின்றேன்.

இவ்வியாசங்கள் பல பெரியோர்கள் கூறிய முறைப்படியே வகுக்கப்பட்டுள்ளன. அதுபற்றி அன்னாருக்கு என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். மற்றும் இதனைத் தங்கள் பத்திரிகைகளினின்றும் எடுத்துப் பிரசுரிக்க உத்தரவளித்த பத்திராசிரியரவர்களுக்கும், எந்தந்தையாரது நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

இன்னும் எந்தந்தையார் எழுதிய வியாசங்கள் அநேகம் உள்ளதென அறிகிறேன். அவ்வாறு உள்ளதன் பிரதியாரிடமாவது இருப்பின் அதனை எனக்குத் தந்து உதவும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

இப் புத்தகத்திற்கு ஆங்கிலமுகவுரை யெழுதி உதவிய மகா-ள-ள-ஸ்ரீ எஸ். எஸ். சூரியநாராயண சாஸ்திரியார், எம். ஏ., பி. எஸ்ஸி., அவர்கட்கும், தமிழ் முகவுரை யெழுதியும், மற்றும் பிழைதிருத்தியும் உதவிய மகா-ள-ள-ஸ்ரீ வே. முத்துசாமி ஐயர், எம்.,ஏ., எல்.டி, அவர்கட்கும் என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்,

1–10–'35
மதுரை.

வி. சூ. சுவாமிநாதன்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தற்காப்பு நியமம் ... | 9 |
| 2. | பொய்த் தோற்றங்கள் ... | 25 |
| 3. | ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள் ... | 44 |
| 4. | மனவமைதி ... | 51 |
| 5. | உயர் தனிச் செம்மொழி ... | 54 |
| 6. | பதினெட்டாம் நூற்றுண்டின் தமிழ் பாஷாபிவிர்த்தி ... | 58 |
| 7. | சொற்பொருளாராய்ச்சி ... | 64 |
| 8. | ஓர் நண்டுத்தெறுக்கால் ... | 71 |
| 9. | தமிழ் நூலாராய்ச்சியின் தற்கால நிலைமை | 74 |
| 10. | வறுமையுந் தமிழ்ப் புலமையும் ... | 78 |
| 11. | தமிழ்ப் புலவர் பொறுமை ... | 82 |
| 12. | தமிழ் அகராதி ... | 86 |
| 13. | தமிழ் நூலாதரிப்போர் ... | 89 |
| 14. | சுதேச பாஷை நீக்கம் ... | 92 |
| 15. | சர்வ கலாசாலை விசாரணை ... | 95 |
| 16. | சுதேச பாஷை யாக்கம் ... | 106 |
| 17. | தமிழ்ப் பாடசாலைகள் ... | 108 |
| 18. | இந்தியர் ராஜபக்தி ... | 111 |

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

# தமிழ் வியாசங்கள்

## I. தற்காப்பு நியமம் *

### கடவுள் வாழ்த்து

நேரிசையாசிரியப்பா

திருவளர் செல்வத் தருள்வளர் தவத்தின்
அகத்தியர்க் குத்தமிழ் மகத்துவந் தெரித்த
நற்காப் பரங்கிரி நாயகற் பணிகுதும்
தற்காப்பு நியமந் தன்னை
எடுத்தினிது விரித்து முடித்தற் பொருட்டே.(உ)

செந்தமிழ்ப்பயின்ற செல்வர்காள்!

யாமீண்டு எடுத்து உபந்நியசிப்பான் புகுந்த விஷயந் * தற்காப்பு நியமமென்பது. இஃது நீவி ரறியாத தன்று. அங்ஙனமாகவும் எளியேம் இதனைக் கையாடு

* தற்காப்பு நியம மென்னும் பெயரிய இவ்வியாசம், சென்னைத் தமிழ்ப் பாஷாபிவிர்த்தி சபையாரது வேண்டு கோட்கிணங்கிச் செய்யப்பட்டுச் சென்னை இராஜதானிக் கலாசாலைச் சமஸ்கிருத பட்டாசாரியாராகிய மகா-௱-௱-ஸ்ரீ தி. மி. சேஷகிரி சாஸ்திரியாரவர்கள், எம். ஏ. சபாநாயகராக வீற்றிருந்துழி, வருஷாந்த வந்தனப்பிரசங்கமாகவாசிக் கப்பட்டது. இஃது பலர்க்கும் பயன்படுமாறு நண்பர் விரும்பியவண்ணம் பிரசுரிக்கப்பட்டது. வி. கோ. சூ. * Law of Self Preservation.

தல், ஒப்புயர்வில்லாத் திப்பிய குணத்த, அருமையாம் பாஷைக ளளவிலவறிந்த, பெட்புடன் பலநூ லுட்பய னோர்ந்த அக்கிராசனாதிபதியார் கூறும் பொற்புறு பற் பல அற்புத நற்பொருள் கற்பது கருதியன்றே! ஆதலி னெம்மைநோக்கி 'என்னே யிவர்தம் புலமை'யென எள்ளி நகையாடாது அன்புடன் போற்றுமின்!

## தற்காப்பு நியமத்தின் பொதுவியல்பு

தற்காப்பு நியமமென்பது ஒரு பிராணி தன்னைத் தானே பற்பல அபாயங்களினின்றுந் துன்பங்களினின் றுந் தப்புவித்துக் காத்துக்கோடன் முறையாம். இங் ஙனங் கூறிய தற்காப்பினை இவ்வுலகின்கணுள்ள ஒவ் வொரு ஜீவராசிகளிடத்துங் காணலாம். காட்டிலுள்ள புலிகள் உயிர்த்திருப்பதும், தீக்கோழிகள் வேட்டைக் காரர்களினின்றுந் தப்பித்திரிவதும் யாங்ஙனம்? ஆழ்ந்து நினைமின்! சிறுபான்மை தத்தமது அறிவினு லும் பெரும்பான்மை இயற்கையினாலுமா மென்பது வெளிப்படும். "ஆம், அவை தத்தம் அறிவினாற் கரந் துறைவதை யறிவேம்; மற்று இயற்கையினாற் பிழைத் துத் திரியு மென்றீரே; அஃதென்னை?" என்பீரேல்:— புலிகள் தம்முடலின் மஞ்சள் வரிகளுங் கருநிறக் கீற் றுக்களு மிருப்பதினாற் போந்த பயன்தானென்னை? அவை ஓங்கிவளர்ந்த கோரைப்புற்கிடையில் நிற்குமா யின், நம் கண்ணிற்கு அப்புலிகளினிருப்பிடம் எளி திற் புலப்படமாட்டாது. ஏனெனிற் கோரைப்புல், மூங் கிற் புதர் ஆகிய இவற்றின் நிறமும் புலியின் நிறமும் ஏறக்குறையப் பார்வையினுக்கு ஒன்றாயிருத்தல்பற்றி யென்க. இவ்வாறு ஒன்றாயிருத்தலின் மான்கள் புலிக

ளிருத்தலை யறியாது உலாவுகையிற் புலிகள் அம் மான்களின்மேற்பாய்ந்து இரையெடுத்துக் கொண்டும்வேடரினின்றுந் தப்பிக்கொண்டுந் திரிகின்றன. இனித் தீக்கோழிகள் மணல்வனங்களிற் சற்றுத் தூரத்து நிற்குமாயின் அவை ஆண்டு நிற்றல் நடந்தாலன்றிக் கண்ணுக்குப் புலப்படாது. ஆதலின் அவை வேடர்களது கணைக்கு இலக்காகாது பிழைத்து வாழுகின்றன. இவ்வண்ணம் புலிகளுந் தீக்கோழிகளும் பிழைத்துத் திரிவதற்கு முக்கிய ஏதுவான் அவ்வவற்றின் நிறப்பேறு தத்தஞ்செயலினுலோ, அன்றிஇயற்கையினுலோ? கூறுமின். இயற்கையினுலென்பதற்கு ஓராக்ஷேபணையுமின்ரும். இவ்வுலகின்கண் எப்பொழுதும் பயனுள்ளனதாம் இயற்கையாகவே நிலைத்து நிற்கும். இங்ஙனம் பயனுள்ளன நிலைநிற்றலைத்தான் இயற்கைப்பிரிநிலை(Natural Selection) யென்றும், தகுந்தவை தங்கிநிற்ற (Survival of the Fittest) லென்றும் மேன்மொழி உயிர் நூலோர் (Western Biologists) கூறுவர். இஃது சுபாவ நியமங்களுக்கெல்லாம் (Laws of Nature) முதன்மைதாய் விளங்கலு முணர்க.

### தற்காப்பின் இன்றியமையாமை

இதுகாறும் மனிதற்குக் கீழ்ப்பட்ட பிராணி சம்பந்தமாகவே கூறிப் போந்தோம். இனி மனித சம்பந்தமாகவே கூறுவோம். கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட பொருள்களெல்லாவற்றினும் ஒருவித ஒழுங்குளது. அவ்வொழுங்கினைத்தான் தற்காலத்திலுள்ள சான்றோர் இயற்கையொழுங் (The order of Narure) கென்றுரைப்பர். இவ்வியற்கை யொழுங்கிற்

காணப்படும் பிராணிகள் யாவற்றினும் மனிதனேமேதக்காணுயினும் மற்றைப் பிராணிகளைப்போன்றே இவனும் வாழ்க்கை நியமங் (Laws of Life)கட்கு உட்பட்டிருத்தல் வேண்டுதலின் இவனுக்குந் தற்காப்பு இன்றியமையாததாகின்றது. அங்ஙனமின்றேல், தமக்கும் பிறர்க்கு மின்பம் பயப்பனவாகிய ஏனையகடமைகளைச் செய்தல் அசாத்தியமாய்விடுமென்க. "சுயநயவிரக்தியுள்ளவன் அன்றே முக்தி யெய்துவான்; அங்ஙனமிருப்ப நீவிர் தற்காப்பு மனிதற்கு இன்றியமையாததென்று கழறுவதென்னையோ?" என்று சங்கிப்பீரேல்:—கூறுவாம். நம் உடலுயிர்களைப்பற்றி ஜாக்கிரதையா யிருக்குமாறும், ஒரு பயனுமின்றி நம்முடலை வருத்தாமலும் நம்முயிரினைப் பலியிடாமலு மிருக்குமாறும் ஒழுக்கநூல் (Ethics) விதிக்கின்றது. இதனை உதாரண முகத்தால் விளக்குவோம்:— தெய்வபக்தியுடையானொருவன் ஒருபயனுமின்றிக் கடவுள் முத்திதந்தருளுவாரென்னுங் கருத்தினனாய்நகங்கள்வளர்ந்து தொளைத்துக்கொண்டு புறங்கைக்கு வருமட்டும் அகங்கையினை விரல்களோடுசேர்த்து மூடிக்கரங்களை வானத்தைநோக்கி நீட்டிக்கொண்டிருப்பானாயின், பயன்கருதிக் கடவுளால் மனிதர்க்குக் கொடுக்கப்பட்ட அங்கங்களிற் கையென்ற மகா அற்புதமான ஒன்றினை நாசப்படுத்துகின்றானாதலின் அவன் பாபியேயாவா னென்பதற்கு ஐயமின்றென்க. இத் தற்காப்புக்கடமையினுஞ் சாலச்சிறந்த கடமைகளு முளவாம். இஃது அவற்றொடு முரணுங்கால் அக்கடமைகளையே செய்தல் வேண்டுமென்பது ஒழுக்க நூல் விதியாம். தனது

குடும்ப சம்ரக்ஷணைக்காகத் தலைவன் தன்னுடைய சத்திக்கு அதீதமாயு முழைத்து வருந்துதல் வேண்டும். நாடுகாப்பின் பொருட்டுப் போர்வீரர் யுத்தத்தில் உயிர் துறக்கவும்வேண்டும். இவ்வமயங்களில் அவர் தற்காப்பினைக்கருதி நடப்பராயின், அவர் குற்றவாளியரே யாவார் என்பதும் ஐயுறற்பாலதோ? ஆகவே ஒரு பயனுமின்றித் தன் உடலுயிர்களை ஒருவன் வருத்துகிற்பானாயின், அவன் ஆன்மத் துரோகியென் றழைக்கப்படுவானேயன்றி, ஒருநாளுந் தான் கருதிய வண்ணம் முத்தியெய்தான். தற்கொலை புரிவது மாபாவம் என்ற நந்தமக்கு இது மாத்திரம் பாவச் செயலாகாததேனோ? சாற்றுமின்!

## தற்காப்பினைக் குறித்து ஒழுக்கநூலோர் கொள்கை

மனிதரின் பொது நன்மைநாடுதல் ஒழுக்கநூல் இலக்காம்; ஆதலின், ஒவ்வொருவனது நன்மையினை நாடுதலுந் தக்க இலக்காம்; ஆகவே, ஒவ்வொருவனுந் தன்றன் நன்மையினை நாடலும் நேரிய இலக்காம். பிறன் உற்ற நலமானது மனிதரின் பொதுநலத்தில் எவ்வளவினதாகுமோ அவ்வளவினதேயாம். ஒருவன் தானுற்ற நன்மையும்; தன்னின்பம் நாடப்படாதாயின், பிறனது இன்பந்தான் நாடப்படுதலேனோ? தன்னின்பம் பிறரால் நாடப்பட்டுழித் தான் பிறனதின்பம் நாடுதலினாற் பொதுநன்மை ,யதிகப்படுமாயின், யாவும் செவ்வனே செல்லும். அங்ஙனமின்றி, ஒவ்வொருவனும் தன்றன் நன்மையினைப் பிறனொருவன் நாடுவான் என்பது நினைத்தே, தன் தன் நன்மை நாடும்

அப்பிறனுக்கே இவ் வொவ்வொருவனும் நன்மை நாடு வானுதலானும், நம்மின்பங்களிற் பெரும்பாலன நமது சரீரசௌக்கியத்திற்கு ஆவசிகமான செயல்களோடு ஒற்றுமைப்பட்டிருக்கின்றன வாதலானும், இச் சரீர சம்பந்தமான இன்பங்களையொப்பாமை மிகத் தாழ்ந்த தரமான வாழ்க்கையினையும்,பலவீனத்தினையும், செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வதற்கு ஏலாமையினை யும் விளைவிக்கின்றதாதலானும் ஒவ்வொருவனும் பிறர் இன்பத்தையே நாடுதல் அசம்பாவிதமாம் என்க.

## தற்காப்பின் பகுதிகள்

தற்காப்பின் பகுதிகள் பலவிதப்படும். அஃதெப் படியெனில்:—ஈண்டுத் தான் என்றது இவ்வுலக இன் பத்திற்கு முக்கிய சாதனங்களாய் சரீரத்தினையும், மனத்தினையும், குணத்தினையும், குறிப்பதனோடு நின்று விடாமல், பேரின்ப சாதனமாகிய ஜீவான்மாவினையுங் குறித்து நிற்றலின், தற்காப்புப் பலவகைப்படுகின்றது. அவைதாம் சரிராபிவிர்த்தி, மனோபிவிர்த்தி, குணபி விர்த்தி, மோட்ச சாதனப்பேறு, என்னுந் தலைச்சாத் திட்டுப் பின்னர் விரித்துக் கூறப்படும். இது நிற்க, சில மேற்புலவிஞ்ஞானிகள் தற்காப்பென்னுந் தொடரின் கண்ணுள்ள தான் என்பது மெய்ம் மனங்களையே குறிக்குமெனக் கூறுவாராயினுந், தென்புலக்கலைஞர்கள் 'தன்னையறிதல்', 'தன்னைத்தான் காண்டல்' என்பன வற்றள், தான் என்பது ஜீவான்மாவினை யுணர்த்து கிற்பதுபோலத் தற்காப்பின்கணுள்ள தானென்பதுஞ் ஜீவான்மாவினைக் குறிக்குமெனக் கூறுதல்பற்றி யாமும் அவ்வாறே கூறுகின்றாம்.

### சரீராபிவிர்த்தி

இனி மேற் றெருகுத்துச் சுட்டியவற்றை வகுத்துக் காட்டுவான் தொடங்கி நிறுத்த முறையாலே முதற்கட் சரீராபிவிர்த்தியினைப் பற்றிப் பேசுகின்றாம். நன்றா யுழைத்து வேலைசெய்பவனே சரீராபிவிர்த்தி யடைந்து தேகசௌக்கிய முறுவான். அங்ஙனமல்லாதவன் சரீராபிவிர்த்தி யடையாது வாழ்நாள் முழுவதும் பிணியினால் வருந்தி வீணாளாய்க் கழிப்பான். இக்கருத்தினை யுட்கொண்டன்றே "போதுமான மட்டுஞ் சுறுசுறுப்பாயிருப்பவனே பிராணதாரணப் பிரயத்தனத்தில் (Struggle for existence) ஒழிந்துவிடாது தங்கி நிற்பான்" என்று உயிர் நூல் (Biology) முறையிடுகின்றது. ஆயினும் அவ்வாறு சுறுசுறுப்போடு வேலை செய்பவனுக்கு வேலைக்கிடையிற் சிறிது ஓய்வும், இரவில் உறக்கமும், சின்னாட் பின்னர் ஒரு நாளொழிவும் பன்னாட் பின்னர்ச் சின்னாள் விடுமுறையு மிருத்தல் வேண்டும்; இன்றேல் தேகம் வலியிழந்து கட்டழிந்து போய்விடும். அங்ஙனம் இவன் செய்யும் வேலையும் பிரியகரமாகவே இருத்தல்வேண்டும். அது பிறரது கட்டாயமின்றிச் சுயேச்சையாற் செய்தலும்வேண்டும். இல்லையேல், மனவருத்தத்திற்கு இடனாகி அஃதவனைத் துன்புறுத்து மென்க.

வேலைசெய்ய வேண்டாதவன் உடல்விருத்தி விளையாட்டுக்களாகிய உதைபந்தாட்டம் (Foot-ball) சல்லடைப்பந்தாட்டம் (Tennis) மரச்சட்டப் பந்தாட்டம் (Cricket) முதலியனவாதல் ஆடல்வேண்டும். ஒருவன் தனதுந் தன் குடும்பத்தினதுமான சுகஜீவனங்கட்கு

ஆவசியகமும் உபயோகமுமுள்ள எல்லாவிதப் பயிற்சியும் அறிவும், திரவிய சம்பாதனமும் அடைந்திருத்தல் வேண்டும். அவ்விதப் பயிற்சிகளுள் முதன்மையானது கைச்சாதுரியப் (Manual dexterity) பேறு. இவ்வுலகின்கண் காணப்படும் பற்பல சுகமூலங்களையும் உபயோகித்தற் கேற்றவர்களாய்ச் செய்யுந் தன்மைய திறத்தினை யொவ்வொருவனும் முதிருமாறு செய்தலும் வேண்டும்; அன்றேற் சுகாநுபவம் அசாத்திய மாய்விடு மென்க. "எந்த விஷயங்களிலும் ஏகரீதியானது (Monotony) வேண்டற்பால தன்று; மேலும் மஃது வாழ்க்கையினுக்குக் கேடு விளைப்பதாகவும் காணப்படுகின்றது'' என்று உடல்நூலோர் (Physiologists) கூறுவர். இவ்வெல்லாவற்றிலும் மிகச் சிறந்ததும், தற்காலத்தில் விசேஷமாய்க் கவனிக்கப்படாததுமாயிருப்பது மிதமான உண்டிகோடலாம். போதிய உணவுகோடலானது சரீர சுகத்திற்கு மூலமந்திரமாமென்பதை யுணர்ந்திருந்தும், பலர் சிவபிரானது மூத்த பிள்ளையார்க்கும் தமயனாராய்த் தின்னத் தலைப்பட்டு அஜீரணமாதிய பலவித நோயினாலும் வருந்துகின்றனர். ஆதலின் இது விஷயத்தில் நாம் மிகக் கவலையெடுத்துக் கொள்ளல்வேண்டும். கள்ளருந்திக் களிபெருங் களியாட் டயர்வதும் உடற்கேடு விளைத்தலின் வேண்டப்படாததாம். உண்டாட்டிலுங் களியாட்டிலும் வீணே கைப்பொருளினைச் செலவிட்டுக் கடன்பட்டு உழல்வதும் கேவல அறியாமையாதலின் அதினின்றும் ஒவ்வொருவனுந் தவிர்தல்வேண்டும். இவ்விஷயங்களிலெல்லாம் இயற்கை ஒழுங்கிற்கு விரோ

தப்படாமல் நடத்தல்வேண்டும் என்பது ஒரு பெரிய நிட்சேபம் போலும்! இதுகாறுஞ் சரீராபிவிர்த்தியினைக் குறித்து எம் சிற்றறிவினுக் கெட்டியவாறு கூறிப்போந் தாம். இனி மனோபிவிர்த்தியினைப் பற்றி யுபநியசிக்கப் புகுவாம்.

## மனோபிவிர்த்தி

மனோபிவிர்த்தியினுக்குப் பிரதான சாதனங்களா யுள்ளன முறைப்பட்ட சாத்திரக்கல்வி (Scientific culture)யும் இலக்கியப் பயிற்சியும், நற்கலைத் (Fine arts) தேர்ச்சியுமேயாம். இவையிற்றினை முறைவழு வாது விரித்துரைப்பாம். உலகத்தின்கணுள்ளபொருள் களின் தத்துவங்களை யுணர்தற்கேற்ற மனப்பயிற்சி முக்கியமாம். இச்சுபாவ விஷயங்களுள் ஒரு பகுதி யினை, மற்றைப் பகுதிகளின் ஞானஞ் சிறிதேனுமின்றி யறிதல் கூடாமையாம். அஃதாவது சுபாவ விஷயங் களுள் ஒரு பகுதியினை யறிய விரும்புகின்றவன் அப் பகுதியின் பூரணஞானத்தினையும் பெறவேண்டுவானு யின் அவனுக்கு மேற்குறித்த சுபாவ விஷயங்களுள் ஏனைய பகுதிகளின் ஏகதேசப்படு முணர்ச்சியாதல் இருத்தல்வேண்டும். இத்தகைய மனப்பயிற்சி அசாத் தியமெனத் தோற்றுவதாயினும், ஒழுங்குபெறக் கல்வி கற்பிக்கப்படுமாயின் ஒவ்வொரு நூலின் தத்துவார்த் தங்களும் தெளிவாய்ப் பரவப்பட்டு உறுதியாய் மனத் தின்கண் பற்றிக்கொள்ளபபடும். ஈண்டுக்குறித்த நூல் என்பது உயிர் நூல், உளநூல், (Psychology) மனிதநூல், (Anthropology) ஒழுக்கநூல், செல்வ

நூல், (Political economy) பௌமியநூல், (Geology) முதலியவற்றின் பொதுப்பெயர். இந்நூலறிவுள் மனிதசமூக (Sociology) நூலறிவும் அடங்கும். இதுதான் சாத்திரக்கல்வி யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது.

இனி இலக்கிய வுணர்ச்சியினைக் குறித்துக் கூறுகின்றாம். இவ்விலக்கிய வுணர்ச்சியானது, கற்பனைச் செல்வமும், சொல்வன்மையும், மனவுறுதியும், பிறர் மனங்கவரும் ஆற்றலுமாகிய இன்னோன்ன பயன்களை யெல்லாம் விளைக்கின்றது. இஃதின்றேல் சம்பாஷணை பயனின்றாய் விடுதல்காண்க. நற்கலை ஞானமும் வேண்டற்பாலதென்று முன்னர்க்கூறினும். நற்கலைகளாவன யாவை? அவைதாம் கானம், கவிதை, நாடகம், சிற்பம், மதுரபாஷணம் (Eloquence) என்பன முதலியவாம். கானம் மனிதனது கடின சுபாவத்தை மிருதுவாக்கும். கவிதை உற்கரிஷமான மனோதர்மங்களையும், நாடகம் மனிதனது அந்தஸ் ஸ்வபாவத்தையும், சிற்பம் கூரிய அறிவினையும் ரசிகசக்தியினையும், மதுரபாஷணம் வசீகர வன்மையினையும் மெய்க்கீர்த்தியினையுங் கொடுக்கும். இயற்கைப்பொருள் வனப்பின் காட்சியினாற் போதரும் ஆநந்தம் அளந்துரைக்குந் தன்மையதன்றாதலின் ஒருவர்க்கு இயற்கை வனப்பு (Aesthetics) நூற்பயிற்சியும் இருத்தல் வேண்டும். கதைகள் படித்தலும், நாடகம் பார்த்தலும், சதுரங்க முதலியன விளையாடலும் இன்பவூற்றுதல் (Fountain of happiness) பற்றி விரும்புதற் பாலனவாம்.

இனிச் சரீராபிவிர்த்திக்கும் மனோபிவிர்த்திக்கும் பொதுவாகிய இல்வாழ்க்கை யினைக்குறித்து எமக்குத் தோன்றியவற்றை யெடுத்து இயம்புகின்றோம்.

நித்திய பிரமசாரித்துவத்தினா லுண்டாகுஞ் சரீரக் கேடுகளைக் காட்டிலும், நித்தியக் கன்னித் தன்மை யாகிய அபரிபூரண வாழ்க்கையினின்றும் போதருஞ் சரீரக்கேடுகள் மிகவுமதிகமாம் என்பது பெரும்பாலார் கொள்கை. இதனோடு சிறு பான்மையோர் கொள்கை முரணினும், மனோதத்துவ விஷயத்தில் அங்ஙனம் ஆடவரும் மாதரும் பிரிந்து வாழ்தலி னின்று உண்டாகுங் கேடுகள் மகா நாசகரமானவே யாம் என்பதினோடு எத்தகையோர் கொள்கையு முரணாதென்க. இதுபற்றி யறிவு முதிர்ச்சியினாலும் மனோவிகாரத் (Emotions) தினாலு முண்டாகும் நற் பயன்களை யநுபவியாமையாகிய துர்ப்பாக்கியத்தினுக்கு அவர் ஆளாதல் ஒரு தலையேயாம். ஸ்திரிபுமான்க ளாய் வாழுதல் ஊக்கத்தை யுயர்த்தித் தொழில்புரியு மாறு தூண்டி அவ்விருவர்க்கும் மனக்களிப்பினைத் தருகின்றது. இதுபற்றியன்றே,

"மாசிலா வையகத் திவ்வுயிர் வாழ்க்கை
யாம்பெருங் கடலுட் போ(ம்)மரக் கலனும்
ஆடவர் செஞ்சம் அறத்துறை யகன்று
நீடிசை சுழற்று நிலையிலாக் காற்று
நிண்ணய மற்ற வெண்ண மியக்கச்
சென்றுழிச் சென்று தன்றறி வின்றி
அலையா வண்ணம் அறத்துறைக் குடாவின்
நிலைபெற நிறுத்துநங் கூரமாய்ப் பின்னுஞ்

செய்வினை முயற்சியிற் பொய்வகைப் புன்னெறிக்
எற்றுண் டகன்று பற்றொன் றின்றி (௬)
ஆசையாந் திசைதொறு அலைந்து திரிந்தும்
கெடாவணங் கடாவிக் கெழுமிய வன்புசேர்
அறப்பிடி கடைப்பிடி யாகக்காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்க்குசுக் கானாய்
நின்றது மங்கையர் நிலைமை'' யன்றியும்
"மெள்ள மெள்ளத்த னுள்ளம் விரித்துப்
பொறையுஞ் சாந்தியும் படிப்படி புகட்டிச்
சிறிது சிறிதுதன் சித்தந் தெளித்துப்
பக்குவஞ் செய்யுநற் பள்ளிச் சாலை
இல்லறமென்பது'' சொல்லவும் வேண்டுமோ?(௭)

என்று தற்காலத்திலுள்ள *பெரியோர் கூறிய தூஉமென்க.

இவ்வில் வாழ்க்கை நலத்தினால், எப்பொழுதும் விளையாட்டிலேயே கருத்துப் பதிந்து ஆலோசனையென்பது சிறிது மில்லாது கருவமே உருவமாயிருந்த எத்தனை மாதரார் பத்தியு நேசமுமுள்ள தலைவியரும் அன்புள்ள தாயரும் ஆகின்றனர்! இரக்க மற்றுக் கோபமென்பதே குடிகொண்டிருந்த எத்துணையாடவர் தாம் உயிர்த்துணை யுற்ற பின்னை, அமைதியுஞ் சாந்தமும் உள்ள தலைவரும் கவலையுள்ள தந்தையருமாகின்றனர்! காண்மின்! மேலும் இவ்வில்வாழ்க்கையினால் தலைவி தலைவரது ஆராய்ச்சிவன்மை சாலவும் பலப்படுகின்றது.

---

* P. Sundaram Pillai.

இதுகாறுங் கூறிப் போந்தனவெல்லாம் நாசகாரணமாய் நேசமில்லா† வாணிபவதுவை யானவிடத்தினல்லாது, நேசம் பற்றிச்செய்த வதுவையான இடத்தே யாமென்க. ஆதலின் ஸ்திரீபுமான்க ளிருவரும் தமக்குள் பரஸ்பரம் அன்பில்லையாயின் விவாகஞ் செய்துகோடல் ஒருநாளுங்கூடாது. அன்றியும் ஒரு குடும்பத்தினைக் காப்பாற்றும் ஆற்றல் இல்லாதவர் மணமாடக் கருதுதல் பெருங் குற்றமாம். அவ்வாறு காப்பாற்றும் வலியிலார் மணப்பாராயின் அவர் செயல் காசுகொடுத்துத் தேள் கொட்டிக் கோடல்போலும். இதன்பின்னுந் தாம் துன்புறுவதேயன்றி ஒன்று மறியாத தமது மனைவி மக்களையும் அவர் வறுமைக் கடலில் ஆழ்த்தித் துன்புறுத்தலையுங் காண்க. இன்னும் இவ்வளவோடு நின்று விடாமல் அவர் தமது மக்களை அசௌக்கியப் படுத்துவதினாற் குரூபிகளாக்கித் தற்காப்பினுக்கும் அநருகராக்குதலின் மாபாதகரோ அல்லரோ? அந்தோ? இவரதறியாமைக் கென்செய்வது? தமிழ்வல்லீர்! மௌனஞ்சாதியாதீர்! வாய்திறந்து கூறுமின்! பெற்றோர்க்குச் சிறுபிராயத்திற் பிறக்கும் பிள்ளைகள் கேடெய்திச் சீக்கிரத்தில் அழிவுறுமாதலின், அப்பருவத்து மணமாடுவது அசங்கதமாம்.

## குணாபிவிர்த்தி

மனிதன் ஜனசமூகத்தி லிருப்பவனாதலின் குணாபிவிர்த்தியும் ஆவசியகம் ஆகின்றது. சிலர் சரீராபிவிர்த்தி மனோபிவிர்த்தி யாகிய விவற்றினும் இக்குணாபி

†Marriage as a Trade.

விர்த்தி மிகவும் முக்கியமானதென்று கூறுவாராயினும் குணவிர்த்தி அவற்றிற்குப் பிற்பட்டதாகவே கொள்ளற்பாற்றென்பது எம்மனோர் கொள்கையாம். குணவிர்த்தியினால் உண்டாம் பெரும்பயன் எந்நாளு மழியாத புகழ்ப்பேறும். புகழ்கருதிச் சற்குணமுடையவனா யிருத்தலினும், சற்குணமுடையவனாதலே கடமையென்ற எண்ணத்தோடு சற்குண முடையவனா யிருத்தல் மேன்மையானது. சற்குணச் செல்வத்தினுக்குக் காவலாயிருப்பன கற்பெனப்படும் பதிவிரதா தர்மமும் ஏகபத்தினி விரதமுமேயாம். இவ் விரதங்களை அனுசரியாதவர் தேகசௌக்கியமும் புகழும் பெறுதல் "ஒப்பிலா மலடிபெற்ற மகனொரு முயற்கொம் பேறித்தப்பிலா காயப் பூவைப் பறிப்பது" போலுமன்றே! வாய்மையும், ஈகையும், அன்பும், பரோபகாரமுமாகிய இவை முதலியனதாம் சற்குணங்கள் எனப்படும். பிறர்க்குத் துன்பஞ்செய்யாது தான் சுகானுபவமுடைய னாதலும், தான் துன்பமடையாது பிறர்க்கு இன்பம் தரத்தக்கனவற்றைச் செய்தலுமே, நம் தற்காப்பு நியமத்தோடு மாறுபடாத சற்குணங்களாம். இவற்றையுடையவனே நல்லொழுக்க முடையானென்றும் நீதிமானென்றும், புண்ணியவானென்றுஞ் சுகபுருடனென்றுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுவான்.

## லௌகிக விஷயஞானம்

உலக சம்பந்தமான விஷயங்களின் உணர்ச்சியே லௌகிக விஷய ஞானம் (Knowledge of the worldly affairs) எனப்படும். பிறரது ஒழுக்க வழக்கங்களை ஓர்தலும், அவ்வொழுக்க வழக்கங்கட் கேற்ப

நடத்தலும், வசிக்கும் நாட்டினது சட்டதிட்டங்களின் உணர்ச்சியும், அவற்றின்படி யொழுகலும், சுவாதீன மென்பதி னியல்பினை யறிதலும், அது பெற்று வாழ லும், மிருகசுபாவவுணர்ச்சியும், இவை போல்வன பிற வும் ஈண்டுக்கூறிய லௌகிக விஷயஞானம் என்பதின் கண் அடங்கும். இவ்வுலகத்திற் சுகஜீவனத்திற்கு இவ் வித ஞானம் ஆணிவேர் போன்றதாம். இஃதில்லையா யின் இன்ப வாழ்க்கையென்பது பூதகால சமாசார மாமே யன்றி, வேறில்லை. ஆகவே அவ்வித இன்ப மற்ற வாழ்க்கையானது தற்காப்பினுக்கிடையூறாய் நிற்றலின், அவ்விடையூறு ஒழியுமாறு லௌகிக விஷய ஞானம் பெறுதல் ஆவசியகமாகின்றது.

மோட்ச சாதனப்பேறு

இவ்விஷயத்தில் மனிதர்களது கொள்கைபல்விதப் படுகின்றது. முற்காலத்திலுந் தற்காலததிலுமுள்ள சிற்சிலரை (நிரீச்சுரவாதியரை)த் தவிர்த்து, மற்றை யாவரும் இம்மோட்சசாதனப் பேற்றினை அவாவி, அதற்குரியனவாய முயற்சிகளுஞ் செய்துவருகின்றனர். பேரின்ப மெய்துவதற்கு மூலகாரணங்களாயுள்ள பொருள்களை யடைதலே மோட்சசாதனப்பேறு என்று கூறப்படும். இந்த விஷயத்திலன்றே சில்லாண்டு களின் முன்னர், மனிதர்கள் பல பிளவுபட்டு ஒரு வரை யொருவர் விரோதித்து நிர்ப்பந்தப்படுத்தி உண்மை யுணராது மாழ்கினர்! அக்காலங்களோடு இம் மதவாதம் நின்றுவிட்டதோ? அம்மம்ம! என்சொல் வேம்? இவ்வளவு நாகரிகமுஞ் சீர்திருத்தமுமெய்திய இக்காலத்திலுமுள்ள அம்மதவாதத்தின் கொடுமையி

னைக் கூறுதற்குச் சேடனும், எழுதுதற்கு அந்தக் கார்த்த வீரியனும் வேந்தும், பார்த்திடற்கு அமரர் கோனும் வல்லரல்லது ஏனையோரால் ஆகற்பாலவோ? இயம்புமின்!

இவையெல்லா மொருபுற மிருப்ப, இங்ஙனங் கூறிய மோட்ச சாதனப்பேறே மகா முக்கியமானது என்பதற்குச் சந்தேகம் எட்டுணையுமில்லை. யாம் இந்த மோட்ச சாதனப்பேற்றினைச் சிறப்புவகையா லெடுத்துக் கூறாது பொதுவகையாற் கூறுகின்றாம். ஏனெனிற் பொதுவகையாற் கூறுமிடத்து எவ்விதக் கொள்கையோர்க்கும் பொருந்தும். மேலோர்கள் இவ்விஷயங்களிலெல்லாம் அவரவர் தத்தம் அறிவினுக்கு எது உத்தமமாகத் தோன்றுகின்றதோ அதனையே கொள்ளக்கடவார் என்று வாய்ப்பறை யறைகின்றார்கள். அதனைச் சற்று செவியில் ஏற்பீர்! அறிவால் மிக்கீர்! இதன்கண் நமது கொள்கைகள் ஒன்றோடொன்று மாறுபடினும் நாமெல்லாம் விரோதமின்றி நட்பாளராய் வாழுத லன்றோ தவறுக் கடன்பாடு? செழுந்தமிழாளர்காள்! இதனை மறவன்மின்! கடவுளது அருட்பேறன்றே செல்வத்து ளெல்லாந் தலையாய செல்வம்! அதுவன்றே முத்திக்கு வித்து! அதுவன்றே ஆநந்த மழைபொழியு முகில்! அதுவன்றே பேரின்ப வாழ்வளிக்கும் அமிர்தம்! அது வன்றே மலமாசு ஒழிக்கும் மதியம்! அதுவன்றே அஞ்ஞான இருள் நீக்கும் இரவி! இத்துணைச் சிறப்பினதாகச் சொல்லப்படும் அத்தெய்வவருளைப் பெறுதல் யாங்ஙனம்? சிறிது சிந்தனை செய்மின்! உபாசனையினாலுந் தியானத்தினாலும்,

அன்பினாலும் பத்தியினாலுமேயாம் என்று ஆன்றோ ருரைப்பர். ஆதலின் திருவருட் பெருங்கடலாகிய கடவுளைத் தியானித்து அவரருள் பெற்றுத் தற்காத் துப் பரோபகாரஞ் செய்து புகழ்பெற்ற பின்றை யுல கத்திலுள்ள ஆன்மகோடிகள் எல்லாம் மோட்சாநந் தம் பெற்று வாழ்க! வாழ்கவே!!

இஃதுடன் தற்காப்பு நியமத்தினைப் பற்றிய வியா சமும் ஒருவாற்றான் முடிந்தது. இதனுட் பிழைகள் பொதுளியிருப்பின் நல்லறிவுடையோர் அவையிற்றி னைத் திருத்தி யெம்மீது கருணைகூர்வாராக.

---

## II. பொய்த்தோற்றங்கள்

### 1. ஆரோபம்

இந்தப்பூலோகத்திலே நாம் ஒவ்வொருவரும் அநேகம் பொய்த்தோற்றங்கள் பார்த்திருக்கிறோம். அதாவது சில சில தோற்றங்கள் நமக்குப் பார்க்கும் போது உண்மையாகக் காணப்பட்டபோதிலும் ஆராய் கையிற் பொய்யென்று தெரியும். இந்தத் தோற்றங்க ளெல்லாம் பஞ்சேந்திரியங்களுக்கும் புலப்படும்; அதா வது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஒவ் வொன்றிற்கும் பொய்த்தோற்றங்கள் உண்டு. இந்தப் பொய்த்தோற்றங்களிலே இரண்டு விதங்கள் உள; அவற்றில் ஒன்றினைப்பற்றிப் இப்பொழுது கூறு வோம்.

'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்ற ஒரு பழமொழி நமக்குள்ளே வழங்கு

கின்றது. இந்தப் பழமொழியில் அடங்கிய உண்மையை ஆராய்ந்தறிவதே நாமெடுத்துக்கொண்ட விஷயம். தற்காலத்தில் நாமெல்லோரும் பெரும்பாலும் புகைவண்டிகளிலே பிரயாணம் செய்திருக்கின்றோம். அவ்விதமாகப் பிரயாணஞ் செய்கையில் நம்மவர்களில் அநேகர் ஒரு விஷயம் அறிந்திருக்கலாம். அதாவது: வண்டிக்குப்பக்கங்களிலே உள்ள மரங்களும், செடிகளும், ஓடுவனவாகவும், தாங்கள் அசையாது ஒரேயிடத்தில் நிலையா யிருப்பவர்களாகவும், அவர்களுக்குத் தோற்றுவது வழக்கம். ஆனால், அவர்கள் நாம் புகைவண்டியிலன்றோ பிரயாணஞ் செய்கிறோமென்று சற்றுச் சிந்திப்பார்களாயின் உண்மை வெளிப்படும். ஆகையினாலே முதலில் அவர்களுக்கு மரங்களுஞ் செடிகளும் ஓடுவனவாகத் தோற்றிய தோற்றம் பொய்த் தோற்றமாயிற்று.

இனி, ஒருநாளிராத்திரியில் பயப்படும் பிரகிருதியுள்ள ஒரு மனிதன் கால்நடையாக ஓரூரிலிருந்து மற்றோரூருக்குச் செல்லவேண்டுமென்று போய்க்கொண்டிருக்கையில் ஒரு பழுதை யானது அவன் போகின்ற வழியில் நெளிந்து கிடந்தது. அப்பொழுது ஆகாசத்திற் சந்திரனானவன் மேகப் படலத்தால் மறைப்புண்டு பிரகாசங் குறைந்து விளங்கினான்; நட்சத்திரங்களோ மின்னிக்கொண்டிருந்தன. அந்நேரம் அவன் இந்தப் பிரகாசத்தில் நெளிந்துகிடந்த பழுதையைக் கண்டான். கண்டவுடனே அவன் அதைப் பாம்பு படுத்திருக்கின்றதென்று நினைத்துக்கொண்டு பயந்து விலகி, நம்மை யெங்கே பாம்பு தொடர்ந்து வந்துவிடுமோ வென்று

ஓடினான். ஓடும்பாதையிற் பிளந்த மாங்கொட்டை யொன்று கிடந்தது. பயத்தோடு ஓடுகின்ற அவசரத்தில் இவன் அந்த மாங்கொட்டையை மிதித்து விட்டான். அது பிளந்த மாங்கொட்டையாகையினாலே மிதிக்கப்பட்டவுடனே அவனுடைய வலதுகாலின் சிறு விரலைக் கவ்விற்று. கவ்வின அளவில், 'ஐயோ! அப்பா! என்னைப் பாம்பு கடித்துவிட்டதே!' என்று அலறிக் கொண்டு போனவன் வழியெல்லாம் நிமிஷத்திற்கு இரண்டு தரம் சிவசிவா! சிவசிவா! என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டு செல்லுகையில், இவனுக் கெதிரே 'லாந்தர்' ஒன்றை யிடதுகையிற் பிடித்துக் கொண்டு, வலதுகையில் ஒரு தடியோடு இன்னொரு மனிதன் வந்தான். வந்தவன் இவ்விதமாகக் கதறிக் கொண்டு போகிறவனை நிறுத்தி என்னென்று கேட்க, 'ஐயா, என்னைப் பாம்பு வலதுகாற் சிறுவிரலிற் கடித்து விட்டது' என்றான். இதைக் கேட்டவன் 'லாந்தரை'ப் பிடித்துக்கொண்டு அவ்வெளிச்சத்தில் அவன் காலைப் பார்த்து 'ஒரு காயத்தையும் காணோமே, பல்லுப்பட்டிருக்கின்றது என்று சொல்லவும் இடமில்லையே' என்று சொல்லி, 'என்னிடத்திலே தடியிருக்கிறது, கையிலோ விளக்கிருக்கிறது, கடித்த இடத்தைக்காட்டு பார்ப்போ'மென்று அவனையும் அழைத்துக்கொண்டு போய்ப்பார்த்ததில், அங்கே பிளந்த மாங்கொட்டை கிடக்கக் கண்டு 'இதுதான் உன்னைக்கவ்வியிருக்கும்; அதை நீ பாம்பு கடித்துவிட்டதென்று மயங்கிவிட்டா' யென்றான். அதற்கு அவன் 'இல்லை, நான் பாம்பு நெளிந்து படுத்திருப்பதைப் பார்த்துத்தான் ஓடிவந்

தேன்' என்றான். இன்னுங் கொஞ்சதூரஞ் சென்று பார்க்கையில் அங்கே ஒரு பழுதை நெளிந்துகிடப்பதைக் கண்டார்கள். உடனே 'கண்டது பழுதை, கடித்தது மாங்கொட்டை' என்று தீர்மானித்துப் பொய்ப் பாம்பு கடிக்கப்பட்டவன் தேற்றப்பட்டு ஊர்போய்ச் சேர்ந்தான். ஆகையினாலே, பழுதையைப் பாம்பென மயங்கியதும்; மாங்கொட்டை கவ்வியதைப் பாம்பு கடித்ததாக நினைத்ததும் பொய்த்தோற்றங்களென்று கண்டோம்.

இனி, இவ்விதமான பொய்த்தோற்றங்களையெல்லாம் ஆரோபம் என்னும் பெயராற் குறிப்போம். ஆரோபம் என்றாலென்ன? ஆரோபமென்பது ஓர்விதப் பொய்த்தோற்றம். அது ஒரு பொருளை மற்றொரு பொருளாக அறியும் பிராந்தியுணர்ச்சியாம். இதை ஆங்கில பாஷையில் 'இல்யூஷன்ஸ்' (Illusions) என்பார்கள். இந்த ஆரோபமென்னும் பிராந்தியுணர்ச்சியானது எல்லா ஜாதியாரிடத்திலுமுள்ள போதிலும் நம் இந்துக்களிடத்தில் அதிக விசேஷமாயிருக்கிறது. இந்த ஆரோபத்தில் மூன்று பிரிவுகளுண்டு. அவை இந்திரியாரோபம், ஞாபகாரோபம், நம்பிக்கையாரோபம் என்று சொல்லப்படும். மெய், வாய், கண், மூக்கு, செவியென்று இந்திரியங்கள் ஐந்து உள்ளன. ஆகையால் இந்திரியாரோபம் ஐவகைப்படும். கண்ணுக்கு விஷயமாகும் ஆரோபத்தை, ரூபாரோபம் என்போம். திருடர் பயத்தோடு இரவில் வழிப்பயணம் போவார், சில மொட்டை மரங்களைக் கண்டு திருடரென மருண்டு சிறிதும் ஓசைப்படாமல் வாய்புதைத்

துச் செல்லுதலும், புகைவண்டியிற்போகையில் செடிக ளோடுவனவாகக் காணப்பட்டதும், வழி நடக்கையிற் பழுதையைப் பாம்பென மயங்கியதும் ரூபாரோபங்கள் தான். தற்காலத்திலுள்ள ககோள தத்துவ சாஸ்திரி கள் (Astronomers) சூரியன் ஒரேயிடத்தில் நிலை யாயிருக்கின்றதென்றும் பூமியானது அதைச்சுற்றி வரு கிறதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையினாலே சூரியனானவன் பூமியைச்சுற்றுகிறது என்ற நம் பூர்வீக இந்துக்களுடைய கொள்கையும் ரூபரோபத்தின் சக்தி யினால்தான் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

செவிக்குப் புலப்படும் ஆரோபத்தைச் சப்தாரோபம் என்போம். இதற்கு உதாரணங்கள் அதிகமாய் அகப் படும். ஒரு பெரிய மனுஷனுடைய கிரகத்திலே ஒரு நாள் அன்றைக்கு விசேஷ தினமாகையால் பாட்டுக்கச் சேரி நடந்தது. அங்கேமகா அழகுள்ள யௌவன ஸ்வ ரூபியாகிய ஒரு பெண்ணானவள் பாடிக்கொண்டிருந் தாள். அவளுடைய பாட்டைக்கேட்டு ஆநந்திக்கும் படியாக அந்தப் பெரிய மனுஷனுடைய சிநேகிதர்களில் அநேகர் வந்திருந்தார்கள். அவள் அழகுக்குத் தக்கபடி குரல் அவ்வளவு நன்றாய் இருக்காது. அவள் சங்கரா பரணம் பாடுகையிற் காம்போதியைக் கலப்பாள்; தோடி பாடுகையில் தன்யாசியைக் கலப்பாள்; பைரவி பாடும் போது முகாரியைக் கலப்பாள்; கானடாப் பாடும்போது சகானாவைக் கலப்பாள்; இவ்வளவு நன்றாக அவளுக்கு இராகங்களின் வித்தியாசங்கள் தெரியும். இப்பேர்ப் பட்டவள் பாடத்தொடங்கியது முதல் முடிகிறவரைக் கும் அங்கிருந்தவர்களில் அநேகர் 'பேஷ்' என்பவர்க

ளும் 'அச்சா' என்பவர்களும் 'பலே' என்பவர்களுமா யிருந்தார்கள். இவ்விஷயத்தில் அவர்களெல்லோரும் பாட்டு இனிமையில்லாமலும், குரல் நன்ருயிராமலு மிருக்க, 'பேஷ்'ப் பட்டங்கொடுக்கும்படி யிருந்தது பொய்த்தோற்றமோ அன்ரோ?

ஒருவன் தன் மனைவியானவள் உப்பில்லாமற் சமைத்தாலும் வெகுருசியாய்ச் சமைத்திருக்கிரு ளென்று மெச்சிக்கொள்ளுதல் நம்மவர்களிற் பெரும் பாலாருக்குத் தெரியும். புருஷன் தன் மனைவியின் பேரில் வைத்திருக்கும் அன்பினுலே அவளுடைய சமையலையும் நன்ருயிருக்கிறதாகச் சொல்லுகிருன். இப்படிப் புருஷர்கள் கண்ணை மூடிக்கொண்டு சொல்லு கிறதைப்பற்றி அவர்களுக்கு முன்னிலையிலேயே வீட் டிலிருக்கும் தங்கை தமக்கையர்கள் "எப்படியும் பெண் டாட்டியோ இல்லையோ, அப்பா, அவள் எப்படிச் சமைத்தாலும் உனக்கு நன்ருய்த்தானியிருக்கும்" என்று சொல்லிக் காட்டுவதுமுண்டு. 'விழுதிலைத் துவையலும், வேப்பங்காய்க்குழம்பும் அகமுடையாள் சமைத்தால் அமிர்தமாயிருக்கும்' என்று நம்முடைய பாட்டிகள் சொல்லிக்கொள்ளும் பழமொழி இதை வற்புறுத்தும். இந்த உதாரணம் வாயிற்கு புலப்படுத லின் ரசாரோபமாம். மூக்கிற்கு விஷயமாகும் பொய்த் தோற்றத்தைக் கந்தாரோபம் என்று சொல்லலாம். துர் நாற்றமுள்ள ஒருத்தியினிடத்தில் இச்சை வைத்துத் திரியும் காமுகன் ஒருவன் அவன் அவள் நறு நாற்ற முள்ளவளென்று சொல்லிக்கொள்ளுதலும், இவை போல்வன பிறவும், இவ்வித ஆரோபத்திற்குத் திருஷ் டாந்தங்களாகும்.

நன்ருய்ப் பாடக்கூடியவளும் சுகந்த பரிமளாதிகளைப் பூசிக்கொண்டிருப்பவளுமாகிய ஒரு ஸ்திரீ அழகில்லாதவளாயும் தீர்க்கமுடியாத வியாதிகளையுடையவளாயுமிருக்க, அவளுடைய பாட்டில் மயங்கியவர்கள் அவள்மேல் காதல்கொண்டு அவளிடத்தில்லாத இதர சுகங்களையும் உள்ளதாக மெச்சிக் கொண்டாடுதலும், இவைபோல்வன பிறவும் ஸ்பரிசாரோபமாம். இது மெய்யிற்கு விஷயமாகுதலினுலே இப்பெயர் இதற்கு இடப்பட்டது.

இதுவரைக்கும் இந்திரியாரோபங் (Illusions of Sense Perceptions) களைப்பற்றிப் பேசினேம். இனி, இரண்டாவதாகிய ஞாபகாரோபத் (Illusions of Memory) தைப்பற்றிச் சொல்லப்புகுவோம். ஞாபகாரோபகம் என்பது யாது? முன் நடந்தவைகளை நினைவூட்டிக்கொள்ளுங் காலத்திற் சில பொய்த்தோற்றங்கள் உண்டாகும். அப் பொய்த்தோற்றங்களை யெல்லாம் ஞாபகாரோபம் என்று கூறலாம். மனிதரியற்கையானது எப்பொழுதுஞ் சுகத்தையே நாடுவது என்பது சுபாவநியமமாம். ஆகவே அவர்களுடைய எண்ணங்களும் சுகத்தையே நாடிச்செல்லும் என்பது பெறப்படும். அப்படியே சுகத்தை நாடுங்கால் துன்பங்களை மறந்து இன்பங்களைப்பற்றியெண்ணுதல் இயற்கையாம். யாவரேனுமொருவர்க்குத் தற்காலத்தில் ஏதேனும் ஓர் அற்பத்துன்பத்தை அனுபவிக்குந் துர்ப்பாக்கியம் நேரிட்டால் அவர் தாம் இப்பொழுது அடைகிற சுகத்தைக்காட்டிலும் இளமையில் அதிகமாகச் சுகமடைந்திருந்தோமென்று

எண்ணுகிறார். இவ்விதமாக எண்ணுவதில், தாம் அதிக சுகமடைந்ததாக எண்ணுகிற அவ் விளமைப் பருவத்திலேயே யநுபவித்த துன்பங்களெத்தனையோ அத்தனை துன்பங்களேயும் மறந்து தொலேத்து விட்டுக் கேவலம் சுகமாத்திரமடைந்திருந்ததாக எண்ணுதலேப் பொய்த்தோற்றமாகிய ஞாபகாரோபம் (Illusions of Memory) என்று சொல்லுவதற்குத் தடையுமுண்டோ?

இனி, மூன்ருவதாகிய நம்பிக்கையாரோபம் என்பது இன்னதென விளக்குவோம். நாம் ஆராய்ந்து உண்மையென நம்புகிற அநேக விஷயங்களிலேயே ஆராய்ச்சிக் குறைவிஞற் சிற்சில பொய்த்தோற்றங்கள் உண்டாய்விடுகின்றன. தன்னேப்பற்றிய விஷயங்களே எல்லாம் அதிகப்படுத்திச் சொல்லிக்கொள்ளுதல் இவ்வகையாரோபமாம். அறிவில்லாத ஒருவன் தான் நிரம்பக் கெட்டிக்காரனென்று நினேத்துக்கொள்ளுதலும், மகா கோர ரூபியாயிருக்கு மொருத்தி தான் மகாலெட்சுமிபோல் அழகுள்ளவளா யிருக்கிறதாக எண்ணிக்கொள்ளுதலும், பைத்தியக்காரன் ஒருவன் தான் பேசும்போதெல்லாம் வெகு புத்திசாலித்தனமாய்ப் பேசுவதாக நினேத்தலும் நம்பிக்கையாரோப (Illusions of belief) மாம்.

இந்த நம்பிக்கை யாரோபமானது வேதாந்த சாஸ்திரங்களில் மிகவும் பிரயோகிக்கப்பட்டுள்ளது. இருட்டிற் பழுதையாகிய அசரவஸ்துவைப் பாம்பாகிய சரவஸ்துவாக மருண்டதுபோல, அஞ்ஞான அந்தகாரத்தில் ஜடமாகிய சரீரத்தையும், அசத்தாகிய

இந்த லோகத்தையும் முறையே சித்துப்பொருளாகவும், சத்தாகவும் மயங்குதலும் இவ்வித ஆரோபமென்பர் வேதாந்தநூலார்.

இனி, ஆரோபங்களுக் கெல்லாம்காரணமென்ன? இவ்விதப் பொய்த்தோற்றங்களெல்லாம் ஏன் அவ்வாறு காணப்படல் வேண்டும்? இவ்வாரோபங்கள் உற்பத்தியாவதற்குத் தத்துவ சாஸ்திர சம்பந்தமான காரணங்கள் ஏதேனுமுண்டா? இந்த விஷயத்தைக் குறித்து ஆராய்ந்து பார்ப்போம். இப்பொழுது திருஷ்டாந்தமாகச் சிறிது நாளைக்குமுன் ஒருவன் மதுரைக் கடுத்த திருப்பரங்குன்றம் என்னும் ஒரு மலையினுச்சியிலேறி நின்று கீழேயுள்ள சராசரங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். பார்த்துக்கொண்டிருந்த சிறிது நேரத்திற்கெல்லாம் கீழே விழுந்து இறந்து போனான். அவன் வேண்டுமென்று விழவில்லையென்று அவனோடு கூடப்போயிருந்தவர்களுக்கெல்லாம் வெகு நன்றாகத்தெரியும். அப்படி வேண்டுமென்று விழுவதற்குக் காரணங்களுமில்லை. அவனோடு கூடப்போயிருந்தவர்கள் அவனைத் தள்ளிவிட்டார்கள் என்று சொல்லுவதற்கோ இடமுமில்லை. ஏனெனில் அவனோடுகூடப் போயிருந்தவர்களெல்லாம் அவனுடைய பெற்றோரும், மனைவியுமே யாவார். அப்படியானால் அவன் விழுவதற்கு வேறு காரணமிருக்கவேண்டுமே அது என்ன? சிற்சில எண்ணங்கள் மனதிலே உற்பத்தியாகி நிலைபெற்று நின்று மூளையிலே வியாபகமாகி எவ்வித முயற்சியாலும் நீக்கப்படுதலில்லாமல் உடம்பைத் தன் வசப்படுத்தி நடக்கச்செய்யுங் குணத்தையுடைய

னவா யிருக்கின்றன. இவ்வித எண்ணங்களுக்கு நிலைத்த வெண்ணம் (Fixed Ideas) என்று இப்போது நாம் பெயரிடுவோமாக. மேற்கூறிய உதாரணத்தில் அந்த மனிதன் மலையினின்றும் உருண்டதற்கு இந் நிலைத்த வெண்ணமே மூலகாரணமாம். அது எப்படியென் பதை விளக்குவோம். அந்த மனிதன் மலையுச்சியி லிருந்து கீழேயுள்ளனவற்றை நோக்கிக் கொண்டிருக் கும்போதே, எங்கே விழுந்து விடுவோமோ என்ற பயத் தோடு கூடிய ஓரெண்ணமானது உற்பத்தியாகி அவன் மனதைக் கைவசப்படுத்திக் கொண்டு அவ்விடத்தி லேயே நிலையாய் நின்று அவன் அறிவை மேகஞ் சந்தி ரனை மூடுவதுபோல, மறைத்ததினாலே அவ்வறிவின் வழிச்செல்லும் உடம்பானது மேற்கூறிய எண்ணத் தின்படி நடக்கத் தொடங்கவே அவன் மலையுச்சியி னின்றும் விழுந்து இறந்துவிட்டான். இவ்வளவு வல் லமையையுடையதாய் விளங்குகின்றது அந்த நிலைத்த வெண்ணம். இன்னும் இதனுடைய வல்லமையைப் பற் பல விஷயங்களிற் காணலாம். இது மானஸ தத்துவ சாஸ்திரத்திலே (Psychology) மிகவும் உபயோகிக் கப்பட்ட ஒருவித நியமமாகும். இந் நிலைத்தவெண் ணமே சகலவிதமான பொய்தோற்றங்களுக்கும் ஆதி காரணமாம். மேலேசொல்லிய மூவகையாரோபத்து உதாரணங்களுள் ஒவ்வொன்றையும் இந்த 'நிலைத்த வெண்ணம்' என்னும் நியமத்தைக்கொண்டு விளக்கி விடலாம். ஒவ்வொருதாரணத்தையுமெடுத்து விளக்கப் புகுந்தால் அதிகமாய் வளருமாதலாற் படிப்போர்க்கு பொறுமையிருக்கமாட்டாது. ஆகையினாலே ஏதாவது

ஒன்றைமாத்திரம் விளக்குவோம். திருஷ்டாந்தமாகச் சப்தாரோபத்திற்குக் கூறிய உதாரணத்தில் அந்தப் பெண்ணினுடைய யௌவனத்தோடு கூடிய அழகில் அங்கிருந்தவர்கள் மயங்கி நின்ற அளவில் 'நன்றாகப் பாடுவாள்' என்ற ஒரு எண்ணமானது அவர்களுடைய மனதிலே ஜனித்து நிலைநிற்கவே, அவர்களென்செய் வார்கள்! அவ்வெண்ணத்தின் சக்திக்குட்பட்டு 'பேஷ்' 'அச்சா' 'பலே' என்று சொல்லிவிட்டார்கள். இதே மாதிரியாக நிலைத்தவெண்ணத்தின் அதிகாரத்தைப் பிறவற்றினும் இனிது காணலாம். இனிப் பொய்த் தோற்றங்களில் மற்றொருவிதத்தைக் குறித்துக் கூறு வோம்.

## 2. வெளித்தோற்றம்

இப்பொழுது நாம் பேசப்புகுந்தது பொய்த்தோற றங்களின் இரண்டாவது விதத்தைப்பற்றி. அதிவீர ராமபாண்டிய ரியற்றிய நைஷதத்து, நளன் தூதுப் படலத்திலே நம்மவர்களில் அனேகர் ஒரு விஷயம் படித்திருக்கக்கூடும். அதென்னவென்றால்:—நளன் தமயந்தியைச் சந்திப்பதற்கு முன்பு, தன்னிடத் திற்குத் தூதுவந்த அன்னத்தினால் நளமகாராஜனு டைய வனப்பினை வர்ணிக்கக் கேட்டுக்கொண்டிருந்த தமயந்தியானவள் அவன்மீது காதலுற்றுத் தனியாய் வருந்திக்கொண்டிருந்தாள். அங்ஙனம் அவள் நினைந்து வருந்திய சிறிது நேரத்திற்கெல்லாம், அவளுக்குத் தானிருந்தவிடத்தில் நளன் தனக்கெதிர்ப்பட்டான் போலத் தோன்றிற்று. தோன்றினவுடனே, "அம்ம! பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல, நாம் விரும்பிய

தலைவன் நம் அந்தப்புரத்திற்கே யெழுந்தருளி விட்டான்'' என்று தனக்குள்ளே அடங்கா மகிழ்ச்சியடைந்து, தன்னுடைய முத்துமாலையைக் கழற்றி அவனுடைய கழுத்திலே யணிந்தாள். உடனே அது கீழே விழுவது தெரிந்து, தனக்கெதிரே தோன்றிய நளன் பொய் நளனெனத் தெளிந்து வெட்கமுற்றாள். ஆகவே, நளன் தன்னிடத்திற்குத் தூதுவருமுன், தமயந்தி அவனைக் கண்டதும் மாலையிட்டதும் பொய்த் தோற்றத்தினால் என்பதற்கு ஆக்ஷேபணையில்லை.

இன்னும் ஸ்ரீமத் ராமாயண ஆரண்யகாண்டத்திலே மாரீசன் வதைப்படலத்திலே கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் இவ்விரண்டாவது விதமான பொய்த்தோற்றத்தின் சக்தியைச் சம்பாஷணரூபமாக இனிது காட்டியிருக்கின்றனர். அது எப்படியெனில்:- சூர்ப்பணகையால் கூந்தல் மேகத்தையொக்கு மென்றும், அம் மேகத்தினின்றும் விழும் மழைத்தாரைகள் கூந்தலின் ரோமத்திற்குச் சமானம் என்றும், அடிகள் பஞ்சின் மென்மையை யுடையனவென்றும், விரல்கள் பவளமாகுமென்றும், அநங்கன் உடலிழந்தது இவளைக்கண்டு காமுற்று ஆசை பூர்த்தியாகாமல் இறந்ததினாலென்றும்,

"தோளையே சொல்லு கேனோ சுடர்முகத் துலவு கின்ற
*வாளையே சொல்லு கேனோ†வல்லவை வழுத்து கேனோ
மீளவுந் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்பலாற்றேன்
நாளையே‡காண்டி யன்றே நானுனக் குரைப்பதென்னோ?"

என்றும் பலவாறாகச் சீதாபிராட்டியாருடைய வடிவத்

*வாள் - கண். †வல் - ஸ்தனங்கள். ‡காண்டி - காண்பாய்.

தின் அழகை வர்ணிக்கக் கேள்வியுற்ற இராவணன் "சிற்றிடைச் சீதை யென்பாள் வடிவமுஞ் சிந்தைதானும், உற்றிரண் டொன்றாய் நின்று" காமவிகாரத்தால் வருந்தி ஒரு பக்கத்திலே யிருந்து அயர்வாறையினன். இவனிப்படியிருக்க, சூர்ப்பணகையோ ஸ்ரீராமபிரானுடைய அழகை நினைந்து நினைந்து உருகி மற்றொரு பக்கமிருந்து வாடுகின்றாள். சீதையின் திருமேனியே தியானமாயிருந்த இராவணன் தனக்கு முன்னர்க் காணப்பட்ட பெண்ணுருவத்தை நோக்கிச் சூர்ப்பணகை நமக்குப் பலவாறாக வர்ணித்துச்சொல்லிய பெண் இவளேயாகுமென்று தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு தன் தங்கையாகிய சூர்ப்பணகையை வரவழைத்துப்,

"போய்நின்ற நெஞ்சிற் கொடியாள்
    புகுந்தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வாளவன் நேருற
    நோக்கு நங்காய்,
மைந்நின்ற வாட்கண் மயினின்றென
    வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாங்கொ* லியம்பிய
    சீதை யென்றான்." (ரு)

ஸ்ரீ ராமபிரான் திருவுருவத்தையே நினைத்துக் கொண்டிருந்த சூர்ப்பணகையானவள், தனக்கெதிரே தோன்றிய இராமனுருவத்தை நோக்கிச்,

"செந்தாமரைக் கண்ணொடுஞ் செங்கனி வாயினோடுஞ் சந்தார் தடந்தோளொடுந் தாழ்தடக் கைகளோடும்

---

*இயம்பிய - சொன்ன

†அந்தா ரகலத்தொடும் அஞ்சனக் குன்றமென்ன
வந்தானிவனாகு மவ்வல்வில் இராமனென்றாள்." (சு)

இம்மாதிரியாக, இராவணன் சீதையையும் சூர்ப்பணகை இராமனையும் தரிசித்தது பொய்த்தோற்றங்களே யென்பது சொல்லாமலே விளங்கும்.

இனி இந்தவிதமான பொய்த்தோற்றங்களுக்கெல்லாம் வெளித்தோற்றம் என்னும் பெயர் கொடுப்போம். வெளித்தோற்ற மென்றா லென்ன? வெளித்தோற்ற மென்பது ஓரிடத்தில் ஒன்றில்லாதிருப்ப அவ்விடத்தில் அது உளதென அறியும் பொய்யுணர்ச்சியாம். இது ஆங்கில பாஷையில் 'ஹல்யூஸினேஷன்ஸ்' (Hallucinations) என்று சொல்லப்படும். ஆரோபத்திற்கும் இதற்கும் வித்தியாசம் இதைப் படிக்கும்போதே பெரும் பாலார்க்குத் தெரிந்திருக்கலாம். ஆயினும் சிறிது சொல்லுதல் தவறாகாது. ஆரோபமுண்டாதற்கு ஏதேனும் புறத்திலே சாதனமிருக்க வேண்டும். இன்றேல் ஆரோபம் நிகழாது. வெளித்தோற்றத்திற்கோ அவ்வகையான புறச்சாதனமொன்றும் வேண்டுவதின்று. இந்த வெளித்தோற்றமும் ஆரோபத்தைப் போல மூன்று பிரிவுகளையுடையதாயினும் மிகவும் முக்கியமாயுள்ளது ஒன்றே. அது புலன் வெளித்தோற்றம் (Hallucinations of sense perceptions) என்னப்படும். புலன் ஐந்தாகையினாலே புலன்வெளித்தோற்றமும் ஐந்தாம்.

கண்ணுக்குப் புலமாகும் வெளித்தோற்றமானது உருவெளித்தோற்றம் என்று பெயர்பெறும். மேலே

---

†அம்-அழகிய, தார்-மாலையைத் தரித்த, அகலம்-மார்பு.

கூறியுள்ள உதாரணங்களிலே, தமயந்தி நளனைத் தன்னிடத்திற்கு வருமுன் கண்டதும், இராவணன் சீதையையும், சூர்ப்பணகை இராமனையுங் கண்டதும் உருவெளித் தோற்றங்கள்தான். இவ்வுருவெளித்தோற்றமானது நம்முடைய தமிழ்ப்பாஷாப் பிரபந்தங்கள் ஒவ்வொன்றிலும் அநேகமாய்க் காணப்படும். உருவெளித் தோற்றம் உரையாத நூலொருநூலா? என்று கேட்கும் தமிழ் வித்துவான்களும் இருக்கின்றார்கள். இப்பொழுது சாதாரண ஜனங்களுக்குள் சொல்லிக் கொள்ளப்படும் 'மோகினிப் பிசாசு' என்பதும் இவ்வுருவெளித் தோற்றமேயாம்.

சேவிக்கு விஷயப்படும் வெளித்தோற்றத்தை ஓசைவெளித் தோற்றம் என்போம். இவ்வோசை வெளித்தோற்றங்களுக்குத் திருஷ்டாந்தங்கள் ஏராளமாயுண்டு. ஒருநாள் இராத்திரி மதுரை ஜில்லாவில் கஸ்பா மதுரையில் இரண்டு மனிதர்கள், விடியற்காலம் $4\frac{1}{2}$-மணிக்கு மதுரையைவிட்டுப் புறப்படும் 'ரயில்' ஏறி வேறூர் ஊருக்குப் போகும்பொருட்டு 'ஸ்டேஷ'னுக்குச் சமீபத்திலுள்ள தெருக்களிலொன்றாகிய தெப்பக்குளத்தெருவில் ஒருவர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார்கள். வெகுநேரம் வரையில் தூக்கம் வராமையினாலே ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இப்படிப் பேசிக்கொண்டிருந்த சிறிது நேரத்துக்கெல்லாம் ஸ்டேஷனிலே மணியடித்தது போல ஒருவர் காதில்பட்டது. உடனே அவர் மற்றவரைப்பார்த்து "இப்பொழுது 'ரயில்' மணி அடித்தானல்லவா?" என்று கேட்டார். அதற்கு அவர்

"ஆமாம், என் காதிலும் மணிச்சத்தம் பட்டதுபோலி ருந்தது" என்றார். உடனே இருவரும்தங்கள் மூட் டைகளைத் தூக்கிக்கொண்டு 'ஸ்டேஷ'னுக்குப் போய்ப் பார்த்தால் எல்லாருந் தூங்குகிறார்கள். ஒரு சிறு விளக்குமாத்திரம் அவ்விடத்திலிருந்தது. அவ்விளக்கு வெளிச்சத்திற் கடிகாரத்தைப்பார்த்தால் மணி ஒன்று ஆயிருந்தது. ஆனால் 'ரயிலி'ல் மணி அடிப்பது நாலு மணிக்குத் தான். ஆகவே, அவர்கள் ஒரு மணிக்கு அந்த 'ரயில்மணி'ச் சத்தங்கேட்டது பொய்த் தோற்ற மாயிற்று. பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணாக்கர் களுக்கு மணியடிப்பதற்குமுன் மணியடித்ததாகக் காதில் படுவதும் ஓசைவெளித்தோற்றந்தான்.

இனி மூக்கிற் புலப்படும் வெளித்தோற்றத்தை நாற்ற வெளித்தோற்றம் என்று அழைக்கலாம். இதற்கு உதாரணமாக எமது ஊரில் நடந்த விஷயமொன் றைக் கூறுவோம். ஒருநாட்காலையில் பத்துமணிக்கு ஒருவர் தாம் கச்சேரிக்குப் போகும்போது தமது மனை வியானவள் "நீங்கள் கச்சேரியிலிருந்து வரும்போது பூக்கடைக்குப்போய் எனக்கு நல்ல செந்தாழம்பூவாய்ப் பார்த்து இரண்டு வாங்கிக்கொண்டு வாருங்கள்" என்று வேண்டிய வேண்டுகோளுக்கிணங்கி "ஆகட்டும் வாங்கி வருகிறேன்" என்றார். பிறகு கச்சேரியினின்றும்வரும் போது மற்றொரு கனவானோடு வேறு விஷயமாகப் போய்விட்டார். அவர் அவ்விஷயத்தை முடித்துக் கொண்டு வீடுவர இராத்திரி எட்டுமணியாய்விட்டது. அவர் வீட்டுக்குவரும் வழியெல்லாம் "ஐயோ! தாழம்பூ வாங்க மறந்துபோய் எங்கேயோ சுற்றிவிட்டு இப்படி

வெறுங்கையாய் வீட்டுக்குப் போகிறோமே? என்ன சொல்லுவாளோ? தெரியவில்லை'' என்று நினைத்துக் கொண்டுவந்தார். வீட்டுக்குச் சமீபமாக வரவும்தாழம் பூவாசனை 'கமகம'வென்று வீசினதுபோல் அவருக் குத் தோன்றியபடியால் வெகு தைரியமாய் உள்ளே சென்று தமது மனைவியைப் பார்த்துத் "தாழம்பூக் காரனை வழியிற்கண்டு நம்வீட்டு அடையாளஞ்சொல்லி இங்கே யனுப்பினேனே! அவன் வந்தானா? தாழம்பூ வாங்கினாயா?'' என்று தாம் மறந்து போனதைச் சொல்லாமல் கேட்டார். இவர் வீட்டிற்குள்ளே நுழை யும்போது தாழம்பூவே நினைவாயிருந்த அவர் மனைவிக் கும் இவர் நுழைந்த மாத்திரையில் தாழம்பூ வாசனை யடிப்பதாகத் தோன்றினதினாலே தன்னுடைய கணவர் தாழம்பூவாங்கி வந்துவிட்டு இப்படிப் பேசுகிறாரென் பது அவளுடைய எண்ணம். ஆகையால் அவர்கேட்ட கேள்விக்கு அவர் மனைவி "தாழம்பூக்காரன் வரவு மில்லை நான் வாங்கவுமில்லை'' என்று வெகு சாவதான மாய் பதில் சொன்னாள். அப்படி அவள் சொல்லியது உண்மையாயிருந்தும் அவர் மனம் சமாதானப்படா மல் தம்முடைய மனைவி தாழம்பூ வாங்கிவைத்து விட்டு இல்லையென்று சொல்லுகிறதாக நினைத்துக் கொண்டு "சரி அதெல்லாமிருக்கட்டும். இந்த அறைக் குள் இருக்கிற தாழம்பூவை யெடு 'நல்ல தாழம்பூவா?' என்று பார்ப்போம்'' என்றுகேட்டார். அதற்கவள் "மடியிலே பூவைத்துக்கொண்டு ஏன் இந்த மாதிரியாக விளையாடுகிறீர்கள்? நாழிகையாய்விட்ட போதிலும் பாதகமில்லை கொடுங்கள்'' என்று கையை நீட்டினாள்.

ஐயர் இவள் பூவை வாங்கி வைத்துக்கொண்டு நாம் வாங்கிவர மறந்துவிட்டதற்காகக் கேலி பண்ணுகிறாள் என்று எண்ணிக்கொண்டு எந்த அறைக்குள் பூ இருக்கிறதாக நினைத்தாரோ அந்த அறையில் போய்ப்பார்த்தார். அங்கு ஒன்றுமில்லையென்று அவர் திரும்பி வருமுன் அவர் மனைவி அவர் வைத்துவிட்டுப்போன வேஷ்டிகளில் தேடிப்பார்த்துப் பூ இல்லாமையைக் குறித்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். அவ்வறையிலிருந்து வந்தவர் வீடு முழுவதுந் தேடிப் பார்த்தும் பூ அகப்படாமையால் ஒரு வேளை அயல்வீடுகளில் வாங்கியிருக்கக் கூடுமென்று விசாரித்தால் அவ் விடங்களிலும் இல்லையென்று தெரிந்தது. நம் ஐயர் மானஸ தத்துவசாஸ்திரங் கற்றுவல்லவராதலின் இதுவரையிலும் வீசிய வாசனை பொய்த்தோற்றமா?" என்று பிரமித்து வியந்தனர்.

கள் குடித்துக் களிக்கும் வழக்கமுள்ள ஒருவன் ஒருநாள் குடிப்பதற்குக் கள் அகப்படாமற்போனபோதிலும், கள் குடிக்க வேண்டுமென்னும் ஆசையோடு கூடிய எண்ணத்தின் மேலீட்டினால் தான் கள்ளருந்தியதாக நினைத்துக் கூத்தாடுதலை அநேகம் பேர் கவனித்திருக்கலாம். இது சுவைவெளித்தோற்றமாம். இது வாயிற்கு விஷயமாகுதலின் இதற்கு இப்பெயர் இடப்பட்டது. உடம்பிற்குப் புலமாகும் வெளித்தோற்றத்தை ஊற்றுவெளித்தோற்றம் என்போம். ஊறு என்பது ஸ்பரிசவுணர்ச்சி. ஒருவன் ஒருத்தியோடு கூட வேண்டுமென்னு மெண்ணத்தோடிருந்து சிறிது நேரத்திற்கெல்லாம் தான் அவளோடு கூடியதாகத் தோன்றி

னதைக்கண்டு ஆநந்தித்தல் இவ்வூற்றுவெளித்தோற்றத்திற்கு உதாரணமாம்.

இனி வேதாந்த சித்தாந்த சம்பந்தமாகிய (Science of Intellectual Intuition) யோக தத்துவ சாஸ்திரங்களிலே சோபானமுறையில்(படிப்படியாய்க்) கூறப்படும் உண்மைகளின் ஈற்றிலுள்ள அவனே தானாய் நின்று சிந்திக்கும் சிந்தனையின் பயனாகிய ஏகனாகிச் சிவசாயுச்சியம் அடைந்து ஆநந்தித்தலை ஆங்கில பாஷையிலுள்ள தத்துவசாஸ்திரங்களையெல்லாம் கற்றேப்பமிட்ட 'ஹக்ஸ்லி' (Huxley) என்னும் சாஸ்திரி வெளித்தோற்றமென்றுரைப்பர்.

இனி இவ்விதமான வெளித்தோற்றங்களுக்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராயப்புகுந்தால் முன் அத்தியாயத்தில் ஆரோபத்திற்குக் காரணமாகக்கூறிய நிலைத்தவெண்ணமே இதற்கும் காரணமாம் என்று வெளிப்படும். அதெப்படி என்பதை உதாரணமுகத்தால் விளக்குவோம். தமயந்தி நளனைக்கண்ட உதாரணத்தில், தமயந்தி நளனுடைய ரூபத்தையே சதா நினைத்துக்கொண்டிருந்ததினாலே இவ்வோரெண்ணமே அவளுடைய மூளையில் வியாபகமாகி அவள் அறிவினை மூடி அவளுடம்பையும் மனதையுங் கைவசப்படுத்திக் கொண்டது. ஆகையினாலே அவ்வெண்ணத்தின் வழிச் செல்லும் அவளுடைய மனமே தன்னிடத்துள்ள நளனுருவை வெளிப்படுத்திக் கண்ணிற்குக் காட்டிற்று. இவ்விதமாகவே மற்றைய உதாரணங்களையும் விளக்கிக் கொள்க.

## III. ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள்

இப்பொழுது நாம் எழுதப்புகுந்த விஷயமானது உயிருள்ள ஜந்துக்களினுடைய பலவிதமான வர்ணங்களாகும். அதாவது, இந்த பூலோகத்திலே நாம் பார்க்கிற ஒவ்வொரு பிராணியும் ஏதாவது ஒருவிதமான நிறத்தோடுகூடி விளங்குகின்றது எந்த மாதிரியாக பிராணிகள் யாதேனும் ஒரு வர்ணத்தோடுகூடி விளங்குதல் ஏதாவது ஒரு பிரயோசனத்தை உத்தேசித்தா அல்லது ஒரு பயனுமில்லாமலா வென்பதுவே நாம் உபந்நியசிக்கத் தொடங்கின விஷயமாகின்றது.

ஆகவே இந்த விஷயமானது, 1. அழிவகற்றுவர்ணம், 2. எச்சரிக்கைவர்ணம், 3. பாலறிவர்ணம், 4. சாதாரணவர்ணம் என நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும். இவற்றில் ஒவ்வொன்றையும்பற்றி வரிசைக்கிரமந் தப்பாமல் எழுதுவதற்கு முன்னரே பொதுப்படச் சில தொடர்மொழிகளை இவ்விஷயத்திற்கு முக்கியமாயிருத்தலின் விளக்க வேண்டியது நிரம்ப ஆவசியகமாகிறது. அவை தற்காப்புநியமம், இயற்கைப்பிரிநிலை, தகுந்தவை தங்கிநிற்றல் என்பனவாம். தற்காப்புநியமமாவது இவ்வுலகத்தில் ஒவ்வொரு பிராணியும் தன்னுடைய பிராணனுக்கு அழிவு வராமல், காத்துக்கொள்ளுவதற்காக உபாயந் தேடுந் தன்மையை இயற்கையறிவாக (Instinct) உடையது என்றதேயாம். இயற்கைப் பிரிநிலையும். தகுந்தவை தங்கிநிற்றலும் ஓரே தாற்பரியத்தைத்தருந் தொடர்மொழிகளாகும். இம்மண்ணுலகிலே சுபாவ குணத்திற்கேற்க இன்னின்ன வஸ்துக்கள் இருக்கத்தகுதி

யானவை யென்று கருதப்படுவனவெல்லாம், பிராண தாரணப் பிரயத்தினத்தில் (Struggle for existence), ஒழிந்துபோகாமல், தாமே தங்கிநிற்கும். இந்த நியமங்களெல்லாம் சகலப் பிராணிகளுக்கும் பொருந்தும். இவற்றினுண்மையை எங்கும் பரக்கக்காணலாம். இவைகட்கு முறையே பிரயோகிக்கப்பட்ட ஆங்கிலேயப் பதங்களைக்கூறினால் எளிதில் விளங்கலாம். தற்காப்புநியமம் (Law ef Self Preservation) என்றும், இயற்கைப்பிரிநிலை (Natural selections) என்றும், தகுந்தவை தங்கிநிற்றல் (Survival of the fittest) என்றும் பெயர் பெறும்.

இதுகிடக்க-மேலேசொன்ன நான்கு பிரிவுகளையும் முறை தவறாமல் விவரிக்க ஆரம்பிப்போம்.

### 1. அழிவகற்று வர்ணம்

போதுப்பட எல்லாவர்ணங்களும், இயற்கைப் பிரிநிலை அல்லது தகுந்தவை தங்கிநிற்றல் என்ற சுபாவ நியமத்திற்கு இணங்கியே உற்பத்தியாகின்றன வென்பது, தற்காலத்துச் சுபாவ தத்துவசாஸ்திரிகளின் கொள்கை. சில பிராணிகளுக்கு அழிவு வாராமல் தங்கள் தங்கள் நிறங்களே காப்பாற்றுகையினாலே இவ்வித வர்ணத்திற்கு அப்பெயரிடப்பட்டது. இது ஆங்கிலத்தில் 'Protective colours' என்று சொல்லப்படும். மேலே சொல்லிய நியாயத்திற்குச் சில உதாரணங்களை யெடுத்துப் பார்ப்போம். பாயுந் தொழிலையுடைய புலிகளுக்குக் கண்கவரும் வர்ணக் கோடுகளிருப்பதினாலே என்ன பயனிருக்கிறது

என்று சற்று ஆலோசிப்போமானால், இந்த மிருக ஜாதிகளுக்கு மஞ்சட் கீற்றுக்களும், கருநிறக்கீற்றுக்களும் தன்னிறத்தோடு கலந்திருக்கிறதினாலே மூங்கிற் புதர் அல்லது நீண்ட கோரைப் புற்களுக்கு மத்தியில் அந்தப் புலியானது ஒளிந்துகொண்டிருக்கும்போது, அது அங்கு ஒளித்திருக்கிறதாகக்கொஞ்சங்கூடத் தெரியாது. அப்படித் தெரியாததற்குக் காரணம் என்னவென்றால் மூங்கில், கோரை இவற்றின் நிறத்திற்கும், புலிநிறத்திற்கும் வித்தியாசம் பார்த்தவுடனே மனதிற்படாமையேயாம்; இவ்வாறு இயற்கைப் பிரிநிலையென்னும் நியமத்தின்படி அப்புலியானது இவ்வர்ணத்தைப் பெற்றிருக்கிறதினாலே, அதற்கு இரையாகத்தக்க மான், பசுமுதலாகிய பிராணிகளெல்லாம், புலியிருக்கிறது தெரியாமல், அச்சமின்றி உலாவித் திரிகையில், இது அவற்றின் மேற்பாய்ந்து கொன்று உணவெடுத்துக்கொள்ளுகிறது. இதைவிட்டு வேறே ஏதாவது நன்றாயெடுத்துக் காட்டக்கூடிய ஒரு வர்ணத்தை அது பொருந்தியிருந்தால் அதன் இரைகளெல்லாம் பயந்து ஓடிப்போய்விடும். புலியுமிரையின்றி இறந்துவிடும் இதுபோலவே மான்களும் புலிமுதலியவற்றின் கையில் அகப்படாதிருக்குமாறு தன்னைச் சூழ்ந்துள்ள வஸ்துக்களின் நிறத்தையடைந்து ஏகதேசந் தப்பித்திரிகின்றன. மலைகளிலும், குகையிலும், வனங்களிலும் சஞ்சரிக்கும் பிராணிகளெல்லாம் இந்தப் பிரகாரம் சுற்றியிருப்பனவற்றின் நிறத்தையடைந்திருக்கின்றன. பாலைவனங்களிலே திரிகின்ற தீக்கோழிகளின் (Ostriches) இறகுகளெல்

லாம் மணலின் நிறமாகவே யிருக்கிறதினாலேதான் அவைகள் மனிதர்களாலும், வேறு பிராணிகளாலும் உண்டாகுஞ் சேதத்திற்கு உயிர்தப்பி நீடித்திருக்கின்றன. பக்கப்பொருள்களின் நிறங்களை ஆங்கிலத்தில் "Colours of the environment" என்பார்கள். இந்தமாதிரியாக அநேக பிராணிகளுக்குத் தம்மைக் காத்துக்கொள்ளும் இயற்கையறிவினாலே, பக்கப் பொருள்களின் நிறங்களாகிய அழிவகற்றத்தகுந்தவை இயற்கைப் பிரிநிலையாகத்தங்கி நிற்கின்றன. வர்ணங் களிற் பெரும்பான்மையழிவ கற்றலுக்கே உபயோகப் படுகின்றன.

## 2. எச்சரிக்கை வர்ணம்

இப்பொழுது நாம் வழக்கத்தில் "குளவிகள்" என்று சொல்லுகிற ஓர்விதத் தேனீக்கள் இடையில் சிவந்த மஞ்சள் கீற்றுள்ளனவா யிருக்கின்றன. இவ் விதமஞ்சட் கீற்றுக்கள் விசேஷமாய் விஷமுள்ள தேனீக்களிடத்தேதான் இருத்தலால், பார்ப்பவர் களுக்கு இவைகளெல்லாம் விஷஜந்துக்களென்று அறி விக்குங் குறியாக இருந்து அவர்களை எச்சரித்தலால், எச்சரிக்கைவர்ணமென்று பெயர் கூறப்பட்டது. இனி நாகசர்ப்பங்களினுடைய படத்திலே காணப்படும் புள்ளிகளும் அவை விஷமுள்ள ஜந்துக்களெனத் தெரி விப்பதற்கேற்பட்ட எச்சரிக்கை வர்ணக் குறிகளென்றே டார்வின் (Darwin), வாலேஸ் (Wallace) முதலிய பண்டிதர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். இப்பொழுது நமக்குள்ளே சிவப்புக்கொடியெடுத்தால் ஏதோ ஓரபா யம் வரப்போகிறதென்று எதிர்பார்க்கிறோம். அதைப்

போலச் சில பிராணிகளுக்குள்ளுமிது காணப்படுகிறது. உதாரணமாக, முயல்கள் பயந்து ஓடும்போது தமது வெண்மை நிறமான வாலினது நுனியை உயர்த்துகின்றன. இந்த வெண்ணிறக் கொடியைக்கண்ட மற்றைப் பிராணிகள் ஏதோ அபாயம் நெருங்கியதென்று அறிந்துகொண்டு தப்பிக்கொள்ளுமாறு மறைந்துவிடும். இது ஆங்கிலத்தில் (Warning colours) என்று பெயர் பெறும்.

### 3. பாலறி வர்ணம்

அநேக பட்சிக்கூட்டங்களில், ஆணிது பெண்ணிதுவென்று அறிவது அதிக துர்லபம். இப்படி துர்லபமா யிருக்கப்பட்டவற்றுட் பெரும்பான்மை வர்ணபேதங்களா லறியப்படுகின்றன. சிறுபான்மை, உதாரணமாகக் கருநிறக்காக்கை, மீன்கொத்தி, மரங்கொத்தி முதலியனவற்றிற் செய்குறியாலன்றி வேறெவ்விதத்தினும் ஆணிது பெண்ணிதுவென நிர்ணயிப்பது மகாகஷ்டம். ஆயினும் சேவலும், பேடும் வர்ணபேதம் பொருந்தியிருக்கின்றன. சாதாரணமாகச் சிட்டுக்குருவிகளிற் பெண்குருவிகள் மங்கல் நிறமாயிருப்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயம். பச்சைக்கிளிகளிலே ஆண்கிளியானது அதிக அழகும், கம்பீரமும், உடையதாகிக் கழுத்திலே ஆரம்போன்ற பசிய மயிற் கற்றையைப் பொருந்தியிருக்கின்றது. மயில் வர்ணங்களிலோ பெண்மயில்கள் நீண்டதோகைகளும், காந்தியும் வனப்புமில்லா திருக்கின்றன. குக்குடங்களிலோ, சேவல், அழகும் பிரகாசமுமுடையதாயும், கோழிகள் மந்தவர்ணத்தோடு கூடியனவாயும் விளங்குகின்றன.

இந்த விதமாக வித்தியாசமிருப்பதற்குக் காரணம் பேடுகள் அழகிய ஆண்களையடையும் பொருட்டு இயற்கைப் பிரிவினையாக ஏற்பட்டிருப்பதேயாம் என்று டார்வின் துரை சொல்லுகின்றனர். இது சரியான காரணமல்லவென்று மறுத்து வாலேஸ் துரை 'ஆண்பட்சியதிககாந்தியும் அழகுமுடைய தாயிருத்தல், ஆணின் உயர்ந்த தத்துவத்தினாலும் சுறுசுறுப்பினாலுமே யுண்டாகியதாய்த் தோன்றுகின்றது' என்று எழுதுகிறார். இது பாலறிவர்ணம் (Sexual colours) ஆம்.

4. சாதாரண வர்ணம்

வர்ணத்தால் யாதொரு பயனுமில்லாமையால் இப்பெயரிடப்பட்டது. இதை ஆங்கிலேய பாஷையில் 'Normal colours' என்று கூறுகிறார்கள். வெகு நேர்த்தியோடு கூடிய பற்பல வர்ணக்கோடுகளாலும் புள்ளிகளாலும் மீன்களிற் சில அலங்கரிக்கப்பட்டிருத்தலும், சில வெட்டுக்கிளிகள் பச்சைக்கோட்டினால் சித்திரிக்கப்பட்டிருத்தலும், வரிப்புலிபோற் கோவேறு கழுதைகளும் கோடுகளைப் பெற்றிருத்தலும், ஒரு பயனும் கருதியல்ல. ஆகையினாலே இவற்றைப் பயனில் வர்ணம் என்றும் சொல்லலாம்.

இனி, மேலே சொன்ன நான்கு பிரிவுகளினின்றும் ஏகதேசம் வேறுப்பட்டனவற்றை யிரண்டுபிரிவாக வகுக்கலாம்.

1. அறிகுறிவர்ணம் (colour as means of recognition) அதாவது வர்ணவித்தியாசங்களினாலே பிராணிகள் தங்கள் தங்களினங்களையறிந்து கொள்ளுவதாம்.

2. போலிவர்ணம் (Mimicry) இது அழிவகற்று வர்ணத்தின் குணத்தையும், எச்சரிக்கை வர்ணத்தின் குணத்தையும் பெற்றிருத்தலினாலே வேறு பிரித்துக் கூறப்பட்டது. உதாரணமாகச் சில விஷமில்லாத பாம்புகள், விஷமுள்ள நாகசர்ப்பங்கள் எச்சரிக்கை வர்ண முடையதுபோலப் போலிவர்ண முடையனவாயிருக்கின்றன. இப்போலிவர்ணத்தின் பயனென்னவென்றால், இவற்றின் விரோதிகள் இவற்றையும் நாகசர்ப்பமென்று பயந்து போய்விடுமாதலின் அழிவையுமகற்றுகின்றது. இனிப்பட்டான்களில்(Heliconider) 'ஹேலிகோணிடார்' என்றொரு பிரிவுண்டு. இது உணவுக்கு, மிகவும் அருவருக்கத்தக்க ருசியுள்ள வேறு சிலபட்டான்கள் இந்த 'ஹேலிகோணிடார்' என்பனவற்றைப்போலவே போலிவர்ணம் பெற்றிருத்தலினாலே காப்பாற்றப்படுகின்றன. பற்பலகாரணச் செறிவினால் சில ஆசிரியர்கள் இப்போலிவர்ணத்தை எச்சரிக்கை வர்ணத்தி லடக்குகின்றார்கள்.

மேலேகூறிய பிரிவுகளிலெல்லாவற்றிலும், அழிவகற்றும் வர்ணமே மிகப் பிரதானமானது. இதுவும் எச்சரிக்கை வர்ணமுமே ஏராளமான அத்தாட்சிகளையுடையனவா யிருக்கின்றன. ஆகவே அநேகமாய் வர்ணங்களெல்லாம் ஏதாவது ஒரு பிரயோசனத்தையுத்தேசித்தே யுற்பத்தியாயிருக்கின்றனவென்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை என்பது சாங்கோபாங்கமாய் விளங்கும்.

இனி யிதுகிடக்க—சில ஜாதியார்களுக்குள் தங்கத்தின் நிறமுடையவர்கள் அதிக அழகுடையவர்க

ளென்றும், கரியநிற முடையவர்கள் திருடர்களென்றும் மிலேச்சர்களென்றும் எண்ணங்களுண்டு. இவையெல்லாம் நாகரீகாபிவர்த்தி அதிகரிக்க அதிகரிக்க அசங்கதமென்றே காணப்படுகின்றன. மேற்கூறிய அழிவகற்றல் முதலிய பிரயோசனம் பகுத்தறிவுள்ள மனிதர்களுக்குள் கிடையாதென்பதே எமது துணிவு. சில பிராணிகளுக்கு அவற்றினது இயற்கையறிவினு லுண்டாகித் தங்கி நின்ற வர்ணங்களின் பயனை மனிதர்களுக்கு அவர்களுடைய பகுத்தறிவே தந்துவிடுகின்றது. ஆதலினது தகுந்த வற்றுட் சேராது போனமையாலே தங்கி நில்லாது ஒழிந்தது.

ஆகவே ஜீவராசிகளின் நாநாவிதவர்ணங்களினுலே நமக்கும்நாமொழிந்த பிராணிகட்கும் அதிக பிரயோஜனமிருக்கிறதெனக் காட்டப்பட்டது.

---

## IV. மனவமைதி

மனவமைதியாவது தாக்கருந் துன்பங்கள் தலைவந்தக் காலும் அவற்றைக்கண்டு உள்ளமுடையாது அவை போலியாமென நீக்கி நிற்கும் உரனுடைமையாம். இதனை கலக்கமில் சிந்தை யென்பாருமுளர். இயற்கையால் நேருந்துன்பங்கள்கண்டு மக்கள் மனம் வருந்துவாரெனினும், அன்னுர் தாம் சினஞ் செலுத்துதற்குரியதோர் இடமுமின்மையால் தாமே அடங்கி அமைவர். மற்றுச் செயற்கையால் நேரும்துன்பங்களால் உள்ளநிலை வேறுபடாதிருத்தலே மேதக்கதாம். செயற்கையால் நேரும்துன்பங்களாவன. பிறர் தமது மொழி

செயல்களான் அறிந்தாதல் அறியாமலாதல் செய்வன வாம். அன்னார் அறியாது செய்தனராயின் மனவமைதி குலைந்து வெகுள்வதற்கு நியாயமில்லை. எனவே பிறர் அறிந்து வேண்டுமென்று துன்பஞ்செய்துழியே பலர்க்கும் மனவமைதி குன்றுதலியல்பு. அன்னாரை யொறுக்க அறக்கடவுளும் அரசனுமுளர்.

“தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தான்—உம்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர் கொலென்று
பரிவதூ உஞ் சான்றோர் கடன்.” (எ)

என்று வேளான்வேதம் முழங்குதலை யாவரே கேட்டிலாதார்? நாவடக்கமின்றி வாய்திறந்து வழங்குஞ் சொல் பிறர்க்குத்துன்பஞ் செய்யுமென்பதை யுணர்ந்தும் உணராப்பேதைகள் எத்துணையோர்! இத்தகைய பேதைகளாயினாது புன்சொற்களைக் கேட்குமாறு நேரிடினும் அவற்றூர் சிந்தைகலங்கலின்றி வாளாதிருத்தலே நலம். அவ்வாறன்றி அவர் வாயையடக்குவேமெனப் புகுவார் செயல் வீணுகு மென்பது திண்ணம். இதனைத்

“தெரியா தவர்தந் திறனில் சொற்கேட்டாற்
பரியாதார் போல விருக்க—பிரிவில்லா
வம்பலர் வாயை யவிப்பான் புகுவாரே
லம்பலந் தாழ்க் கூட்டுவார்.” (அ)

என்று பழமொழிப்பாடல் வலியுறுத்துமாறு காண்க. தம்மினும் மிக்கார் தமக்குத்துன்பஞ் செய்தாராயினும் அவர் மாட்டுச் சினஞ் செய்யாதமைதல் அறிவுடைமையாம்; தம்மையொத்தார் அங்ஙனஞ் செய்யின் அவரை

வெகுளாதமைத்தல் நலமுடைத்தாம்; தம்மினும் இழிந்தார் அவ்வாறு செய்துழிச் சினங்காத்தமைதல் சிறப்புடைத்தாம். ஆகவே இம்மூவகையிடத்தும் மனவமைதியுடையராதலே வேண்டற்பாலதாம்.

மனம் இயற்கையாகவே யெப்பொழுதுஞ் சஞ்சலப்படுந் தன்மையது. அதனையடக்கியாளுதல் ஒவ்வொருவருக்கும் உற்றகடப்பாடாம். தீயோர் மல்கிய இவ்வுலகத் தியல்புகளுளொன்று தம்மினுமுயர்ந்தோரைத் தமக்கிணையாவாரென மதித்தொழுகுதலாம். அதனாற் பெரியோர்க்கு வருவதோர் இழிவென்னை? ஒன்றுமின் றென்பது தேற்றம். மற்று அதுபுன்காகம் அன்னநடை நடக்கப்புகுவது போலும்! இது பற்றியன்றே,

"நேறியா லுணராது நீர்மையு மின்றிச்
சிறியா ரெளியரா லென்று பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று." (௬)

என்று முன்றுறையரையனார் கூறியது மென்க.

என்னே மனவமைதியினியல்பு! அதுவே எல்லா நற்குணங்களும் முதற் பெருங்கருவி; அதுவே பெரியோருக்கு உற்றதோர் வல்லரண்; அதுவே இன்பப்பேரூற்று; அதுவே அன்பினுக்காணிவேர்; அதுவே அருளிற்கு வித்து; அதுவே மெய்த்தவம்; அதுவே தவப்பயன்; அதுவே நல்லறன்; அதுவே தலைப்படுவிரதம்; அதுவே சிந்தைக்கணிகலன்; அதுவே நிலமகள் பெருநலன்;; அதுவே யுளத்திற்கு நந்தா விளக்கு; அதுவே

புகமொளி வழங்கும் மதியம்; அதுவே தீங்கிருள் நீக்கும் பரிதி!

இத்துணைச்சிறப்புக்களுமுடையதாய் விளங்கா நிற்கும் அம் மனவமைதிப் பேறுடையாரே பாக்கியவான்கள்; அவரே நோயற்ற வாழ்க்கையர்; அவரே பேரறிவாளர்; அவரே நல்லொழுக்கமுடையவர்; ஆதலின் மனவமைதியுடைமையே நமது கடமைகளுட் சிறந்ததாமென வுணர்ந்து அது பெறத்தக்கவாறு ஒழுகுவோமாக. நூல்களனைத்திற்கும் முடிந்த கருத்து இதுவேயாகும்.

என்று மென்குறை யெங்கும் பரப்புவோன்
என்றன் மாணவ னென்னினு மற்றென்பால்
நின்று வேலை *நிகழ்த்துந னென்னினு
†மன்ற வென்குரு வாக மதிப்பெறல். (கo)

---

## V. உயர்தனிச் செம்மொழி

கடல் புடை சூழ்ந்த இவ்வுலகின் கண்ணே பயிலுறும் மொழிகள் அனைத்தையும் ஆராய்ந்து வகுத்து அடைவுபடுத்தி நின்ற மொழிநூற் புலவர்கள் அவையிற்றை ஆரியமொழிகள் துரானியமொழிகள் என இரு பகுப்பினும் அடக்குவாராயினர். ஆரிய மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ் மொழி தலைசிறந்த தொன்றும். எனவே சமஸ்கிருதமும் தமிழும்வேறு வேறுமொழிகளென்பது வெள்ளிடை மலையென விளங்கும். ஆகவும் சிலர் தமிழ் முன்னதன் வழிமொழியே

---

* நிகழ்த்து-செய்பவன் † மன்ற-நிச்சயமாக

யன்றித் தனி மொழியன் றென வாய் கூசாது கூறுவா ராயினர். சமஸ்கிருதமுந் தமிழும் ஒரேநாட்டின்கண் முறையேவடக்கினிந் தெற்கினுமாக வழங்கிய காரணம் பற்றி இவ்விரண்டுந் தம்மிற் சில்லாற்றுற் கலப்பன வாயின. அங்ஙனங் கலப்புழி ஒன்று பேச்சு வழக் கற்று ஏட்டு வழக்காய் மட்டில்நிற்ப, மற்றொன்று இருவகை வழக்கிலும் நின்றமையால் முன்னதன் சொற்பொருள்கள் பல பின்னதன் கட்போந்து வழக் கேற்பனவாயின. இது மொழி நூல்முறையே. இதனை யெய்யாதார் கூற்று ஓதுக்கற்பாலதென விடுக்க.

இனிமொழிநூற்புலவர்கள் வகுத்தவகை ஒருபுற மிருப்பச் சிலர் தமிழ்மொழியின் ஏற்றமுணராது மயங் கிப் பிறிது படவகுத்தனர். வடமொழியை உயர்தனிச் செம்மொழியினும் (Classical Language) தென் மொழியை உண்ணாட்டுமொழியினும் (Vernacular Languages) அடக்கி வகைப்படுத்தனர். அங்ஙனம் வகைப்படுப்புழி ஒன்று உயர்வும் மற்றொன்று தாழ்வு மாம் என்ற உட்கருத்துடன் படுப்பாராயினர். அவ்வுட் கருத்துச் சின்னாட்களில் வலியுறுவதாயிற்று. தனி மொழி யொன்றை அதன் வழிகளோடு வகைப்படுத்த லாமோ? அது முன்னதனை இழிவு படுத்தத்தகாதோ? தமிழினை உண்ணாட்டு மொழிகளுட்படுத்ததே யன்றித் தெலுங்கு கன்னடம் மலையாளம் ஆகிய அதன் வழி மொழிகளோடு ஒரு நிகரெனக்கூறலாமோ? ஆரிய மொழிகள் தலைநின்ற வடமொழியை அதன் பாதகங் களோடு ஒருங்குவைத்து எண்ணத்துணியாமைபோலத் துரானிய மொழிகளுள் தலைநின்ற தென்மொழியை

அதன் வழிமொழிகளோடு ஒருங்குவைத்து எண்ணத் துணியாதிருத்தலே அமைவுடைத்து.

இவ்வாறாகவும் நமது சென்னைச் சர்வகலாசாலையார் மேற்கூறியாங்குத்தமிழை இழிவு படுத்து வகுத்தபோதே, தமிழராயினோர் முற்புகுந்து அவ்வாறு வகைப்படுத்தல் சாலாதென மறுத்திருத்தல் வேண்டும். அப்போழ்தெல்லாம் வாய்வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் நம் தமிழ்மொழியாளர். ஆதலின் இப்போழ்தத்துச் *'சர்வகலாசாலை விசாரணை' (Universities Commission) யில் தமிழ்மொழிக்கல்வியை யோக்கியதைப்பட்டப் பரீக்ஷைகளினின்றும் ஒதுக்கிவிட்டனர். வடமொழி மட்டில் உயர்தனிச் செம்மொழியாதலின் வைத்துக்கொள்ளப்பட்டது.

ஈதென்னை வம்பு! அவ்வுயர்தனிச் செம்மொழி என்பதன் இலக்கணந்தானென்னை? அதனைச் சிறிது ஆராய்வோம். தான் வழங்கும் நாட்டின் கணுள்ள பழமொழிகட்குந் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ளமொழியே உயர்மொழி என்பது இவ்விலக்கணத்தால் ஆராய்ந்தவழி. நம் தமிழ்மொழி தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு கன்னட மலையாள துளுவங்களுக்கெல்லாம் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையால் தானும் உயர்மொழியே யென்க. தான் வழங்கு நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித்தனித்தியங்கவல்ல

---

* இது வேறு இடத்தில் இப் புத்தகத்திலே அச்சிடப் பட்டிருக்கிறது.

ஆற்றல் சான்றதே தனிமொழி எனப்படும். தான் பிற மொழிகட்குச் செய்யும் உதவி மிக்கும் அவை தனக்குச் செய்யும் உதவிகுறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ்மொழியின் உதவி களையப்படின், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன இயங்குதலொல்லா; மற்று அவையற்றினுதவி களையப்படினும் தமிழ்மொழி சிறிதுமிடர்ப்படுதலின்றித் தனித்து இனிமையினியங்க வல்லது. இஃது இந்தியமொழி நூற்புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் நம் தமிழ்மொழி தனிமொழியே யென்க. இனிச் செம்மொழியாவதுயாது? 'திருந்தியபண்புஞ் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய் மொழிபுகல்செம் மொழியாம்' என்பது இலக்கணம். இம்மொழிநூல் இலக்கணம் நம்முடைய தமிழ்மொழியின்கண்ணும் அமைத்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல் முடிபுகளும் பொருள்முடிபுகளும் இன்றிச் சொற்றூன் கருதியபொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணராவற்றுய்ப் பழையன கழிந்து புதியனபுகுந்து திருத்தமெய்திநிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ்மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க. நாட்டின் நாகரிக முதிர்ச்சிக்கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல்வேண்டும். அவ்வாறு சொற்களேற்படுமிடத்துப் பிறபாஷை சொற்களன்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனித்தமிழ்மொழிக்கும் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய்மொழியுமாம். எனவே தமிழ்செம்மொழி என்பது ஒருதலை. இதுபற்றியன்றே தொன்றுதொட்டு

நம் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப்புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று.

ஆகவே தென்னாட்டின்கண் சிறந்தொளிராநின்ற நம்அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றானாய்ந்த வழியும் உயர்தனிச்செம்மொழியேயாம் என்பது திண்ணம். இத்துணைஉயர்வுஞ் சிறப்பும்வாய்ந்த நம் அருமைத் தமிழ்மொழியை உண்ணாட்டுப் புன்மொழிகளோடு ஒருங்கெண்ணுதல் தவிர்ந்து, வடநாட்டுயர் தனிச் செம்மொழி சமஸ்கிருதமெனக் கொண்டாற் போல, தென்னாட்டுயர் தனிச் செம்மொழி தமிழெனக் கொண்டு விதிகள் வகுத்தலே ஏற்புடைத்தாம். இதனை நமது கனம்பொருந்திய இராஜப்பிரதிநிதியவர்களும், சர்வகலாசாலையின் அவயவிகளும் உள்ளவாறே கவனித்து நடப்பார்களாக. இவர்கள் தமக்கு என்றுங் குன்றாப் பழியை விளைக்கத்தக்க செயலிற் புகாது புகழ் பயக்கற்பால நல்லாற்றிற் சென்று நம்தமிழ்மொழியும் உயர்தனிச் செம்மொழி யென்றேகொண்டு ஒழுகுவார்களாக. ஆலவாயிற் பெருமானடிகளாகிய இறையனார் திருவருள்பெற்ற நம் தமிழ் மகள் என்றுந் தலைகவிழாது ஒளிர்க.

## VI. பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழ்ப்பாஷாபிவிர்த்தி

தமிழ்ப்பாஷையானது சென்னைப்பட்டினத்திற்கு வடக்கே இருபதுமைல் தூரத்திலுள்ள பழவேற்காடு முதல் தெற்கே கன்னியாகுமரிவரைக்கு முள்ள நாடு

களிற் பேசப்பட்டு வருகிறது. இலங்கைத்தீவிலும் ஏறக்குறைய மூன்றிலொருபங்கு ஜனங்களாற் பேசப்படுகிறது. தமிழ் பேசும் ஜனங்களின் தொகை *சென்ற வருஷத்து ஜனனகணிதக் கணக்கின்படி ஏறக்குறைய 170 லட்சமாகிறது. இவ்வளவு ஜனங்களாற் பேசப்பட்டுவரும் நம் தமிழ் பாஷையானது ஆரியர் மகம்மதியர் இவர்கள் மூலமாய்ப் பொறுக்கமுடியாத துன்பமடைந்து தன்னுருமாறி நின்றது. இந்தத் தமிழ்ப் பாஷையினுடைய 18ம் நூற்றுண்டின்கணிருந்த நிலையையும் அபிவிருத்தியையும் பற்றிச் சொல்ல வேண்டியது நாமெடுத்துக்கொண்ட விஷயம்.

திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த (Bishop Caldwel) பிஷப் கால்ட்வெல் துரையவர்கள் "சென்ற 200 வருஷகாலமாகத் திராவிடபாஷையானது அபிவிருத்தியற்றுக் கிடக்கின்ற தெனக் காணப்படுகிறது'' என்றெழுதுகிறுர். அது ஏகதேச முண்மையே என்பதற்கு ஆக்ஷேபணையில்லை. இப்படி அபிவிருத்தியற்றுக் கிடப்பதற்குக் காரணம் என்னவென்று சற்று விசாரித்துப் பார்ப்போமாஞல் எளிதில் விளங்கலாம். நம் சுதேச பண்டிதர்கள், இதற்குக் காரணம் "ஆங்கிலேய அரசாட்சியே'' என்பார்கள். இப்படி இவர்கள் சொல்லுவது தன்னைப் பெற்ற தாயாரை மலடி என்றுற்போலுமிருக்கிறது. இவ்வாறு தமிழ் அபிவிருத்தி இல்லாதிருக்குங் குற்றம் நம்மைச் சார்ந்ததே யொழிய அரசாட்சியாரைச் சார்ந்ததேயல்ல வென்பது எல்லார்க்குந் தெரிந்த விஷ

*In the year 1891.

யம். ஆகையால் நமக்கு நம்முடைய தமிழ்ப் பாஷை யானது அபிவிருத்தியடைந்து ஆங்கிலேயம் போலத் தழைத்தோங்கல் வேண்டும் என்ற எண்ணமிருக்கு மானால் நாமெல்லோரும் அநேகம் பத்திரிகையை நடாத்துதலையும் பத்திரிகைகளை நடத்துங் கனவான் களுக்கு நம்மாலியன்றவளவு உதவி செய்தலையும் கைக் கோடல் வேண்டும்.

இது கிடக்க—எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியவற்றைக் கூறுவாம்:-சென்ற 18-ம் நூற்றுண்டின்கண் எழுதியிருக்கப்பட்ட பிரபந் தங்களெல்லாம் விசேஷமாகச் சைவம், வைணவம் முதலிய மதசம்பந்தமான நூல்களேயாம். ஆகையி ஞலே அந்தப் பிரபந்தங்களெல்லாம் மதவைராக்கிய மென்னும் பேய்பிடித்து அந்நூலாசிரியர்களை அலைக்க அவர்கள் அதன் கைவசப்பட்டு, அக்கடவுளே பெரிய வர், இக் கடவுளே பெரியவர் என்று வீண்வாதம் பேசிப் பொய்யையும் புரட்டையும் பற்றி விவரிக்கும் நூல்களாய் முடிந்தன. இவ்விதப் பிரபந்தங்களெல் லாம் உண்டாவதற்குக் காரணம் என்னவென்றுல் யாராவது ஒருவர் ஒரு மதத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்தால் அதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு வர், பிரசங்கியார் கூறிய நியாயங்களையும் உண்மைகளை யும் அணுவளவேனும் யோசியாமல் நம் கடவுளுக்கு விரோதமாக எழுந்து இவன் பிரசங்கம் செய்யவாவது என்று கோபங்கொண்டு அவர்க்கு மாறுக நியாயவாயி லாகப் போகாமல் என் சுவாமி இப்படிச் செய்தால் உன் சுவாமியும் இப்படிச் செய்தாரே என்று புஸ்தகங்

களில் எழுதிக்கொண்டும் கவிகள் பாடிக்கொண்டும் உலாவுவர். ஆதியிலிருந்த தமிழர்கள் மிகுந்த ஊக்கமுள்ளவர்களாயும் எளிதில் விஷயங்களின் உண்மையை உணரக்கூடிய சக்தியுள்ளவர்களாயும் இருந்தார்கள். ஆகையினாலே தான் ஆரியர்களுடைய மதக்கொள்கைகளை அவர்கள் எளிதில் பற்றிக்கொண்டார்கள். தமிழர்களும் ஆரியர்களும் அதிகமாய் ஊடாடல் வேண்டி நேரிட்டதினால் இருவர் குணங்களும் ஒரே மாதிரியாய் ஏற்பட்டுவிட்டன. யாம் பிடித்ததையே சாதிப்பேமென்னும் செருக்கும், எவ்வளவு நியாயமாய்க் கூறினும் உண்மை உணராமையும், உணர்ந்தாலும் அதற்கு ஏற்க நடவாமையும் ஆகிய துர்க்குணங்கள் காலக்கிரமத்தில் உற்பத்தியாய் விட்டன. ஆகையினாலேதான் மதவாதம் விசேஷமாய் அதிகரித்தது. இம்மூன்று துர்க்குணங்களையும் அற ஒழித்தாலன்றி நந்தமிழ்நாடு முன்னுக்கு வரல் மாட்டாது.

மேலே சொல்லிய மதச் சார்பானவை யொழிந்த நூல்களிற் பெரும்பான்மை யமகமுந் திரிபுமாக எழுதப்பட்ட அந்தாதிகளும், கலம்பகங்களும் மடக்குகள் நிரம்பிய சிலேடை வெண்பாக்களும், நாகபந்தம், கமலபந்தம், முரசபந்தம், முதலியன நிறைந்த சித்திரக் கவி மஞ்சரிகளும், மைந்தர் விளையாட்டுப் புராணமுமாயிருக்கின்றது. மேற்கூறியவற்றுட் புராணமாவது என்னவென்றால், பூர்வீக ஆசிரியர்களாகிய, திருத்தக்கதேவர், கல்லாடர், கம்பர் முதலிய வித்வசிரோமணிகள் கூறிய கற்பனைகளைத் தவிர்த்து சுதந்தராயூகத்தாலமைந்த கற்பனைகளும் அலங்காரங்களும் அர்த்த புஷ்டியும் கிஞ்

சித்தேனும் இல்லாமல், கடவுளைப்பற்றித் தமக்குத் தோன்றியவாறு லீலைசெய்ததாகச் சிறு பிள்ளைத்தனமாகவெழுதப்பட்டிருக்கும் ஒரு நூலாம். இது நிற்க, சிலர் கலம்பகம், அந்தாதி முதலியன, பெரியகாவியங்களெழுதுவதற்காக ஏற்பட்ட அப்பியாசப் பிரபந்தங்களாமாகையால் அவற்றிலே எழுதி எழுதி யதிகப் பழக்கமிருந்தாலொழிய, வேறு பெரிய நூல்கள் செய்யமுடியாதென்று கூறி மயங்குவார்கள். கலம்பகம் என்பது சாமானியமான பிரபந்த மன்று. கவி செய்யும் திறமையில் மிகவும் பேர்பெற்றவர்களே கலம்பகம் எழுதத் தகுந்தவர்கள். பாடிப்பாடித் தேர்ந்தவர்களே கலம்பக மெழுதப்புகுவார். அஃதெப்படி யென்றால், சாதாரணமாயுள்ள விருத்தங்களைத் தமிழிற் கிஞ்சித்து அப்பியாசமுள்ளவர்களும் எழுதலாம். இப்பேர்ப்பட்டவர்கள், மடக்கும், திரிபும் துறைகளுமமைந்த கவிகள் செய்ய முடியாது. ஆகையால் இவற்றை அப்பியாசப் பிரபந்தங்களென்று கொள்ளுதல் கேவலம் அசங்கதமாம். இவ்விதமாகக் கலம்பகம் முதலியன எழுதுவதில் வீணே காலத்தைச் செலவிடுதலைப்பார்க்க, வசனங்களாலேனும் எளிதாய்ப் பாடக்கூடியதும் தாற்பரியங்களை நன்றாய் வெளியிடக்கூடியதுமான கவிகளினாலேனும், சத்விஷயங்களைப்பற்றி எழுதுதல் அதிக நன்மையை உண்டாக்கும் என்று தற்காலத்துள்ள பெரியோர்கள் சொல்லுகிறபடி யாமும் நடத்தல் வேண்டியது நிரம்ப ஆவசியகமான காரியம்.

சற்குணசாஸ்திரம் (Ethics) அங்கஜீவசாஸ்திரம் (Physiology) மனோதத்துவசாஸ்திரம் (Psycho

logy) ஆகிய இவற்றின் சம்பந்தமாக ஒருவிதப்பிரபந்தமுங் கிடைப்பது முற்றிலும் அசாத்தியமாய்ப் போய்விட்டது. பிறகு அந்நூற்றுண்டின்கண்உற்பத்தியானவற்றுள் எவைதான் பிரயோஜனமுள்ள நூல்களென்று விசாரிப்போம். அவைகளெல்லாம் * பிராயிகம் தற்காலத்து சாஸ்திரரீதியாக அமைந்த இலக்கண சம்பந்தமாகவும் ஏகதேசம் நீதி சற்குணமாகிய இவற்றினை விளக்கும்பொருட்டு உறபத்தியானவைகளாகவும் இருப்பனவாம். இலக்கண சம்பந்தாயிருப்பனவற்றிற்கு உதாரணமாக வைத்தியநாத நாவலர் வகுத்த "இலக்கணவிளக்கம்" Constantius Beschi என்ற வீரமாமுனிவரியற்றிய "தோன்னூல் விளக்கம்" சுப்பிரமணிய தீக்ஷிதர்செய்த "பிரயோகவிவேகம்" சுவாமிநாத தேசிகரியற்றிய "இலக்கணக்கோத்து" என்பனவற்றைக் கொள்க. நீதிசற்குண சம்பந்தமானவற்றிற்கு உதாரணமாக மேற்கூறிய வைத்தியநாத நாவலரும் வீரமாமுனிவரும் முறையே செய்த பிரபோத சந்திரோதயம், தேம்பாவணி முதலியவற்றைக் கொள்க. தமிழில் வசனநடை விஷேசமாக எழுத ஆரம்பித்ததும் இந்நூற்றுண்டிலே (19 ஆம் நூற்றுண்டிலே) தான் என்பது பின்னே நியாயவாதங்களாற் காட்டப்படும்.

மேற்கூறிய பிரபந்தங்களின் விஷயங்களித்தன்மையானவை என்பதும் அவற்றின் பயன் இவை என்பதும் அப்பிரபந்தங்களின் தாரதம்மியமின்ன என்

---

* பிராயிகம் - பெரும்பாலும்.

பதும் இவற்றையியற்றினவர்களின் † சாமர்த்தியம் இணைத்து என்பதும் அவர்கள் பிறப்புவளர்ப்புக்களைப் பற்றிய சரித்திரம் இன்னதென்பதும் பின் விரிவாக எழுதப்புகுவாம்.

---

## VII. சொற்பொருளாராய்ச்சி

வடமொழியிற் பாணினி முதலாயினர் சொற்பொருளாராய்ச்சி செய்து அம்மொழியின் கணுள்ள பகுதிகளனைத்தையும் ஒருங்கு தொகுத்துவைத்திருக்கின்றனர். ஆங்கிலம் முதலிய பிறமொழிகளினும் அவ்வாறே பகுதித்தொகைகள் தொகுக்கப்பட்டுள. ஆங்கிலவாணர் அத்துணையில் நின்றுவிடாமல் இவ்வழியிற் புகுந்து மேன்மேலும் ஆராய்ச்சி செய்து தத்தங்கருத்துக்களை வெளியிட்டும், ஆராய்ச்சியி னிறுதியில் நின்றனவற்றைச் சேர்த்து அகராதி செய்தும், தம்மொழிக்கணுள்ள சொற்களின் இயல்புகளை நன்குணர்ந்து நாடோறும் மொழிநூற்புலமை நடாத்துகின்றனர். இவ்வாறாக, நாம் அத்தகையாரது ஆளுகையிலிருந்தும், அன்னாரது நூல்களைக்கற்றும், அவர்கள் செய்யும் பெருமுயற்சிகளை யெல்லாங் கண்ணாரக்கண்டும், நமது தாய்மொழியாகிய தமிழிற்காக நாமொன்றும் புதுமை வழியானுழைத்தலின்றி, வாளா காலம்போக்குதல் நேரிதன்றெனவுணர்ந்த யாம், ஏதோ எம் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் ஆராய்ந்த சிலவற்றைத் தொகுத்துச் 'சொற்

---

† "தமிழ்ப்புலவர் சரித்திரம்" என்னும் புஸ்தகம் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆங்குக் கண்டுகொள்க.

பொருளாராய்ச்சி' யென்னுந் தலைப்பெயரிட்டு வெளியிடலாமெனத் துணிந்தேம். துணிந்து தமிழ்ப்பகுதிகளனைத்தையும் ஓராற்றாற்றொகுத்து வைத்துக் கொண்டுளேம். அன்னணந் தொகைசெய்து வைத்துள குறிப்பினின்றும் ஒவ்வொரு பகுதியாகத் தனித்தனி யெடுத்துக்கொண்டு ஆராய்ச்சிசெய்து வாராநின்றேம். அவ்வாராச்சியிற் சிற்சிலவற்றைத் தமிழுலகமும் அறியுமாறு வெளிப் படுத்துகின்றேம். ஆசிரியர் தொல்காப்பியனார் "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்று கூறியதற்குமாறாக யாம் உழைக்கப்புகுந்தேமென்றாகருதிப் பேரறிவாளராயினார் எம்மை எள்ளாது ஏற்றுக்கொள்வாரென நம்புகின்றேம். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்ற பவணந்திமுனிவர்தங் கூற்றுயாமனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதோர் பொருள்பொதி மெய்யுரையன்றோ? தமிழ் வல்லீர்! நம்மக்கள் இதுகாறுஞ் செல்லுதற்கரிதாயிருந்த தமிழ்ச்சொற் காட்டிற் புகுந்து வழியறுத்துச் சென்று ஆராய்ந்து கண்ட பொருள்களை நும்முன்னர் அடியுறையாக இடுகின்றேம்.

I. அறு என்னும் பகுதி.

இதனடியாக, அறம், அறல், அறவு, அறவை, அறுதல், அறுதி, அறுத்தல், அறுப்பு, அறும்பு, அறுகால் அல்லது அறுதாள், அறுவை, அறை, அற்றம், அற்றை, ஆறு முதலிய பலசொற்கள் பிறக்கின்றன. இவையிற்றுட் சிலவற்றைப் பகாப்பதங்களெனக் கூறுவாருமுளர். அவர்களனைவரும் யாம் கூறுமாற்றைச்

செம்மை வழியாற் சிந்தித்து ஏற்புடையன வாயிற் கொள்வாராக,

(1) அறு+அம்: அறம்=அறுக்கப்பட்டது: மனுமுதலிய நூல்களால் இன்னன செய்க இன்னன தவிர்க என வரையறுத்துக் கூறப்பட்டமை பற்றி 'அறம்' என்பது அங்ஙனம் அறுத்துரைக்கப்பட்ட தருமத்திற்காயிற்று. ஈண்டு 'அம்' செயப்படு பொருண்மை விகுதி. தொழிலாகு பெயர்.

(2) அறு+அல்: அறல்=கருமணல், சிறு தூறு, நீர், விழவு முதலிய பல பொருளுந் தருவது. ஒருங்கு சேர்ந்து கருங்கட்டியா யிருந்தது அற்று வேறு பட்டுத் தனித்தனியாகிப் பிரிந்து நின்று கருமண லாயிற்று; தரையினுள்ளிட்ட விதையானது தன்மீ துள மண்ணை யறுத்துக்கொண்டு வெளிக்கிளம்புதலிற் சிறு தூறாயிற்று; கிணறு முதலியன வெட்டிய வழிப் பக்கங்களினின்றும் அடியினின்றும் மண்ணையும் பாறையையும் அறுத்துக் கரைத்துக்கொண்டு வெளிப் படுதலின் நீராயிற்று; கடவுட்பூசை முதலிய காலங் களில் மக்களாவார் செயலற்று ஒரு மனத்தினராகி யிருத்தலின் விழாவாயிற்று.

(3) அறு+அ+வ்+உ: அறவு=அறுபட்ட இடம், ஒடிவு, கடவை, புல் முதலியன அறுபடுதலின் அங்ஙனம் அறுபட்ட இடத்தையும், அறுதல் ஒடித லுமா மாதலின் ஒடிவையும், வேலி நாற்புறமும் வேய்ந் துழி அதனுள்ளிருப்பான் வெளிச்சேறற்கு அவ்வேலி யுட் சிறிது அறுத்து வாயில் செய்து கோடலிற் கடவை யையு முணர்த்திற்று.

(4) அற+அ+வ்+ஐ: அறவை = அநாதி; உறவற்றவனாதலின் இப்பொருள் தருவதாயிற்று.

(5) அற+தல்: அறுதல்=கைம்பெண். மாங்கலியமிழந்தார் தாலி யறுபடுதல் இயல்பாமாதலின் இச்சொல் தொழிலாகுபெயராய்க் கைம்பெண்ணை யுணர்த்துவதாயிற்று. இஃது இகரவிகுதிபெற்று 'அறுதலி' யென நிற்றலுமுண்டு. இவ்வாறாகவுஞ் சிலர் இதனை 'அறுதாலி' யென்றதன் குறுக்கலாகச் கூறுவாராயினர்.

(6) அற+தி: அறுதி=இல்லாமை, சாவு, சொந்தம், முடிவு, முடிந்த விலை, விலைச்சீட்டு முதலிய பல பொருளையுந் தாராநின்றது. இது பொருளறுதலில் இல்லாமையும், உயிரறுதலிற் சாவும், பிறருக்கு உரிமையறுதலிற் சொந்தமும், அறும் நிலையாதலின் முடிவும், மேற்பேச்சற்றுத்தீர்ந்த விலையாதலின் முடிந்த விலையும், ஒருவனுக் குரித்தாயபொருள் விற்கப்பெற்றமையின் அவனது உரிமையற்றுவாங்கினானிடஞ் சேர்தலின் அங்ஙனம் விற்றுரிமையற்றதற்கு அறிகுறியாகிய விலைச்சீட்டுமாகிய பலவற்றையு முணர்த்துவதாயிற்று.

(7) அற+த்+தல்: அறுத்தல்=' 'அறுதல்' என்பதன் பிறவினை.

(8) அற+ப்+பு: அறுப்பு=அறுத்தல், அறுத்த துண்டு, ஆக்ஷேபம். தொழிலாகுபெயராய் அறக்கப்பட்ட துண்டையும், ஒருவர் பேசுங்கால் அவர் பேச்சை யூடறுத்துத் தடுத்தலின் ஆக்ஷேபத்தையு முணர்த்திற்று.

(9) அறு+ப்+பு: அறு+ம்+பு: அறும்பு= கொடுமை பஞ்சகாலம்; 'அறுப்பு' என்பது மெலித்தல் விகாரம் பெற்று 'அறும்பு' என நின்றது. நன்மையற் றுக் கொடுமையையும், நாட்டின்கண் உணவு பொருள் களெல்லாம் அறுங்காலமாமாதலிற் பஞ்ச காலத்தை யுங் குறிப்பதாயிற்று.

(10) அறு+கால்: அறுகால்; அறு+தாள்= பாம்பு. அற்றகால்களையுடையது, அஃதாவது, கால்கள் அற்றது ஆதலிற் பாம்பாயிற்று; வினைத்தொகை நிலைக் களத்துட் பிறந்த அன்மொழித்தொகை.

(11) அறு+வ்+ஐ: அறுவை=துகில் அல்லது வஸ்திரம். நீளமாக ஒரே நிரையாய் நெய்ததனை இடை யிடையே யறுத்துத் தனித்தனி வஸ்திரமாக்குதலின் துகிலை யுணர்த்துவதாயிற்று. அறுக்கப்பட்டது அறுவை; ஈண்டு 'ஐ' செயப்படு பொருண்மை விகுதி. முன்காலத்தில், இக்காலத்திலும் பல விடங்களில், சாலியர் தறியின்கண் ஆடைநெய்கையில் ஒரேநிரையாய் நீளநெய்துகொண்டே போவார்கள். அவ்வாறே முழுதும் நெய்த பின்னர் அறுத்தற்கென இடம் விட்டி ருந்தஇடங்களில் அறுத்துத் தனித்தனி யுடையாக்கு வார்கள். இவ்வழக்கத்தை யநுசரித்தே நம்தமிழ்மொழி யின்கண்ணே பிற சொற்களும் பிறந்திருக்கின்றன. உதாரணமாகத் 'துணி', 'துண்டு', 'கூறை' முதலிய சொற்களின் பொருட்காரணத்தையு முய்த்துணர்க. துணிக்கப்படுதலிற் றுணியும், துண்டிக்கப்படுதலிற் றுண்டும் கூறுபடுத்தப்படுதலிற் கூறையுமாயின.

(12) அறு+ஐ: அறை=இஃது உள், மலை முழைஞ்சு, குறை, திரை, பாத்தி, பாறை முதலிய பல பொருள் பயப்பதோர் சொல். நான்கு பக்கங்களினும் மதிலெழுப்பி ஏனைய விடங்களினின்றும் அறுக்கப்படுதலின் உள்ளாம்; மலையின்கண் அறுத்துக் குடைந்து குகை செய்யப்படுதலின் முழைஞ்சாம்; அற்றது குறைந்ததாமாதலிற் குறையாம்; கடலின் நீர்ப்பரப்பினின்றும் அற்று எழுந்து மறிந்து வீழ்தலில் திரையாம்; நிலத்தின்கட் கரைகோலப்பட்டு மற்றையவற்றினின்றும் அறுபட்டு நிற்றலிற் பாத்தியாம்; நிலப்பரப்பினை யறுத்துக்கொண்டுமேலெழும்பித் துறுத்து நிற்றலிற் பாறையாம்.

(13) அறு+அம்: அற்று+அம்: அற்றம்=அச்சம், அழிவு, உண்மை, சமயம், சோர்வு, மறைவு, மெலிவு, வறுமை முதலிய பல பொருள் பயப்பது. தைரியமறுதலின் அச்சமும்,வாழ்வறுதலின் அழிவும், தன்னுடுமிடைந்த பொய்முதலியவற்றினின்றும் அறுதலின் உண்மையும், பொருண்முதலாயின அற்ற சமயமும், வலியற்ற சோர்வும், மெலிவும், கண்கூடற்ற மறைவும், பொருளறுதலின் வறுமையுமாம்.

(14) அறு+ஐ: அற்று+ஐ: அற்றை=சிறுமை மேன்மையற்று நிற்கும் நிலையாதலிற் சிறுமையாயிற்று

(15) அறு: ஆறு=நதி, வழி. இது முதனிலை நீண்ட தொழிலாகுபெயர். நதியானது தரையை யறுத்துக்கொண்டும் காடு முதலியனவற்றை யூடறுத்துக் கொண்டும் செல்லுதலின் இப்பெயர்த்தாயிற்று. கல்லுங்கரடுமாயிருந்த நிலத்தை வெட்டி யறுத்துத்

திருத்தி மக்கள் நடப்பதற்கு ஏற்றதாக்குதலின் வழியாயிற்று.

இனி இப்பகுதியினின்றும் பிறக்கும் வினைவிகற்பங்களைப் பற்றிக் கூறப்புகின் விரியுமென விடுத்தனம். இவ்வாறு 'அறு' என்னும் இவ்வொரு பகுதியினின்றுமே பல சொற்கள் மேன்மேலுங் கிளைத்துப் பலவேறு பொருள் பயப்பனவாமாறு கண்டோம். இவைகளுட் சில நம்முன்னோரது கருத்துக்கள் இன்னின்னவாற்றிற்சென்றுளவென்பதனையும் முன்னுளிலிருந்த வழக்கத்தையும் இவைபோல்வன பிறவற்றையும் நமக்குத் தெரிக்கின்றன. இன்னும் உற்றுநோக்கிச் சிலர் "'அறு' என்னும் இப்பகுதியும் தனிப்பகுதியன்று; இதற்கு மூலப்பகுதி பிறிதொன்றுளது" என்று கூறினுங் கூறலாம். 'அல்' என்னும் எதிர்மறையிடைச் சொல்லொடு துவ்விகுதிசேர்ந்து வினைத்தகைப்பட்டு நின்றதே 'அறு'. இக்கூற்றுயாவருக்கும் உடன்படாயின் ஆயிரக்கணக்காக விரிகின்ற தமிழ்ப் பகுதிகளெல்லாம் நூற்றுக் கணக்காகச் சுருங்கிவிடும். இவ்வாறே வடமொழி வையாகரணர்கிய பாணினி பகவான் இரண்டாயிரக் கணக்காக வகுத்திருந்த சமஸ்கிருத தாதுக்கள் அனைத்தையும் சுருக்கி எழுநூற்றிற்கு ளடக்கிவிட்டார் காலஞ்சென்ற மோட்சமூலப்பட்டாசாரியர் (Prof Max Muller) என்பார்.

யாம் இதன்கண் வழியல்வழிச் செல்வதாகப் பேரறிவாளர் காண்பராயின் அன்னார் எம்மைத் தெருட்டுவாராக.

## VIII. ஒரு நண்டுத்தெறுக்கால்

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையின் கணுள்ள உயிர்ப்பொருட்சாலைக்கு உயிருள்ள நண்டுத்தெறுக்காலொன்று கஞ்சத்தினின்றும் 1901-ம் வூ ஆகஸ்டுமீ 15உபோந்தது. அஃது அப்பொழுது சினையாயிருந்தது; ஏறக்குறைய ஒரு சாண் நீளமுள்ள அது 19-ஆந்தேதி ஈனத்தலைப்பட்டது. அவ்வாறு தலைப்பட்டு மூன்று நான்கு மணிநேரத்தினுள் 20 குஞ்சுகள் வெளிப்பட்டன. ஒவ்வொரு குஞ்சும், தன் தாயின் வயிற்றினின்றும் வெளிப்பட்டவுடன் தானாகத் தனது இயற்கையுணர்ச்சி வலி காரணமாகத் தன்னுடையதாயின் முதுகின்மேலேறிக்கொண்ட பிறகு தாயானது தனது கொடுக்கை வளைத்து நிறுத்தி அவற்றைப் பாதுகாத்துக் கொண்டது. தாய் கருந்தேளாயினும் குஞ்சுகள் வெண்ணிற முள்ளவையாயிருந்தன. தாயின் கழுத்திற்குச் சிறிது கீழே யுள்ளதோர் புழைவழியாகக் குஞ்சுகள் வெளிப்பட்டன. ஆகவே தாய்த்தெறுக்காலின் முதுகு வெடித்து அதன் குஞ்சுகள் வெளிப்படுகின்றவென்ற சாமானியக் கொள்கை தவறுடைத்தாகின்றது. தாய் தனது குஞ்சுகளைப் பாதுகாத்தலிற் காட்டுங் கவலை யாவருங் கண்டு வியக்கத்தக்கது. தானறியக் குஞ்சுகளினருகே ஒரு சிறு துரும்பை யெடுத்துப்போகடினும், தாய் வெகுண்டு கொடுக்கினல் கொட்டமுயலுகின்றது. தாய்க்குத் தெரியாமல் குஞ்சுகளைத் தொடலாம்.

இனி அத்தெறுக்காலினிடத்தில் 22-ஆந்தேதி மாலை சில சோதனைகள் செய்து பார்த்தோம். முதற்கண் அதன் குஞ்சுக்குள் ஒன்றைக் கலாசாலை உயிர்

நூல் புலவர் கொன்று அத்தாயின் முன்னர் வைத்தனர். அப்படி வைத்தவுடனே அது தனது இறந்த அக்குஞ்சை யெடுத்துத் தின்றுவிட்டது. பிறகு பிறிதொரு குஞ்சைக் கான்முறித்துத் தாயின் முன்னர் இட்டனர். அதன்மேல் அத்தாய் தனது குஞ்சுகளு ளொன்று காலொடிந்து போனமையால், தன் முதுகி லேறிக்கொள்ளமாட்டாது தவிப்பது கண்டு உடனே தனது கரங்களையும் கால்களையும் நீட்டி அதற்குப் பல விதத்தினும் உதவி செய்து பார்த்தது. அவ்வாறு செய்து பார்த்தும் அக்குஞ்சு தன் தாயின் முதுகின் மீது ஏறிக்கொள்ளும் வலியிலதாயிற்று. அஃதுணர்ந்த அதன் தாய் அக் குஞ்சின்மேல் உடனே பாய்ந்து அதனைக் கொன்று தின்றுவிட்டது. இவ்வாறு அத்தாய்த் தெறுக்கால் சிறிதேனும் அன்பின்றிச் செய்தமைக்குக் காரணமென்ன? தன்குஞ்சு நகர்தலின்றிவாளா வருந்தியூன்று துன்புறுவதினும் அது சாதலே நலமென்று கருதிற்றோ? அற்றேல் அது தன் குஞ்சினைக் கொன்ற மட்டில் நில்லாது அதனைத் தின்னவும் புகுவானேன்? நம் உயிர் நூற் புலவர் செய்த சோதனையிலும் இறந்த தன் குஞ்சைத் தாய் தின்றுவிட்டதே! ஆதலின் இதன் மெய்க்காரணம் பிறிதொன்றாய்த்தானிருக்க வேண்டும். அஃதென்னை? நந்தம் உயிர்நூற்புலவர் பின்வருங் காரணங் கூறுவாராயினர்:—

அத்தாய்த்தெறுக்காலானது அவ்வாறு தின்னாது தன்னுடைய இறந்த குஞ்சையும் தற்காத்துக் கொள்ளமுடியாத குஞ்சையும் அஃதஃதிருந்த இடத்திலேயே கிடக்கும்படி விட்டுவிடுமாயின், தேள்களுக்கும் தெறுக்

கால்களுக்கும் பகையாகிய பிற ஜந்துக்கள் அக் குஞ்சு களையுந் தின்றுவிட்டுத் தேள் தெறுக்கால்களின் குஞ்சு கள் எங்கேனும் காணப்பட்டால் அவ்விடத்திற்குச் சமீபத்திலேயே அவற்றின் தாயும் உடன்பிறந்த மற் றைக்குஞ்சுகளும் இருக்குமென்பது திண்ணமாதலின் அக்குஞ்சுகள் வந்த வழியாகத் தாமுஞ்சென்று மற் றைக் குஞ்சுகளும் அவற்றின் தாயும் இருக்குமிடம் அறிந்துகொண்டு அவை சோர்ந்திருக்கும் அற்றம் பார்த்து அவையனைத்தையுங் கொன்று தின்னப் புகு தலியலும். ஆதலின் தன்பகையாய ஜந்துக்களினின்றும் தானும் தன் மற்றைய குஞ்சுகளும் தப்பிப் பிழைக்கக் கருதியே அத்தாய்த் தெறுக்கால் அங்ஙனஞ் செய்த தென்க. அஃறிணைப் பொருள்களிடத்தும் இவ்வியல்பு என்னே! பலவற்றின் நலங்கருதி யொன்றனைக்கோறலு மென்னே! தான்கொல்லாவிடினும் தன் பகையாகியபிறி தொன்றனாற் கொல்லப்படுமென்றோ? தற்காக்கும் வன் மையற்றது தரணியில் வாழுதல் தகாதோ? என்னே! இயற்கையொழுங்கு! என்னே! இறைவன் படைப்பு மகிமை! அவனருட் செயல்களின் காரணங்கள் அவன் அருளாற் புலப்பட்டாலன்றி அவை பிரிது வழியால் நமக்குப் புலப்படுதலுமுண்டோ? இவ்வாறு கடவுளரு ளால் நம் ஆங்கில வாணர் பலவகைப்பட்ட பொருள் களின் பெற்றிகளையும் உய்த்துணர்ந்து வெளியிடும் நூல்கள் அனைத்தையுங் கூட்டுண்ணுதல் என்று கொ லோ? அம்மேற்புல விஞ்ஞானிகளைப்போல் நாமும் உழைத்துப் பொருளியல் உணர வேண்டாவோ? தமிழ் வல்லீர்! எழுமின்! எழுமின்!!

## IX. தமிழ் நூலாராய்ச்சியின் தற்கால நிலைமை

ஒரு நூலென்றால் அதிற்குணங்களும் குறைகளும் இருத்தல் இயல்பே. குறையேயில்லாத நூலும் குணமேயில்லாத நூலும் இவ்வுலகிற் காணுதல் அரிது. ஆகவே நாம் நூல்களைக் குணம் மிகுந்த நூல்களென்றும், குறை மிகுந்த நூல்களென்றும், குணமும் குறையும் ஒத்த அளவுடைய நூல்களென்றும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். நம்முடைய தமிழ்ப் பாஷையில் நடுவிற் கூறிய நூல்களே பெரும்பான்மை. இது நிற்க.

இந்த நூல்வகை நூல்களையும் பற்றி ஆராய்ச்சி செய்யுமிடத்துப் பலருந் தழுவிக்கொள்ள வேண்டியன சிலவுள. நூலாராய்ச்சி யென்றால் அஃது அந்நூலிலுள்ள முறைகளையே எடுத்துக்காட்டுதலன்றென்பது தமிழராவர் ஒவ்வொருவர் மனத்திலும் பதியவேண்டும். குற்றமே கூறுதில் பொறாமைக் கூற்றேயாம்.

"குற்றமே தெரிவரர்க்குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வரால்" (கக)

என்ற கச்சியப்பர் வாக்குமிக்க அநுபவத்தின் மேற் பிறந்ததன்றோ? இதனாலே நூல்களிற் குற்றங்கள் மிகுந்து கிடந்தால் அவற்றை யெடுத்துக் காட்டாது பொதிந்து மூடிவைக்க வேண்டுமென்று நாம் கூறவரவில்லை. நூல்களிற் குற்றங்காணின் அவற்றை நூலாசிரியர் மனம் புண்ணுகாமல் இன் சொற்களால் எடுத்துக் காட்டி, கூடுமானால் அவற்றைப் போக்குமாறு இவையென்று சுட்டலும், குணங்காணின் அவற்றை யெடுத்து வியந்து மதித்துப் பேசலும் வேண்டும். இவ்வாறு செய்யாவிடின் நூல்களெழுதப்புகுவார், தொகை

மிகச் சுருங்கிவிடும்; நம்முடைய பாஷைக்கே இறுதி விளைப்பதாகும். மற்று மேற்கூறியபடி செய்தாலோ, நூலாசிரியர்கள் ஊக்கங்குறையாமல் மேன் மேலும் புதிய நூல்கள் எழுதப் புகுவார்கள். இவ்வாறு புகுந்து நாடோறும் பழகுதலால் தம்முடைய நூல்களில் நேரக்கூடிய குறைபாடுகளைத் தாங்களே நீக்கிக் கொள்வார்கள்.

இனிப் பிறபாஷைகளில் இருத்தல் போல நம்முடைய தமிழ்ப் பாஷையில் ஆராய்ச்சி நூல்களே இல்லை யென்று வாய் கூசாமற் சொல்லி விடலாம். ஆங்கிலரோடு நாம் ஊடாடப் புகுந்த இப்பொழுது தான் இரண்டொன்று வெளிப்படத் தலைப்பட்டிருக்கின்றன. தமிழ் நூற் பயிற்சி யொன்றுமேயுடையார் ஆராய்ச்சி நூலாவது இன்னதென்று அறியார். அவர்கள் செய்வன வெல்லாம் மறுப்புக்களும். கண்டனங்களும், சூராவளிகளும், திவாகரங்களும் இவை போல்வன பிறவுமேயாம் ஆங்கிலப் பயிற்சி மிகுந்து நாகரிக நிலை மிகுந்த இந்நாளினும் அத்தன்மையான நூல்கள் நின்றபாடில்லை. நிந்தைப் பிரதி நிந்தை கூறலும், வஞ்சகமாகப் பத்திரிகைகளிற் பிறர் நூல்களை இழித்துரைத்தலும், பிறர் நூல் நன்றாயிருப்பினும் பொறாமைக் காரணமாக நன்றன்றெனத் தம் மனத்திற்கு விரோதமாகப் பொய் மொழிதலும் இக்காலத்தில் மிகுந்திருக்கின்றன. இவை யனைத்தும் நாளாவட்டத்திற் குறைந்துபோமென்பது திண்ணம்.

சிலர் புது நூல்கள் எழுதுவதில் யாது பயன்? பழைய நூல்களே போதும்; அவைகள் தாம் நல்லன;

மற்று இன்றும் நேற்றும் உதித்தனவெல்லாம் போலிகளே என்று கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறுதற்குற்ற காரணம் தெற்றெனவிளங்கவில்லை. இத்தன்மையான கொள்கை தொன்றுதொட்டுள்ளது போலும். வடமொழிக் காளிதாச மகா கவியும் தமது மாளவிகாக்கினி மித்திர நாடகத்தில் இதைக் குறித்துக் கூறியிருப்பது யாவரும் அறியத்தக்கது.

தொன்று தோன்றிய யாவவை தூயன
இன்று தோன்றிய யாவவை தீயன
என்றியம்பு மியல்புண ராமகன்
அன்றி மூதறிவாள ரறைவரோ? (கஉ)

இஃது இவ்வாறாக, வேறு சிலர் 'நம்மிடத்தில் மகா கவிகளினுடைய வல்லமைக்கீடான வல்லமையில்லாமையால் நாம் அவர்களுடைய நூல்களை ஆராய்தல் அறிவின்மையாம்' எனக் கூறுகின்றனர். என்னே இவர் தம் பேரறிவுடைமை. ஆராய்ச்சித் திறம் வேறு. நூலியற்றுந்திறம் வேறு; ஆகவே ஆராய்வோனிடத்தில் அம்மகா கவிகளைப்போல நூலியற்றுந்திறம் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. இனித் தற்காலத்தில் நம்மவரிடத்தில் ஒரு பெரிய தீ வழக்கங் குடிகொண்டிருக்கின்றது. ஒன்று ஏதேனும் ஒரு நூலை முற்றிலும் நன்றெனஅளவுக்கு மிஞ்சிப் புகழினும் புகழ்வார்கள்; அன்றி மற்றொன்று, அதனை முற்றினும் தீதென வரம்புகடந்து இகழினும் இகழ்வார்கள். இங்ஙனம் செய்வதற்குக் காரணம் அந்நூலாசிரியரிடத்துத் தமக்குள்ளநட்பேனும்பகையேனுமாம். இது நேரிதோ?

இன்னுஞ் சிலர் பிறருடைய நூல்களை ஆராய்ச்சி செய்வோமெனப் புகுந்து நூல்களைப்பற்றிய சில நற் கருத்துக்கள் தம்மனத்திற் கொண்ட பின்னர், அந் நூலாசிரியர்கள் உயர்நிலையில் இல்லாதிருந்தாலாவது, தம்மெண்ணத்தின்படி நல்லியல்பினர் அல்லராயினு லாவது, மிக்கபுகழ் படையாதிருந்தாலாவது, அங் ஙனந் தாம்கொண்ட கருத்துக்கள் அனைத்தையும் மாற்றி அந்நூல்களை இழித்துரைக்கின்றனர். அந்தோ! இவர்கள் எவ்வளவு விரைவில் தம் மனத்தை மாற்றி விட்டனர்.

"தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்." (கரு)

என்ற திருவள்ளுவனார் கூற்று வீண்போகாது. இன்னும் அவர்கள் ஆராயவேண்டுவன நூல்களாமே யன்றி நூலாசிரியர்களல்லரே. அவ்வாறாகவும் அவர் கள் நூல்களை விடுத்து அவற்றின் ஆசிரியர்களைப்பற்றி யாராய்தல் குருட்டுத்தனமன்றோ?

ஆகவே, இனியேனும் நம்மவர்கள் யாவரும் நூலாராய்ச்சி செய்யுமிடத்து அவற்றின் ஆசிரியர் களது இயல்புகளை நோக்கி மனந்திரிதலின்றிப் பொறு மைக்கிடங்கொடாது, குறைகளை இன்சொற்களான் மெல்லெனக் கூறி, நயங்களைப்பெரிதும் எடுத்து வியந் துரைத்து அவ்வந்நூலாசிரியர்களிடத்தில் ஊக்கமெ ழூப்பி அநுதாபங் காட்டி ஒழுகுவாராக.

## X. வறுமையும் தமிழ்ப் புலமையும்

முற்காலத்தே செந்தமிழ்ப் புலமை மக்களிடத்தே மிகுந்திருந்ததென்றும், இக்காலத்தே அது நாளாவட்டத்திற் குறைந்துபோகின்றதென்றும் பலர் கூறுகின்றனர். இக்கூற்று உண்மைதானேவென்று ஆராயப்புகுந்தால் இதன் கட்கொள்கைகள் வேறுபடும். செந்தமிழ்க் கல்வியும் புலமையும் வரவர மிகுந்துகொண்டேயிருத்தல் கண்கூடாகவும் பலர் மேற்கூறியவாறு உரைத்தற்குத் தக்க காரணங்கள் புலப்படவில்லையென்றும், ஆங்கிலவரசாட்சியின் பெருநலனாகிய அச்சியந்திரத்தினுதவியால் தமிழ் நூல்களுட் சிறந்தனவெல்லாம் வெளிப்பட்டுலவுகின்றனவாதலின் யாவரும் அவற்றைப் படித்துணரத்தக்க நிலையிலிருக்கின்றனரென்றும் அவ்வாறே பலரும் அங்ஙனம் வெளிப்பட்ட நூல்களைப் படித்துக் கல்விமான்களா யிருக்கின்றனரென்றுங் கூறுவர் ஒரு சாரார். தமிழ் நூற்பயிற்சி முன்னையினும் இப்போது அதிகமாயிருக்கின்றதெனினும், ஆழ்ந்த கல்வியும் நிரம்பிய புலமையும் வாய்ந்த நன்மக்கள் தொகைமிகக் குறைவேயென்றும் அக்குறைவிற்குக் காரணங்கள் பலவென்றுங் கூறுவர் மற்றொரு சாரார். இவ்விருசாரார் கூற்றையுஞ் சீர்தூக்கி ஆராயுமிடத்து இருகூற்றினிடத்தும் உண்மையுள தென்பது புலனும்.

மற்று முற்காலத்துத் தமிழ்ப் புலமை சான்றோர் மிக்கிருந்தமைக்குக் காரணங்கள் பலவாம். அக்காலத்தில் அரசபாஷையுந்தமிழே; அரசருந் தமிழ்வல்லரே; ஆகவே தமிழ்வாணர் அரசர்களால் ஆதரிக்கப்பட்டுச்

செல்வமும் புகழுமடைந்து சிறந்தனர். அக்காலத்தில் நாட்டின்கண் செல்வப்பெருக்குக்குறைந்திருந்தமையா னும், காடு முதலியன கடந்து சேறல் அரிதாயிருந்தமை யானும், நிலங்களின் விளைநலன் குன்றியிருந்தமை யானும், பொருட் செல்வமனைத்தும் வல்லாளராகிய அரசரிடத்தேயே யொருவழித் தொக்கிருந்தமையா னும் புலவர்களாவார் அரசரை நாடிச் சென்று அவ் வரசரது அமயம் நோக்கியிருந்து, அது நேர்ந்துழி மன்னனைப் புகழ்ந்து பல்வகைப் பொருள்களொடு யானை முதலியன பரிசுபெற்றும், அரசன் பரிசில் நீட் டித்தவழி வெகுண்டு வேற் றரசரிடஞ் சென்றுபரிசு பெற்றும், சொல்லேருழவராய்த் தமிழ்ப் புல மையே வாழக்கைத்தொழிலாய்ப் பூண்டு காலங்கழித் தனர். அன்னார்தம் மிடத்து வாழ்க்கைக்குப் போதிய செல்வமிருந்தவழி அரசரை நாடிப் போவதில்லை. வறுமைவந்து வருத்தும் போதே அவர்கள் செந்த மிழ்ப் பாடல்களைப் பாடிக் காவலனிடத்தோ கடவுளா ரிடத்தோ முறை யீடுசெய்வார். ஆகவே வறுமையும் அக்காலத்துத் தமிழ்வாணரது புலமையின் மாட்சிக்கு ஒரு பெருங்கருவியா யிருந்தது. வறுமை யில்வழிப் புலமையில்லை; புலமையில் வழி வறுமையில்லை. செல்வ முள்வழிப் புலமையில்லை ; புலமை யுள்வழிச் செல்வ மில்லை. இதுபற்றியன்றே.

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேற்—றொல்சிறப்பி
னாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து" (கச)

என்று சைனமுனிவருங் கூறுவாராயினர். மேலும் அவர்கள் பொருளின்மையை வறுமையாக் கருதாது அறிவின்மையையே வறுமையாக் கருதின ரென்பது,

"நுண்ணுணர் வின்மைவறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வ—மெண்ணுங்காற்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்." (கரு)

என்றதனால் வெளியாம். அன்னார் மிடித்துன்பத்தை யெடுத்துரைத்த பாடல்கள் அளவில; தமக்கு பேராதரவாயிருந்த வேந்தர்கள் வீந்துழி அப்புலவர்கள் புலம்பி யலமந்துரைத்த பாடல்கள் அளவில. அவற்றைப் புறநானூற்றிற் காண்க. அப்பாடல்களை யாம் படிக்குந்தோறும் அவர்களது இலம்பாட்டை வியத்தலும் நேருமென்பது திண்ணம். அவர்கள் வறுமையுற்றிராத வழி அவ்வருமையான பாடல்களை யாம் படித்தலெங்ஙனம்? வறுமை நீங்கிச் செல்வ மடைந்த பின்னர் அஃது அவர்கள் தமது கல்வியை மறத்தற்கோரேதுவுமாயிற்று. இக்கூற்று,

"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற்செல் வழிபண்ணி
வரவெமர் மறந்தன ரதுநீ
புரவுக்கடன் பூண்ட வண்மையானே." (கசு)

எனக் கண்டீர கோப்பெரு நள்ளியையும்,

"சென்றது மன்னெங் கண்ணுளங் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை

வாணர்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை யினத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியா ராகன் மாறுகொல் விசிபிணிக்
கூடுகொ ளின்னியங் கறங்க
வாடலுமொல் லார்தம் 'பாடலு மறந்தே.'' (கஎ)

என வல்விலோரியையும் வன்பரணர் பாடியவற்றான் வலியுறுமாறு காண்க. இற்றை நாளினும் ஆராய்ச்சி நிகழ்த்தியவழிச் சிற்சில விடங்களில் நன்னிலையிலுள்ள சிலர் தமது மூதாதையர் மிக்க கீர்த்தி வாய்ந்த தமிழ்ப் புலவராயினமைபற்றிப் பரிசு கொடுக்கப்பெற்ற கிராமங்களே தாங்களிப்போது அநுபவித்து வருவனவென்றும், தாங்கள் நிலத்தின் பயிர்த்தொழின் முதலியவற்றிற் கவனஞ்செலுத்த வேண்டியிருந்தமையின் தங்கள் பரம்பரைத்தொழிலாகிய தமிழ் நூற்பயிற்சி செய்து அதன்கட் புலமை நடாத்துதல் நின்றுபட்டதென்றும் கூறித் தமது முந்தையோர் புகழில் தாமுங்களித்து அவ்வளவில் அமைவாராகின்றனர்.

முற்காலத்தில் தமிழ்ப்புலவர் அரசரிடத்துள்ள செல்வத்தைத் தமது எய்ப்பினில் வைப்புச் செல்வமாகவும் அவரது வறுமையைத் தமது வறுமையாகவும் கருதியொழுகினர். இது புறநானூற்றிற் பெருஞ்பதுமனார் பாட்டானும் வலியுறுவது காண்க. இக்காலத்திலோ செல்வம் ஒருவழித் தொக்கிராது யாண்டும் பரவி நிலவுதலின் அதனைப் போற்றுதற்கட் சிலரும் தமிழ்ப்புலமைத் தொழிலான் வரத்தக்க ஊதியத்தினும் பிறதொழில்களான் ஊதியம் அதிகமென்

றுணர்ந்து தமிழ்க் கல்வியைக் கைவிட்டு வேற்றுத் தொழின்முயற்சியிற்சிலருமாகப் பிரிந்துழைத்தலின், தமிழ்க்கல்வி குறைவுறத் தலைப்பட்டது. முற்காலத்தில் தமிழ்ப் புலமைக்குச் சிறந்ததோர் கருவியாயிருந்த வறுமை இக்காலத்தில் தமிழ்ப்புலமைக்குப் பெருங் கேடாய்ப் பொருந்தியதந்தோ! இன்னுஞ் சின்னாளில், உள்ள தமிழ்ப்புலவர்களது வறுமையும் இன்னே களையப்படாதொழியின், அஃது அருந்தமிழ்ப் புலமையெனும் ஆரமிழ்தில் வீழ்ந்து அதனை நஞ்சமாக்கிவிடுங் காண்; புலமையே யின்மையாய்விடும். ஆதலின் அறிவுடையாளர்காள்! தமிழ்ப்புலமை மாட்சியுறச் செய்ம்மின்! தமிழராய்ப் பிறந்த நீவிர் ஒவ்வொருவருஞ் சிறிதேனும், பாஷாபிமான முடையராய்த் தமிழ்ப்புலமை யொழிந்து படாது அதனைப் போற்றுவீராக.

“நாருத்தகடேபோ னன்மலர் மேற்பொற் பாவாய்
நீருய் நிலத்து விளியரோ — வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து” (கஅ)

என்று புலம்பிய தமிழ்ப்புலவர் வாய்மொழியைச்சிறிது செவியிலேற்பீர் அறிவான் மிக்கீர்!

---

## XI. தமிழ்ப் புலவர் பொருமை

நல்லாசிரியரை யடுத்துத் தமிழ்க்கலை பயின்று பரந்த கொள்கையாளராய் திகழும் அறிவுடையோரே தமிழ்ப்புலவராவார். அன்னார் தமக்குட் பொருமை நிகழ்தல் அதிசயமானதொன்றன்றே?

"தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெலா
மெற்றே யிவர்க்குநா மென்று" (கக)

என்ற நீதிநெறி விளக்கமுடையார் கூற்றுக் கல்வி விஷயமாகப் பொறாமைப்படுதல் ஓராற்றா லேற்புடைத்தாகுமென வலியுறுத்துரைக்கு மாயினும் அதன் மெய்ப்பொருளுணர்ந் தொழுகுவோர் மிகச்சிலரே. அது கருதியதெல்லாம் அங்ஙனங்கருத்தழிந்து அவர் போலுங் கல்விமான்களாகத் தக்கவாறு மேன்மேலும் நூற்படிப்பின் கண் ஆர்வமுடையரா யெழுதல்வேண்டு மென்பதாம். அவ்வாறன்றிக் கற்றறிந்த புலவர்களாயினாது ஆக்கங்கண்டு நெஞ்சம் புழுங்கியழுக்கறுத்தலதன் கருத்தன்று.

மற்றப் பிறரது ஆக்கங்கண்டு பொறாமைப்படுவது இறப்பப் பெரியதோர் தீக்குணமாக நூல்கள் முழங்குமாற்றை நன்குப் படித்தறிந்தவரெனச் சொல்லிக் கொள்ளும் தமிழ்ப் புலவர்களே தமக்குள் அழுக்காறுடையரா யொழுகுதல் எவ்வாறு நேரிதாகும்? அவர்தங் கல்விப்பயன் யாதாயிற்று. கல்விக்குப் பயன் நல்லொழுக்கமன்றோ? பூத்தாலுங் காயாமரமுளவாதல் போலவும், மூத்தாலும் நன்கறியார் தாமும் நனியுளராதல் போலவும், பாத்தி விரைத்தாலும் நாறாத வித்துளவாதல் போலவும், உரைத்தாலும் உணர்வு தோன்றாத பேதைகளுளராதல்போலவும், எவ்வளவு படித்தாலும் ஒழுக்கந் திருந்தாத புலவரும் உளரே போலும்! இத்தகைய தமிழ்ப் புலவரைத் தமிழ்ப் புலவரென்னலா

மோ? இவர்களைப் போலிப் புலவர்களென்றூற் படுமி ழுக்கென்னை ?

இது நிற்க. இவ்வுலகின்கண் உள்ளவாறே பெருமை வாய்ந்த நற்றமிழ்ப் புலவராவார் ஆக்கஞ் சிறந்தோ ளிருமிடத்து, அது கண்டு புன்புலவர் வெறுத்து வேறுபட வொழுகி னென்னும்? தாமே யழிந்துபடுவரே யன்றிப் பிறிதில்லை.

"அழுக்காறென வொருபாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்." (உ0)

என்ற திருவள்ளுவனர் கூற்று மெய்ம்மை யுடைத் தன்றோ? தம்மினும் உயர்ந்த புலவர்களது நன்கு மதிப்பே ஒவ்வொருவரானும் ஏற்றுக் கொள்ளத் தக்கது ; மற்றுத் தம்மினு மிழிந்த புன்புலவர்கள் தம்மை நன்கு மதித்தாலென் மதியர்க்காலென் ?

"அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டு
மிகை மக்களான் மதிக்கற்பால—நயமுணராக்
கையறியா பாக்களிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்." (உக)

பொறாமை பிடர் பிடித்துந்துதலான் ஒரு புலவர் மற்றொரு புலவர்க்குத் தீங்கேதேனும் மொழியிஞனுதல் செயலிஞனுதல் இயற்றுவரேல் அஃது அவரைக் கல்லாருமிழி குலத்தாருமாகச் செய்து விடுங்காண். ஒரு புலவர் தாமுயர வேண்டின் நல்லாற்றின் முயன்று உயர்க; அதற்காகப் பிறரை யிழிவுபடுத்துவா னெழுவதென்னை ? ஒருவருக்கொருவர் துன்பம் நேராதவாறும் இன்பம் மிகுமாறும் உதவுதலே மேதக்கதாம்.

ஒரு தமிழ்ப் புலவர் ஏதேனுமொன்றனுற் புகழ் நலம் பொலிந்து சிறந்துழி அதுகண்டு மகிழ்ச்சி யடைதலே ஏனைய புலவர்கள் யாவர்க்கும் எய்தியதோர் கடப்பா டாகவும், அதனை மறந்து பொறாமைப் பேய்க்காளாகி அவரொடு மாறுபட்டு அவரடைந்த நன்மையின் பய னைத் தாமும் நுகரவேண்டி அவருக்கு இடுக்கண் விளை யத் தக்கவாறு ஏதேனுமொன்று செய்தல் எவ்வாறு ஏற்புடைத்தாகுமோ? குடிக்க வியலாதேற் கொட்டிக் குப்புறக் கவிழ்ப்பல்' என்பது புல்லறிவாளனது வெறிக் கூற்றேயன்றோ? 'கீரைக் கடைக் கெதிர்க் கடை' வைப்பார் போன்று தமிழ்ப் புலவர்களாவார் ஒருவரோடொருவர் முரணித்தாக்குதல் சாலாதுகாண். ஒருவனுண்பதைத் தடுப்பது தவறுடைத் தன்றோ? வேண்டுமெனின், நன்னெறியானுணவு கிடைக்குமாற் றை யுய்த்துணர்ந்து ஒழுகாது பிறிதுபட வொழுகு தல் பைத்தியமேயென்க.

இனித் தமிழ்ப் புலவர்க்கும் பொறாமைக்கும் இன்றியமையாததோர் தொடர்பு கற்பித்தல் எமது கருத்தன்று. பெரும்பான்மையாகத் தமிழ்ப் புலவர் பலர் மாட்டு இப்பொறாமைத் தீக்குணம் நிகழ்தல் கண்டு மனம் புழுங்குவேம் இங்ஙனம் எழுதினேன். செந்தமிழ்ப் புலவராவார் தமக்குட் பொறாமைப்படுத லின்றி மனமொத்த நட்பாளராய் வாழ்ந்து நந்தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் புகழ் மிகத் தக்க வாறு ஒழுகுவாராக. நமது மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கங் கருதுவதும் இஃதே யாமென்பது தேற்றம்.

## XII. தமிழ் அகராதி

நம் தமிழில் 'அகராதி' என்ற சொல்லே ஆட்சேபத்துக்கு இடமாயிருக்கின்றது. எழுத்துக்களுக்குக் கரச்சாரியை வழக்கு, தமிழ் மொழிகளிலே யன்றி வடமொழிகளில் இன்று. வடநூலார் கொள்வது காரச்சாரியையே. ஆதலின், தற்காலத்தில், அகராதி யென்று வழங்குஞ்சொல் 'அகாராதி' யென்றிருத்தல் வேண்டுமென்பது பலருடைய கொள்கை. அற்றேல், பாஷையில் வழங்கிவந்த அகராதியென்ற சொல்லை அகாராதியென்று மாற்றுதல் ஏற்புடைத்தாகுமோ? அகாராதியென்ற சொல்லே அகராதியென மருவிற்றென்றுற் படுமிழுக்கென்னை?

அகராதியென்ற சொற்பொருளாராய்ச்சி யிவ்வாறாக, பிற பாஷைகளிலுள்ள அகராதிகட்குள்ள கௌரவமும்மகிமையும் நந்தமிழ் மொழியின்கணுள்ள அகராதிகட்கு ஏற்படாமற் போயினவென்று பல்லோர் கூறக்கேட்டிருக்கின்றோம். இஃதுண்மையேயென யாம் அனுமோதிப்பதின்கண் யாதொரு தடையுமில்லை. ஏனெனில், பிற பாஷைகளிலுள்ள அகராதிகள் பாமரர் பண்டிதராகிய இருதிறத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுமாறுபோல நம்முடைய தமிழ்மொழியின்கணுள்ள அகராதிகள் பாமரர்களால்மட்டும் மேற்கொள்ளப்பட்டுப் பண்டிதர்களால் மேற்கொள்ளப்படாமலிருக்கின்றன.

இக்குறைபாட்டிற்குக் காரணம் யாதென ஆராயப் புகுந்தவிடத்து, நம் தமிழகராதிகளிற் காணப்படுஞ் சொற்கள் தமிழ் நிகண்டுச் சொற்கள் மாத்திரமே

யன்றி, ஆன்றோராட்சிக்கும் சொற்பொரு ளுணர்ச்சிக்கும் ஒத்துவாராத பலவகைப்பட்ட பாஷாந்தர மொழிகளும் பிறவுமாம். ஒருபாஷை நாள்தோறும் வளர்ச்சியடைந்துகொண்டே வருவதாயின், அதன்கண் நாகரிக விருத்திற்கேற்றபடி சில புதுச்சொற்கள், புகுந்து பயிலுதல் இயல்பே. ஆதலின் முன்னரே ஏற்பட்டுள்ள சொற்களைத்தவிர்த்து வேறு புதுச்சொற்கள் ஆக்கவகையானுதல் மேற்கோள் வகையானுதல் கொள்ளப்படாவென்பது அறிவுடைமையின்பாற்படுமோ? நந் தமிழ் மொழி பேசு நருட்பலருக்குச் சான்றோர் செய்யுட்சொல் இவையெனவும் சாமானிய வழக்குச்சொல் இவையெனவும் பகுத்தறிந்துகோடல் அரிதாயிருக்கின்றது. இக்குறையை நீக்கவேண்டுவது அகராதிகளின் கடமைகளி லொன்றன்றோ? இச்சொல் செய்யுட் சொல் என்றும் இச்சொல் இழிசினர் வழக்குச் சொல் என்றும்ஆங்கிலமுதலிய பிறபாஷைகளிலுள்ள அகராதிகள் வரையறுத்துக் காட்டுமாறுபோல நம் தமிழகராதிகளும் வரையறுத்துக் காட்டுதல் வேண்டும். இனிக் குழூஉக்குறிபோல வழங்குஞ்சில சங்கேதவழக்குச் சொற்களும் அகராதிகளில் தனித்தனியிடம் பெறுதல் வேண்டும். மரக்கலத் தொழில் செய்யும் மீகாமர் வழக்குச் சொற்களும், கொற்றொழிற் சொற்களும், கம்முத் தொழிற் சொற்களும், தச்சுத்தொழிற் சொற்களும், நெய்தற்றொழிற் சொற்களும் பிறவும் அகாராதிகளிற் காணப்படாவிட்டால் அவ்வகராதிகளாற் சிறப்பும் விசேடப்பயனுமில்லை யென்று துணிந்துரைக்கலாம். இன்னும் உள்ளவாறே நோக்குமிடத்து நிகண்டுடையா

ரும் பிழைபோன விடங்களுமுண்டு. உதாரணமாகச் சூடாமணி நிகண்டில் "சாகஞ் சாகினி வெள்ளாடு தேக்கெனுந் தருவு தேனீ" யென்று கூறப்பட்டுளது. 'சாகம்' என்ற சொல்லுக்குத் தேனியென்ற பொருளில்லை. 'சரகம்' என்ற சொல்லுக்கே அப்பொருளுண்டு. ஆகவே 'சரகம்' என்றதிலுள்ள ரகாரத்தைச் சகர ஆகாரத்தின் அறிகுறியாகிய காலென வரிவடிவிற் கண்டு மருண்ட மருட்சியே அப்பிழைக்கு உற்ற காரணமாமாறு தேற்றம். இவ்வாறு ஆராய்ச்சிக் குறைவால் நிகழ்ந்தவழூ பிற்றை நாளிலக்கியங்களிலும் இடம் பெற்றுவிட்டது. இலக்கண விலக்கியத்தெழுவரம் பிசைத்த சிவஞானமுனிவரது மாணுக்கருட் சிறந்தவரும், தணிகைப் புராண நூலாசிரியருமாகிய கச்சியப்ப முனிவர் தமது வண்டு விடுதூது என்னும் நூலின்கண் "எக்குலங்கடாங்கி யுகையாத சாகமே" என்று வண்டை விளிக்கின்றனர். ஆகவே நிகண்டேறி இலக்கியங்களிலும் பயின்றுவருஞ் சொற்கள் தவறுடையன வென்பது பின்னர் நிகழும் ஆராய்ச்சிகளிற் காணப்படினும் அவற்றைத் திருத்தப் புகுதல் ஒருநாளுஞ் சாலாது.

இனி இது நிற்க. ஆசிரியர் தோல்காப்பியனுர் "மொழிப்பொருட்காரணம் விழிப்பத் தோன்ரு" என்ருரேனும் இக்காலத்து ஆராய்ச்சிகளுக் கேற்றபடி நந்தமிழகராதிகளில் ஓராற்ருற் சொற்பொருட் காரணங்களுங் காட்டப்படுதல் வேண்டும். சில சொற்களின் அரும் பொருள்களுக்கு நல்லிசைப் புலவர்களது பாமுறைகளினின்றும் பிரயோகங் காட்டிச் செல்ல

வேண்டும் நம் அகராதிகள். ஆங்கிலம் முதலிய பிற பாஷைகள் நந்தமிழ் மொழிக்கு எத்துணையோ நூற்றாண்டுகள் பிற்பட்டுத் தோன்றிவரும் அவையனைத்தும் புதுமை வழிகளிற் புகுந்து சிறந்து குறைபாடுகளொழிந்து விளங்குதல் நாம் கண்கூடாகக் காண்பதொன்றன்றோ? ஆகவே யாம் மேற்கூறிய விஷயங்களை நமது மதுரைப் புதுத் தமிழ்ச்சங்கத்தின் அதிகாரிகளும் அவயவிகளும் செவிக்கொண்டு ஏற்றவாறு முயன்று தக்க தமிழகராதிகள் வெளிப்படுத்தித் தமிழுலகத்தைக் கடமைப்படுத்துவார்களென்று நம்புகின்றோம்.

---

## XIII. தமிழ் நூலாதரிப்போர்

முற்காலங்களில் செந்தமிழ் நூல்கள் சேர சோழ பாண்டியர்களென்னும் மூந்நாட்டு வேந்தர்களாலும் ஆதரிக்கப் பெற்றன. அதன்மேற் சிற்றரசர்களுங் குறுநில மன்னர்களும் ஆங்காங்குத் தோன்றித் தமிழ் நூல்களைப் போற்றுவாராயினர். பின்னர்த் திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய மடங்களின் அதிபர்களால் அவையாதரவடைந்து வந்தன. இக்காலத்தில் தென்னாடுகளிலுள்ள ஜமீன்தாரர்களுட் சில்லோரும் மேற்கூறிய மடாதிபதிகளும் தமிழை யாதரிப்பாராயினர். இடையிற் சென்னைச் சர்வகலாசாலையைச் சார்ந்த திராவிடபாட சபையார் தாமுந் தமிழ் நூல்களை யாதரிப்போமெனப் புகுந்து சென்ற சில்லாண்டுகளாக ஓராற்றால் தமிழ் நூல்களுட் சிலவற்றைப் பற்பல பரீக்ஷைகட்கும் பாடமாயேற்படுத்தி வாராநின்றனர்.

இனி அற்றை நாட்களில் வெளிப்பட்ட தமிழ் நூல்கள் சங்கங்களிலும் அவைக்களங்களிலும்மடத்து வித்துவான்கள் முன்னிலையினும் புலவர்கள் முன்னிலையினும் ஆராயப்பெற்று மதிப்பெய்தி வந்தன. இற்றை நாட்களில் வெளிப்படும் நூல்கள் அத்தகைய ஆராய்ச்சிக்கிடனின்றித் தாமே அச்சுவாகன மேறி யுலவுகின்றன. நூலாராய்ச்சிக்கென ஏற்பட்ட சபைகளுந் தந் தொழிலை நேரிய வழிகளிற் செய்கின்றன வல்லவாய்க் கழிகின்றன. சென்னைத் திராவிட பாஷா சங்கமெனப் பெயர் புனைந்தெழுந்து சின்னாள் ஆரவாரஞ் செய்து நின்ற சபையுந் துயின்மேற் கொண்டது. அச்சியந்திரங்களினுதவியால் அளவிறந்த நூல்கள் வெளிப்படும் இக்காலத்தில் அவ்வந் நூல்களின் ஏற்றத்தாழ்வுகளை யுள்ளவாறே குறித்தற்குத் தக்க கருவிகள் இன்னும் நன்கு ஏற்பட்டில. இத்தகைய கருவிகளை யினிதமைத் தற்குரிமையும் ஏற்றமும் வாய்ந்து நிற்பது மதுரைப் புதுத்தமிழ்ச் சங்கமேயாம்.

இதுநிற்க, சர்வகலாசாலைத் திராவிட பாடசபையாரால் ஆதரிக்கப் பெற்று வெளிவந்த நூல்கள் எத்துணை? அவர்கள், நூல்கள் அச்சிடப்பட்ட பின்னர்த் தமக்கு விருப்ப மிருந்தால், அவற்றுள்ளும் சிலவற்றிற் சிறிது பாகமே பாடமென ஏற்படுத்துகின்றனர். அவைகளும் பெயர்த்து இரண்டாமுறை யச்சிடப்படுதல் வேண்டும்; அவற்றின் விலையும் மிகக் குறைவாயிருத்தல் வேண்டும். அல்லாக்கால் அவை கவனிக்கபடா இத்தகைய ஆதரவுடையார் நந்தந் தமிழ் நூல்களைப் பாடம் வைத்தாலென்? வையாக்

கலென்? கும்பகோணக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும் மகாவித்துவானாகிய பிரமஸ்ரீ சாமிநாதையரவர்கள் தாம் சிந்தாமணியாதிய நூல்களைப் பதிப்புத்துழிச் சென்னைச் சர்வ கலாசாலைத் திராவிட பாடசபையாரை நம்பியோ பதிப்பித்தனர்? தமிழபிமானிகளன்றே அவர்பதிப்பிக்கும் நூல்களை விலைக்குப் பெற்றுப் படிப்பாராயினர்? அவரன்றே 'தமிழ் நூல்களையாதரிப்போர்' என்னும் பெயர் வகித்தற்குரியார்? ஆங்கில மொழியில் நாடகப் புலமை சான்று விளங்கிய *ஜெகப்பிரியர்என்பார்தாமியற்றியநாடகமொன்றனுள்; காதல் கொண்டுழலு மொருவனைக் கண்ட பிறனொருவன் அவனை நோக்கி, "நீ காதலித் துழலத்தக்கவளவு வருத்திய அந்நல்லாளின் இனிய பெயர் யாது கொல்?" என்று கேட்டனன்; அதுகேட்ட காதலன் "இராஜலதை" யென்றான்; உடனே பெயர் கேட்டவன் "அஃதெனக்கு இன்பந்தரவில்லை" யெனலும், மற்றையோன் "அவட்குப் பெயரிடும்போது நம்மை யின்புறுத்தல் வேண்டுமென்ற கருத்தில்லை கண்டீர்" என்று கூறினனெனக் கூறி நின்றனர். இது நம்முடைய விஷயத்திற்கு மிகவும் பொருத்தமுளதே. இரண்டொருவரைத் தவிர்த்துத் தமிழ்நூல் வருக்குமேனையோரெல்லாம் மேற்கூறிய பேரறிவாள ருதவியைக்கருதி யெழுதுகின்றாரல்லர்.

"மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
வுன்னை யறிந்தோ தமிழை யோதினேன்—னென்னை

* Shakespeare

விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு'' (உஉ)

என்று மன முளைந்துரைத்தார் கவிச்சக்கரவர்த்தியும். அவரே எவ்வாற்றானு முயர்வு வாய்ந்த அரசனுதவியை யிகழ்ந்து சாமானிய ஜனங்களுடைய மதிப்பையே பெரிதெனக் கொண்டு நின்றார். அவர் போலவே தமிழ் நூலாசிரியராவார் யாவரும் தம்மை யாதரிப்போர் சாமானிய ஜனங்களாகிய தமிழ் மக்களே யன்றி யேனை யோரல்ல ரென்பது துணிந்து அதற்குத்தக வொழுகு வாராக.

## XIV. சுதேச பாஷை நீக்கம்

சென்ற சின்னாட்களாகச் சுதேச பாஷைகளாகிய தமிழ் தெலுங்கு மலையாளங் கன்னட மாதியவற்றை நஞ் சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளினின்றும் நீக்கிவிடல் வேண்டு மென்றதோர் பேச்சு வெள்ளிடை யினுலவா நின்றது. அஃதெங்ஙனம் நிகழ்வதாயிற்று?

நமது கனம் பொருந்திய இராஜப் பிரதிநிதியவர் களது ஆணையின் வண்ணம் சர்வகலாசாலை விசாரணை சபையோர் நஞ்சென்னை, யிராஜதானியிற் கற்பிக் கப்படும் கல்வியினேற்றத் தாழ்வுகளைப்பற்றி யாராய் வான்புக்கனர். புக்குழி அவரவர் தத்தம் அபிப்பிராயங் களை எடுத்துரைத்தனர். அவ்வாறு அபிப்பிராய முரைத் தாருள் நம்முடைய சென்னை வித்தியா விசாரணைத் தலைவரு மொருவர்.

இவர் "சுதேச பாஷைகள் கௌரவஞ்சான்றன வல்லவாதலானும், இவையிற்றைக் கீர்வாண கிரேக்க

லத்தின் பாஷைகளோ டொருங் கெண்ணுதல் வசை யிழைத்தல் போலாதலானும் இவற்றின்கண் தூயநூற் றொகுதிகளும் லௌகீகவிடய ஞானத்திற்கேற்ற நூற் றொகுதிகளு மின்மையானும் இவை காலத்திற்கேற்ப அமைந்துகொள்ள மாட்டாமை யானும், பிராணதார ணப் பிரயத்தனத்தில் அழிந்து படற்பால வாதலானும், பிறவாற்றானும் இவற்றைச் சர்வகலாசாலைப் பரீட்சை கட்குக் கற்றற் குரியனவா யமைத்தலின்றி அறவே ஒழித்துவிடல் வேண்டும்'' என அந்தோ! வாய்கூசாது தம் உட்கிடை உரைத்தார். என்னே இவர்தங் கருத்து! எல்லாப் பாஷைகட்கும் பெருந் துணைவராய் நின்று உதவவேண்டிய தலைவரே பேதுற்றுப் பிறிது படவுரைத் தா லென் செய்வது ?

சுதேச பாஷைகளே இக்காலத்து ஈண்டைமக்கள் வழங்கிப் பேசும் பாஷைகளாய் விளங்குதலின் இவை காலத்திற் கேற்ற கோலம் புனைந்துகொள்ள மாட்டா தன வென்றல் வெற்றுரையா மாதலானும், இவைகளே புதிய கருத்துக்களுள் ஏற்பனகொண்டு நீர் பிரித் தொதுக்கித் தீம்பாலுண்ணும் அன்னப்புட்கள் போனு தலானும், திருக்குறளாகிய தூயநூல்கள் பல முன் னரே யுண்மையானும், மேற்புல விஞ்ஞானிகளது கொள்கை கட்கியைய லௌகிக விடய ஞானநூல்கள் பலசுதேசபாஷைகளில் நாளாவட்டத்தில் வெளிப்படு கின்றமையானும், ஏட்டு வழக்கோடு பேச்சுவழக்கு முடையனவா யொளிர் வனவற்றைப் பேச்சுவழக்கற் றேட்டுவழக்காய் மட்டில் நிற்பனவற்றோ டொருங்கு வைத்தெண்ணுதல் வசையிழைத்தலாமென்பது 'யானு

மறியேன், அவனும்பொய்சொல்லா' னென்ற கம்பர் கூற்றிற்கிலக்கியமாய் எம்முறையையே வலியுறுப்பதாய் அறைபோதலானும், மக்களைச் சீர்திருத்துவதற்குற்ற பெருங் கருவிகளாயிருப்பன அவரிடம் பயிலும் சுதேசபாஷைகளாமேயன்றி மற்று வழக்காறற்றொழிந்த ஏனையன வல்லவாமாதலானும், கௌரவஞ்சான்றனவற்றை அத்தகைய வல்லவென்றுரைத்தல் பெற்ற தாயை மலடியென்றுரைத்தலோ டொக்குமாதலானும், இதுகாறும் பிராணதாரணப் பிரயத்தனத்தில் வடமொழியாதியபோலழிந்து படாது தக்கன தங்கள் முறைப்படி இவையனைத்தும் மிக்க பயன்பாடுடையனவாய் நிற்றலானும் பிறவாற்றானும் வித்தியா விசாரணைத் தலைவருரைத்தது போலியென்றொதுக்கற் பாலதாமாறு தெற்றென விளங்கும்.

சுதேசபாஷைகளின் வன்மையும் ஊற்றமும் பழையனகழிந்து புதியன புகுந்து இயங்குமேம்பாடும், நாகரிகவிருத்திக்கேற்ற இயல்வளமும் செப்பமுடைமையுங் கண்டு பல விடங்களினும் அவை முன்னுக்கு வருதலைப் பெரிதும் விரும்பிவாய்ப்பறை யறைந்து முழங்கிய இராஜப் பிரதிநிதியவர்கள் தமது சென்னை வித்தியா விசாரணைத் தலைவரொருவருடைய உரைகேட்டுச் சுதேச பாஷைகளின் நீக்கத்திற் கிடங்கொடாரென்பது திண்ணம்.

# XV. சர்வகலாசாலை விசாரணை

நாம் முன்னர் இந்த விசாரணை சபையாரைப்பற்றி யெழுதி யிருந்தோம். இவர்களுந் தாங்கள் இந்தியா வின் கணுள்ள சர்வ கலாசாலைகள் யாவற்றையும்பற்றி விசாரித்துச் சீர்திருத்த வேண்டிய அம்சங்களாவன இவை யெனக் கண்டு, அவற்றைக்குறித்துத் தங்க ளுள்ளே கூட்டங்கூடிக் கடாவிடைகளான் ஆராய்ந்து, தங்களுடைய அபிப்பிராயங்கள்பொதிந்த சிறு புத்தக மொன்று பதிப்பித்து வெளியிட்டிருக்கின்றனர்

இப்புத்தகத்திற் கூறப்பட்டுள்ளபலவிஷயங்களைப் பற்றி நம்மவருட் கற்றறிந்த பலர் பயப்படுவாராயி னர். வடநாட்டிலேயுள்ள ஐரோப்பியர் இதனை முற் றிலும் அங்கீகரித்தனர். தென்னாட்டிலேயுள்ள ஐரோப் பியரிற் சிலர் இதனைச் சிற்சில பகுதிகளில் அங்கீகரிக்க வில்லை. இந்தியப் பத்திராசிரியர்களெல்லாம், அப்புத் தகத்தினுட் கருத்து இராஜ தந்திர பொறாமை யென் பதும், இந்தியரது உயர்தரக் கல்வி விருத்தியை ஒரே யடியில் தொலைத்துவிடல் வேண்டுமென்பதுமே யென்று வாதாடுகின்றன.

இவ்விரு திறத்தார் கூற்றும் தம்முள் வேறுபடு கின்றமைக் குற்ற காரணங்கள் யாவை? மேற்கூறிய விசாரணை சபையாரது கருத்து இந்தியாவின்கணுள்ள சர்வகலாசாலைகளெல்லாம், கல்வி முறை, படிப்பிக்கும் ஒழுங்கு, மாணுக்கர் கல்வியளவு முதலிய பல விஷயங் களினும் ஒரு நிலைப்பாடு அடைதல் வேண்டுமென்பதே. இதனைச்சாதித்து முடிக்குமுகத்தான், மாணுக்கரது

ஒழுக்க விசாரணைக்குரிய முறைகளுமுடன் கூறியிருக்கின்றனர்.

முதற்கண், சர்வகலாசங்க நாவலர்களும், சர்வகலா சங்கப் புத்தகசாலைகளும் தொழிற்சாலைகளும் மாணவர் விடுதிகளும் ஏற்படுத்தப் படுதல்வேண்டும். இவ்விஷயம்யாவருக்கும் ஒப்பமுடிந்ததென்றெண்ணுகின்றோம். இதனுனே நம் நாட்டிற்குப் பலவகையான அனுகூலங்களும் விளையலாம்.

இரண்டாவதும் மூன்றாவதும் சர்வகலா சங்கத்தின் அவயவிகளையும், சர்வகலாசங்க நிர்வாக சபையாரையும் பற்றியன. இவர்களைப்பற்றிய விதிகளைப் பற்றி விரித்தெழுதல் ஓராற்றால் அமைவுடைத் தெனினும், நாம் அதிகமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னும் பல விருத்தலின் இவற்றை விடுத்துமேற் செல்வாம்.

நான்காவது, சர்வகலாசாலைகளைச் சார்ந்தொழுகுங் கலாசாலைகளெல்லாம் நடக்கவேண்டிய முறையாம். இம்முறை கூறுமிடத்துக் கலாசாலைகளிற் போதனை சிறக்கும்படி உதவிப் போதகாசிரியர் பலரையமைதல்வேண்டுமென்பதும், மாணுக்கர்கள் சம்பள வொருமைப்பாடுங் கூறப்பட்டுள. இதை மட்டிற் கூறப்பட்டிருந்தால் எல்லாருமே யொத்துக்கொள்ளாமற் போயினும், பலராதல் ஒத்துக்கொண்டிருக்கக்கூடும். இவையன்றிக் கலாசாலை யென்னும் பெயர்க் குரியன வெல்லாம், இருந்தாற் பி. ஏ. முழுவதுமுள்ள முதற்றரக் கலாசாலையா யிருக்கவேண்டும்; இரண்டாந்தரக் கலாசாலைகளெல்லாம் ஒழிந்துபட வேண்டு

மென்பதுங் கூறப்பட்டுளது. இது நம்மவர் பலர்க்குத் திருப்திகரமில்லை. பிரவேச பரீக்ஷை மட்டிற் கற்பிக்கும் பள்ளிக்கூடங்களாக வாதல், பி. ஏ, பரிக்ஷைவரையிற் கற்பிக்குங் கலாசாலைகளாக வாதலிருக்க வேண்டும். நடுத்தரமான பிரதமகலா பரீக்ஷைமட்டிற் போதிக்குங் கலாசாலைகள் வேண்டுவன வல்ல வென்றல் பலர்க்கும் வெறுப்பு விளைக்கத் தக்க விஷயமன்றோ? சிறிது சிறிதாய்க் கஷ்டப்பட்டு முதல் சேர்த்து இரண்டாந்தரக் கலாசாலை யாகுமளவு முயன்ற பரோபகாரிகளெல்லாம் என் செயற்பாலர்? பணமிருந்தாற்றான் நன்று; அல்லாக்கால் என் செய்வது? பின்னிடைந்து பள்ளிக்கூட நிலைக்குக் கொணர்வதோ. இஃது அருமையாய் வளர்த்தவொரு பெருங்கிளியை, வளர்த்தவன் தானே வாளால் துணிப்பதாமன்றோ?

ஐந்தாவது, கல்விமுறை பரீக்ஷைமுறைகளைப் பற்றியதாம். மாணாக்கர் கல்வியளவு பிரவேச பரீக்ஷை, நடுநிலைப் பரீக்ஷை, பி. ஏ, பட்டப் பரீக்ஷை அல்லது பி எஸ்ஸீ., பட்டப் பரிக்ஷையென்ற மூன்றனானும் பரிசோதிக்கப்படும். பிரவேச பரீக்ஷைப்பாடங்களுட் பொருள்வலி நூலும், பொருட்டிரிவு நூலும் நீக்கப்பட்ட நடுநிலைப் பரீக்ஷைப் பாடங்களுட் சரித்திரமும் உடனூலும் நீக்கப்பட்டன; இவற்றிற்குப் பிரதியாகத் தருக்க நூலும், பிரவேச பரீக்ஷைக்கு வேண்டாவென்றொதுக்கிய பொருள் வலிநூலும் பொருட்டிரிவு நூலும் பாடங்களாக ஏற்படுத்தப்பட்டன. இனிப் புதிதாகவேற்பட விருக்கும் பி. ஏ , பட்டப் பரீக்ஷைப் பாடங்களாவன; ஆங்கில பாஷையும், இலத்தீன், கிரே

க்கு ஸமஸ்கிருதம் என்பவற்றுளொன்றும் தத்துவ நூலும், கணித நூலும் அல்லது சரித்திரமும் செல்வ நூலுமாம் இப்பரீக்ஷைப் பாடங்களில் தமிழ் தெலுங் காதிய சுதேச பாஷைகளொருங்கே தள்ளுண்டு புறக் கணிக்கப்பட்டன; தத்துவ நூலும் கணித நூலும் அல்லது தத்துவ நூலுஞ் சரித்திர செல்வ நூல்களும் வலியுறுத்தப்பட்டன. பி. எஸ்ஸி. பட்டப் பரீக்ஷைப் பாடங்களுள் ஆங்கில பாஷையுமில்லை; இரண்டாம் பாஷையுமில்லை; மற்றுக் கணித நூலும் பொருள் வலி நூலும் பொருட்டிரிவு நூலுமாம்; அல்லது பொருள் வலிநூலும் பொருட்டிரிவு நூலும் உயிர் நூலுமாம்.

இனிமேற் கூறிய விசாரணை சபையாராற் சுதேச பஷை நீக்கமும் சம்ஸ்கிருத பாஷையின் இன்றியமை யாமையும் வலிவுறுத்தப்படுகின்றன. பள்ளிக்கூடப் பரீ க்ஷை கட்குச்சுதேச பாஷைகளுண்டெனவும், சர்வக லாசாலைப்பரீக்ஷைகட்கு அவைகளில்லையெனவுங் கூறு வதனால் விளையுந்தீங்குகள் பலவா மென்பதிற்றடை யில்லை. இக்காலத்திலுள்ள மாணுக்கர்கள் சர்வகலாசா லைப்பரீக்ஷைப் பாடங்களில் விசேஷ கவனமுடையாரே யன்றி, மற்றுப்பள்ளிக்கூடப் பரீக்ஷைகளிற் கவன முடையாரல்லர். ஆதலிற் சம்ஸ்கிருதப் படிப்பே சுதேச பாஷைப் படிப்பினும் மிகுமேயன்றி வேறில்லை. அவ் வாறு மிக வேண்டுமென்பதே சர்வ கலா சாலை விசா ரணை சபையாரது கருத்தாமென்று அவர்கள் தாமே வெளிப்பட கூறியிருக்கின்றனர்.

அவர்கள் அங்ஙனங் கூறுதற்குற்ற காரணங் களைப்பற்றி யாம் ஆராய வேண்டுவது அவசியமே.

அவையாவன: முதற்கண் ஏதேனும் ஒரு சுதேச பாஷையை மேற்கொள்வதனால் நூற்செல்வ வாய்ப்புடையதும், ஏதேனுமொரு மனிதவர்க்கத்தாரின் கருத்துக்களும் செயல்களுமடங்கிய குறிப்புக்கள் நிரம்பியதுமாகியதோர், உயர்தனிச் செம்மொழியினுணர்ச்சியானேற் படக்கூடிய அநுகூலங்களனைத்தையும் மாணாக்கரிற் பலர் இழந்தவராவாரென்றும்; சுதேச பாஷைகளின் இன்றியமையாமையைப்பற்றி விசேஷ ஆர்வத்தோடு வாதாடுவோரும், சமஸ்கிருதத்திற்குச் சமானமாக, நூற்செல்வ வாய்ப்புடையதோர் இந்திய சுதேச பாஷை யெதுவுமில்லையென்ற கூற்றிற்கிணங்குவரென்றும்; இரண்டாவது ஓர் உயர்தனிச் செம்மொழியைக் கற்றலானேற்படும் உள்ளப்பயிற்சியினளவு, ஒரு சுதேச பாஷையைக் கற்றலானேற்படுவதனினும் மிகவும் அதிகமாமென்றும்; மூன்றாவது, உயர்தனிச் செம்மொழிகளின் கல்வி, அவற்றோடியைபுடைய சுதேச பாஷைகளின் வளர்ச்சிக்கு, இன்றியமையாச் சிறப்பினதாமென்றும்; சென்னையிலுள்ள சுதேச பாஷைகளைக்காட்டினும்; வங்காளத்தினும் பம்பாயினுமுள்ள சுதேச பாஷைகள் வெகு விரைவாக முதிர்ச்சியடைந்து நூற்ச்செல்வ வாய்ப்புடையனவாய்ப் பொலிதல் இவ்வுண்மையை வலியுறுத்துமென்றுங் கூறப்படுவனவாம். இக்காரணங்களின் உண்மையை யாராயுமிடத்துத் தமிழொன்றனையே யுதாரணமெடுத்து வாதிப்போம்.

முதற்கண் தமிழையுண்ணூட்டுச் சுதேச மொழிகளுட்படுத்ததே பெரும்பிழை. வடநாட்டுச் சுதேச

பாஷைகட்குச் சம்ஸ்கிருதம் உயர் தனிச்செம்மொழி யாதல் போலத் தென்னாட்டுச் சுதேச பாஷைகட்குத் தமிழே உயர்தனிச் செம்மொழியாகுமாறுணர்ந்து, இதனையும் உயர்வகுப்பிற் படுத்தலன்றி, இழிகுப்பின் பாற்படுத்தமை நேரிதன்று.

“பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத்
துடைக்கினுமோ
ரெல்லையறு பரம்பொருண்முன் னிருந்தபடி
யிருப்பதுபோற்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா
ளமுந்துளுவு.
முன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல
வாயிடினு
மாரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து
சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன் மறந்து
வாழ்த்துதுமே” (உரு)

என்றார் காலஞ்சென்ற திருவனந்தைச் சுந்தரம் பிள்ளை யவர்களும். இக்கருத்துக் காலஞ்சென்றதி. மி. சேஷ கிரி சாஸ்திரியாரவர்கட்குமுடன் பாடாதல் அவரது ஆந்தரசப்ததத்துவநூலினால் தெற்றென விளங்கும். மேலும் சம்ஸ்கிருதத்தை மட்டிற்படுத்துப் பண்டைகா லத்து ஆரியாது ஆசாரங்களுங் கருத்துக்களும் உணர் தல் மட்டும் போதுமா? தமிழின் கண்ணும் வடமொழி யினும் அதிகமில்லையாயினும், அதற்கிணையாகவாதல் நூற்செல்வவாய்ப்புண்டென்பது தேற்றம். வடமொழி தென்மொழியென இவ்விரண்டும் ஒரு நிகரனவாகவே

பாவிக்கப்பட்டு வந்திருப்ப, இப்போது மட்டில் ஒன்றையுயர்த்தும் மற்றொன்றைத் தாழ்த்து முரைத்தல் சாலாதென்க. இனிச் சிறப்புடைய தனிச் செந்தமிழ் நூலகளை மாணுக்கராயினுர் இப்போழ்தேற்படும் விதியி படியாது போவரன்றே? இந்நஷ்டம் எவ்வாறு ஈடு செய்யப்படுமோ ? அறிகிலேம். நிற்க.

சமஸ்கிருதத்திற்கு இணையாக வேறெந்த இந்திய பாஷையும் எடுத்துக் கூறுந் தரத்ததன்றென்றல் துணிந்து கூறுதலாம். எமது தமிழ்மொழியும் அதற்கு எவ்வாற்றானும் சமமான தேயன்றித் தாழ்ந்ததன்று. இது வடமொழிக்கடலும் தென்மொழிக் கடலும் நிலைக்கண்டுணர்ந்த சிவஞான முனிவர்க்கு முடன் பாடென்க. "இருமொழியுநிகரென்று மிதற்கைய முளதேயோ?" என்று அம்முனிவர் பிரான் முழங்கிய முழக்கத்தினைச் சற்றே செவியிலேற்பீர், அறிவான்மிக்கீர்!

எமது பைந்தமிழும் ஓர் உயர்தனிச் செம்மொழியாமாதலின் இரண்டாவதாகவும். மூன்றுவதாகவும் கூறிய காரணங்கள் எமக்கும் உடன்பாடேயாம். ஆகவே தமிழினை ஒரு சுதேச பாஷையெனக் கருதி விதிகள் வகுத்தல் பிழையெனத் தெருண்டு அதற்குத்தகவொழுகுவாராக.

இவ்விசாரணை சபையார் 'எல்லு செட்டிலக்கைமே கலக்கை' யென்றபழமொழியின் படியும் 'சொக்கனுக்குச் சட்டியளவு' என்ற பழமொழியின் படியும், இந்தியாவின் கணுள்ள சர்வகலாசாலைகளனைத்தையும் ஒரு படியின் வாக்க வெண்ணங் கொண்டுவிதிகள் வகுத்தள பான்மையாவரும் மேற்கொள்ளுந் தரத்ததன்று. அவ்

வம் மாகாணத் தினியல்புக்குத்தக்கவாறு சிற்சில வேறுபாடுகளு மிருத்தல் இன்றியமையாத தென்றவுண்மை உளநூற் புலமை சான்றோர் யாவர்க்கு மொப்பமுடிந்ததே. ஆகவும் இவ்வுண்மையி னின்றும் மேற்குறித்த சபையார் விலகிச் சென்றமை வியக்கத் தக்கதே.

மேற்குறித்த வேறுபாடுகளுள் மிகவும் வேண்டற்பலது சுதேச பாஷைகளை வலி யுறுத்துவதே யாம். அஃதாவது தமிழ், தெலுங்காதிய தென்னாட்டுப் பாஷைகளைச் சென்னைச் சர்வகலாசாலைப்பரீக்ஷைகளினின்றும் நீக்காது போற்றுதலாம். வடக்கேயுள்ள சுதேசபாஷைகளெல்லாம் சமஸ்கிருதத்தின் பிராகிருதங்களாய் அதனோடியைபு பட்டிருத்தலின்; அவற்றை யற வொழிக்குமிடத்து வங்காள முதலிய வடநாட்டினர் இடர்ப்பாடுகா ணாராயினர் இதுபற்றி யன்றே தென்னாட்டுப் பாஷைகளி னியல் புணராத நீதிபதி குருதாச பானர்ஜியவர்களும் சுதேசபாஷை நீக்கத்திற்கு ஓமென விணங்குவா ராயினர். மற்றுத் தென்னாட்டுப் பிரதிநிதிகளாயிருந் தோரும் அவ்வமயத்து வாய் வாளாமை மேற்கொண்டிருந்துவிட்டனர் போலும்.

தமிழ்மொழி சம்ஸ்கிருத்தி னின்றும் வேறுபட்ட பாஷையாமென்பது, ‘தென்மொழி, வடமொழி’ யென்னும் அவற்றின் பெயர் வழக்கினனே வலியுறுமாறு காண்க. எப்பொழுது தமிழ் மொழி சமஸ்கிருதத்தினின்றும் வேறுபட்டதா கின்றதோ: அப்பொழுதே தெலுங்கு, கன்னடம், மலையாளமாதிய தமிழின் வழிமொழிகளும் வேறுபட்டனவா மென்பது திண்ணம். காலாந் தரத்தில் இத்தென்னிந்திய பாஷைகள் சிற்சில

வடசொற்களை மேற் கொண்டதனால் இவையனைத்தும் வடமொழியின் வழிமொழிகளாகமாட்டா வென்பது யாவரு முணர்ந்த விஷயம். வளர்மொழிகள் நாடோறும் புதியபுதிய சொற்களைப் பிறமொழிகளி னின்றும் மேற் கோடலியல்பே. தமிழ்மொழியின் கண்ணே பல திசைச் சொற்களும் வந்து வழங்குதல் காரணமாக அவ்வத்திசை மொழிகளின் பாகதமெனத் தமிழ் மொழியைக் கூறுவாருமுளரோ?

இனித் தென்னிந்திய பாஷை நீக்கத்தால் விளையுந் தீங்குகளோ அளவிறந்தன. இக்காலத்திற் கலாசாலைகளில் தென்னாட்டுப் பாஷைகள் பயில்வார் தொகையே யதிகமாக வடமொழிபயில்வார் தொகை மிகக்குறைவே. இதனாலறிய வேண்டுவது தென்னாட்டுப் பாஷைகளி னின்றியமையாமை. இப்பொழுது தமிழை நீக்கி அதனிடத்து வடமொழியை வைத்துப் பயிற்று விக்கத் தொடங்கு மிடத்துப் பிராமண ராயினார்க்கு விசேஷமான அநுகூலமும், ஏனையோர்க்கு விசேஷ பிரதி கூலமும் விளையுமென்க. இந்நாட்டுப் பிராமணர் தமது வீட்டிற் பேசுவது தமிழே யாயினும், அதன்கண்ணே வடசொற்கள் அதிகமாகக் கலந்தே பேசுவாராயினர்; சமஸ்கிருதோச்சாரண நாடோறும் அவரது நாவிற் பயிலுதலின் அஃது அவர்க்குப் புதுமையன்று. ஆகவே அவர்கள் வெகு சுலபமாக சமஸ்கிருத பாஷாப்பியாசஞ் செய்துவிடுவர். மற்றுத் தமிழர்களோ வம்ச பரம்பரையாகத் தமிழே பேசுவதனாலும், வடசொற்களை யதிகமாகத் தம் பேச்சில்வழங் காமையாலும், வழங்கினும் அவற்றைத் திரித்துத் தமிழாக்கி வழங்குவாராத

லானும், அவர்கள் வடமொழி யுச்சாரணத்திற்குப் புதியராதலானும், சம்ஸ்கிருத பாஷையைப் பயில் வுழிப் பெரிதும் இடர்ப்படுவர். ஆகவே, இப்புதிய வேற்பாடு யாவர்க்கு மொப்ப அநுகூலமாகாது. ஒரு திறத்தார்க்கு அநுகூலமும் மறுதிறத்தார்க் குப்பிரதி கூலமுமாகவே முடிதல் கண்கூடாகத்தெரிந்த விஷயம். எனவே தென் மொழி நீக்கமும், வடமொழி யாக்கமும், பக்ஷபாதக மாக முடிகின்றமை காண்க.

இஃதன்றியும், தென்னிந்தியாவின் க்ஷேமகரத் தைக் கருதினுற் சுதேச பாஷைகள் நிலைநிறுத்தப்படல் வேண்டும். தென்னிந்தயாவிலுள்ளோர் இதுகாறும் ஆத்மசம்பந்தமான நூல்களிலேயே பொழுது போக்கி னர். இதற்கு வடமொழி பேருதவிபுரிந்தது. இனி மேலாதல் அவர்கள் நாட்டினியல்புணர்ந்து லோக சம் பந்தமான நூல்களிற் காலங்கழித்துப் பல சாதியார் முன்னும் உயரவேண்டாமோ? இவ்வுயர்ச்சிக்குச் சுதேசபாஷைகளே பேருதவி புரியத்தக்கன. இது கருதி யாதல் சுதேச பாஷைகள் சர்வகலாசாலையாரால் நிலை நிறுத்தப்படுவனவாக.

இனித்தாம் நாடோறும் பேசிப்பயி லுறாஉம் சொந்த பாஷையைக் கற்றுத் தேர்தலினும் தாம் பயி லாத வடமொழியாகிய பிறபாஷைகளைக் கற்றுத் தேர் தல் மிக நலமுடைத்தென்று கருதா நின்றனர் சிலர். அவர்கள் அங்ஙனங் கருதுதற்குற்ற காரணம் முன் னது எளிதின் முடிவதும் பின்னது அரிதின் முடி வதுமாய் நிற்றலின், முன்னதன் கண் ஏற்படும் மனப் பயிற்சியினும் பின்னதன்கண் ஏற்படும் மனப்பயிற்சி

மிகவும் அதிகமாகிப் பயின்ற மாணவர் உள்ளங்களை விரித்து மலர்த்தி வியாபகமாக்குகின்றது என்பதாம்.

இன்னாரது தருக்கவன்மையைச் சிறிது ஆராய்வாம். முதற்கண் சொந்தபாஷைப் பயிற்சி யெளிதின் முடிவது என்பது * நிகமனம் தமிழ்மொழி சொந்த பாஷையாமாதலின், 'தமிழ்ப்பயிற்சி சொந்தபாஷைப்' பயிற்சி என்பது † உபநயம் எனவே யிவற்றினின்றும் போதருந்துணிவு 'தமிழ்ப்பயிற்சி யெளிதின் முடிவது' என்பதாம். இது ‡ பக்கம். ஈண்டுக்கூறிய இவரது பக்கம் உண்மையிற் பொருந்துவதோ வென்று பார்க்குமிடத்துத் தமிழ்ப் பயிற்சி இக்காலத்தில் மிகவரிதின் முடிவதாய் விளங்குவதே யன்றியும், ஆங்கிலம் முதலிய பிறபாஷைப் பயிற்சி மிகவெளிதின் முடிவதாயும் விளங்குகின்றது. ஆதலின் மேற்கூறியாரது பக்கம் போலியாய் மேற்கொண்ட நிகமனமும் அறைபோதல் காண்க.

இது நிற்க. சர்வ கலாசாலை விசாரணை சபையார் சுயபாஷைப் பயிற்சி இன்றியமையாத தென்றும், அப்பாஷைகள் இக்காலத்தில் நன்கு கற்பிக்கபட்டில வென்றுங் கருதிச் சிலஏற்பாடுகள் செய்யவேண்டுமென்கின்றனர். அவ்வேற்பாடுகளாவன:— (1) பிரவேச பரீக்ஷை மாணாக்கர்களுக்குக் கொடுக்கும் சுயபாஷை வினாப் பத்திரிகையைக் கடினமாக்குதல் (2) சர்வ கலாசாலை பரீக்ஷைகளில் சுயபாஷைகளிற் கட்டுரை யெழுது மாறுசெய்தல் (3) * கலாநாயகப் பரீக்ஷைக்குச் சுய

---

* Major Premise. † Minor Premise. ‡ Conclnsion.
* Master of Arts.

பாஷைகளுண்டு; அஃதாவது அவற்றின் மட்டிலேயே பரீக்ஷிக்கப்பட்டுப் பட்டம் பெறலாமென்பது. ஈண்டுக் கூறிய மூவித வுபாயங்களாலும் சுயபாஷைகள் முன்னுக்கு வாராவென்பது மலையிலக்கே. இஃது ஒட்டகத்திற்குச் சுளகு மாற்றுதலென்ற கதையாய் முடிகின்றதேயன்றி வேறன்று.

ஆதலின், நமது இந்திய துரைத்தனத்தார் இவ்விஷயத்தைக் குறித்து மிட்டுஞ் சிந்தை செய்து தாம் அவசரப்பட்டு ஏற்படுத்திய விதிகளை மாற்றிச் சுதேச பாஷைகளைச் சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில் வைத்து ஆதரிப்பாராக.

---

## XVI. சுதேச பாஷையாக்கம்

வடமொழியினின்றும் உருவவகையானும் உறுப்பு வகையானும் ஒலி வகையானும், இலக்கண வகையானும் நூற்பரப்பு வகையானும் வேறுபட்டு இயங்குகின்ற தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமென்ற தென்னாட்டு மொழிகளை அறியாமை காரணமாகவும் வட சொற்களுட் சில இப் பாஷைகளுட் பயிலுகின்றமை காரணமாகவும் மருண்ட சிலர் சுதேச பாஷைகளை யொழித்துவிட்டு அவற்றிற்கு பிரதியாக வடமொழி பயிலுதலே சிறந்ததென்று முழங்கிய முழக்கம் தென்னுடெங்கும் நடுங்களுர் விளைத்தது. பண்டிதர் பலர் ஏங்குவாராயினர். சாமானிய ஜனங்கள் எல்லாம் துன்பக்கடலுளாழ்ந்தனர். பலர் ஆங்காங்கு சபைகள் கூட்டிச் சுதேச பாஷைகளைச் சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளினின்றும் நீக்கப்படாது போற்

றிக் கொள்ளப்படல் வேண்டுமென்று விண்ணப்பங்கள் இராசாங்கத்தார்க்கு அனுப்பினர்.

இவையனைத்தையும் உய்த்துணர்ந்த இந்திய துரைத்தனத்தார் உடனே காலந்தாழ்த்தலின்றி நமது சென்னைத் துரைத்தனத்தாரிடத்திற்குத் தந்தியனுப்பிச் சென்னைச் சர்வகலாசாலையரது அபிப்பிராயம் இவ்விஷயத்தின் கண் எவ்வாறுளது என்று விசாரிப்பாராயினர். அவ்வாறே சென்னைச் சர்வகலாசாலை யாரும் கூட்டங்கூடி இவ்விஷயத்தைக் குறித்து ஆராய்ந்தனர். அவ்வாராய்ச்சியின் முடிவாகவும் கடவுளின் அருளாகவும் சுதேச பாஷைகளின் அதிர்ஷடமாகவும் இவையனைத்தும் சர்வகலாசாலைப் பாடங்களினின்று நீக்கப்படாது போற்றிக்கொள்ளப்படவே வேண்டும் என்று தீர்மானமாயிற்று. இது சென்னைத் துரைத்தனத்தார் மூலமாக இந்திய துரைத்தனத்தார்க்கு அறிவிக்கப்படுவதாயிற்று.

இனி இந்திய துரைத்தனத்தாரவர்கள் உண்மையை உய்த்துணர்ந்துச் சென்னைச் சர்வகலாசாலையார் விரும்பியவாறே அவர்களது இஷ்டத்தை முடித்தருளுவார் என்று நம்புகின்றோம். அவ்வாறு முடித்தலே ஏற்புடைத்தாம்; அற்றன்றிப் பிறிதுபட நடத்தல் சால்புடைத்தன்று. இதனைப் பேரறிவாளராகிய இந்திய துரைத்தனத்தார் அறியாமற் போகாரென்பது திண்ணம். ஆகவே சுதேச பாஷைநீக்கம்போய்ச் சுதேச பாஷைகளுக்கு ஆக்கம் பிறந்ததென்றே நம்பித் தமிழ்ப் பெருந்தெய்வத்தை வாழ்த்தி இறைவற்குத் தெள்ளேணங் கொட்டுவேமாக.

## XVII. தமிழ்ப் பாடசாலைகள்

கிராமந்தோறும் தமிழ்ப் பாடசாலைகள் தொன்றுதொட்டு நடந்து வருகின்றன. கிராமச்சிறார்கள் இவற்றிற் கல்விகற்று வருகின்றனர். இவற்றின் சரித்திரத்தை ஆராயுங்கால் ஐம்பது வருடங்கட்கு முன்னர் இப்பாடசாலைகளில் தமிழ் நன்கு பயிற்று விக்கப்பட்டதென்பதும் தற்காலத்தில் அத்துணை பயிற்று விக்கப்படவில்லை யென்பதும் எவரும் அறிந்த விஷயமே. இதன் காரணம் யாது? தற்காலத்துத் தமிழ் பாடசாலைகளில் வாத்திமைத்தொழில் நடத்துவோர் பெரும்பான்மையும் தமிழறிவு நுட்பங்காணாதவரே. ஆங்கிலேய பாடசலைகளிற் சில்லாண்டுகற்று ஆங்கிலேய மாயினும் தமிழாயினும் சீர் பெறக்கல்லாமல் உதரவலி ஒழித்தற்பொருட்டுத் திரிபவரே சிறுவர்களுக்குப் போதிக்க வருபவராவர். இவர்கட்கு இலக்கண இலக்கிய வறிவு சூனியம். 'சட்டியிலுண்டானாலன்றோ அகப்பையில் வரும்?' பண்டமில்லாத வாசிரியரிடங் கற்கும் மாணவர் எங்ஙனம் பயன்பெறுவர்? அன்றியும் ஆங்கிலம் அரசபாஷையானதனால் முதன்மை பெற்று, நம் நாட்டு ஆலமரம்போல் தழைத்து விழுதுவிட்டு வலிமையுற்று விளங்கிவரும் இக்காலத்தில் சிறார் தமிழ்ப்பாடசாலைகளில் தங்கும் காலம் சிறிதேயாம். அன்னார் ஐந்துவயதாகு முன்னர் ஆங்கிலம் கற்கத் தொடங்குகின்றனர். தமிழ் வாசமும் ஏற்காமல் ஆங்கிலக் கல்வி தொடங்கும் மாணவர் உடல் தேய்ந்து கண்பூத்து மனமிற்று நாளடைவில் யமனுக்குணவாகின்றனர். உலகவறிவும் ஆயுள் விருத்தியும் குன்றிய இவர்களுடைய சந்ததி

யின் நிலையை நினைப்பிற் பரிதாபமே. மேலும் தமிழ் பயிற்றும் முறையைக் கவனிக்கப் புகுன் வியப்பே. இலகுவாய்ப் பிள்ளைகளுக்குப் பாஷையைக் கற்றுக் கொடுக்கத் கருதித் துரைத்தனத்தார் செய்திருக்கும் ஏற்பாடுகள் தமிழ் பாஷைக்கு ஒவ்வாதெனவே. முன்னிருந்த தமிழ் பாடசாலை உபாத்தியாயருக்கு ஆங்கிலக் கல்விகிடையாதாயினும் தமிழ்இலக்கண இலக்கியத் தேர்ச்சி மிகுதியு முண்டு. பிள்ளைகளும் குறைந்தது பன்னிரண்டு வயதுவரை தமிழ்கற்று வந்தார்கள். ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, உலகநீதி, வெற்றிவேற்கை, குறள்,நாலடி, குறைவஞ்சி, திவாகரம், நிகண்டு, எண்சுவடி, குழிப்பெருக்கம், தானப் பெருக்கம் இவைபோன்ற நூல்களைப் பயின்று வந்தனர். எண்ணெழுத் திகழாத இம்மாணவர் பாக்களை வாசித்து அன்வயப்படுத்தி அருத்தஞ் சொல்லவும் கொடுத்தகணக்கை வாயாறிறீறவும் சக்தியுள்ளவராய், லௌகிக அறிவு படைத்தவராய், ஒழுக்க விழுமிதாக் கொண்டவராய் நன்கு மதிக்கப்பட்டுவந்தனர். ஞாபகாசக்தி தற்காலத்து வாலிபர்களுக்குப் பெரும்பான்மையுங் கிடையாது. நான்குபாட்டுச்சொல்ல ஏலாது, சிலேட்டிலாயினும் காகிதத்திலாயினும் எழுதிப்பாராமல் கணக்கு ஒடாது. இஃதன்றியும், கற்குங்காலவளவும் சிறிதன்று. தமிழ்பாடசாலை விட்டபின்குறைந்தபக்ஷம் பதினெட்டாண்டு செல்லும். பி.ஏ. பட்டம் பெற. பதினொருவயதில் ஆங்கிலம் கற்கப்புகுந்த மாணவரும் மேற்கூறிய காலளவிற்கு முன்னரே அஃதாவது இருபது வயதில் பட்டம் பெற்றுவந்தனர். இருதிரத்

தாருக்கும் வித்தியாசம் என்னவெனில் பின்னவர் நீண்ட ஆயுளும் அறிவு முதிர்ச்சியும், ஒழுக்கச் செல்வமும், உடற்றிரமும், பெற்றிருந்தனர். முன்னவரோ, ஈப்போல் நைந்தும், கண்ணொளி யிழந்தும், இழைத்த நாள் எல்லையடையாததும், உடலாக்கம் மனவாக்கம் பெறுதும் கைபொருளிழந்தும் வருவாய் குன்றியும், தம்மைப் பெற்றூர் தவிக்கவும், தாம் பெற்ற குழவிகள் துடிக்கவும் விட்டொழிகின்றனர். அந்தோபாவம்! இப் பரிதாபநிலை தவிர்த்தல் எங்ஙனம்? துரைத்தனத்தாரும் தமிழபிமானிகளும் தமிழ்ப் பாடசாலைகளை நன்கு பாராட்டுதலிஞற் கூடும். இன்ஸ்பெக்டராக ஏற்பட்டிருக்கும் தமிழர்கள் தக்க தமிழ்ப்பாடங்களை ஏற்படுத்தவேண்டும். தமிழ்கற்பிக்கும்முறை வேறு மற்றபாஷைகள் கற்பிக்கும் முறைவேறு. என்பதை வற்புறுத்தித் தமிழின் விசேஷங்களை எடுத்துக் காட்டி ஆங்கிலப் போதனு முறை இதற்கு உதவாது என்பதை விளக்கவேண்டும். ஆங்கிலத்தேர்ச்சி மட்டுமன்றித் தமிழிலும் தக்கதேர்ச்சி யுடைய வரைத் தெரிந்து ஆசிரியாாக்கவேண்டும். அன்னூர்க்குமட்டும் போதனுமுறை பயிற்றறிவித்துப் போதகராயனுப்ப வேண்டும். சர்க்காருதவிப் பொருளையும் பாத்திரமறிந்து படைக்கவேண்டும். இத்தகைய குறிப்புக்களை கலப்பரேல், எல்லாத் தீமைத் தொழில் முன் போற், பறக்கும், மாணவர் மிக்க பயன் பெறுவர், வாழ்நாள் வீணுளாகாமல் இம்மையிற்றழைத்து, மறுமைக்கும் வித்திடுவர். தமிழபிமானிகாள்! தமிழபிவிருத்திக்கு ஆணிவேர் தமிழ்ப்பாடசாலை களாதலிஞல் அவற்றைக் கண்திறந்து பாருமின். அவற்றிக்குத் பைதிறந்துத

வுமின், வாக்குச் சகாயம் செய்யுமின், எவ்வாற்றானும் சிறார்கள் தமிழ்த்தாயைப் போற்றவல்ல வழிகளை நாடிக் கொடுமின்.

---

## XVIII. இந்தியர் ராஜபக்தி

நம் இந்தியாவில் முற்காலங்களி லிருந்த மாந்தரனைவரும் அவ்வக்காலங் களிலிருந்த அரசர்களிடத்திற் பக்தியுடையரா யொழுகினார்கள். இவ்வுண்மை அக்காலத்து இயற்றப்பெற்று இப்பொழுது நாமெல்லாம் படித்துணரத் தக்க பெருமைசான்ற காப்பியங்களால் இனிதறியப்படும். மாந்தரது அகவிருளாகிய அஞ்ஞானத்தை நீக்கும் கல்வியும், உலகத்திலுள்ள புறவிருளை நீக்குஞ் சூரியனும், மாந்தர்க்கு அநீதியாகிய காரிருளை நீக்குங் காவலனும் ஆகிய இம்மூவரும் மக்கட்கு மூன்றுகண்கள்; அக்கண்களுள் முதற்கண் காவலனும், இரண்டாங்கண் கல்வியும், மூன்றாங்கண் சூரியனுமென நூல்கள் வகைப்படுத்தோதின.

"கண்ணெனப்படுவ மூன்று காவலன்
கல்வி காமர்
விண்ணினைச் சுழலவோடும் வெய்யவ
னென்னும் பேர
வெண்ணினுட் டலைக்கண் வைத்த கண்ணஃ
தில்லை யாயின்
மண்ணினுக் கிருளைநீக்கும் வகைபிறி தில்லை
மன்னோ? (உச)

என்று நன்கெடுத் தோதினார் சூளாமணியுடைய தோலாமொழித் தேவர். வைத்தியன் மக்களது உடலொன்

றையே தனது மருந்துகளானுஞ் சிகிச்சைகளானுங் காக்கவல்லன்; நியாயவக்தாவோ மாந்தரது பொருளொன்றையே தனதுசட்டவுணர்ச்சியானும் நியாயநூற் பயிற்சியானும் யுக்திகளானும் பாதுகாக்கவல்லன்; குருவோ மனிதரது ஆன்மா வொன்றையே தனது வன்மையான் மலபந்தத்தினின்றும் நீத்துக்காக்க வல்லவன். மக்களது உடல் பொருளாவி மூன்றையுந் தனித்தனி முறையே பாதுகாக்கவல்லார் வைத்தியனும் நியாயவக்தாவும் குருவு மென்பதேற் பட்டதே யொழிய இவை மூன்றையும் ஒழுங்கே காக்கவல்லார் அவரென்ப தேற்படவில்லை. அவர் இவையனைத்தையு மொருங்கே காக்கவும் வல்லரல்லர். மற்றுயாவரே அவ்வாறு காக்கவல்லா ரெனில், அரசனே. தன்னானுந் தன் பரிசனத்தானும் பகைவரானும் மக்கட்கு இடுக்கண் நேராதவாறு அவரது உடல் பொருள்களைக் காத்தும், மக்களது சாதிகுலாசாரங்கட்கும், சமய சாஸ்திர வொழுக்கங்கட்கும் பழுது வாராதவாறு அவரது ஆவியைப் பாதுகாத்தும் வருதலான் வேந்தனே மாந்தரது உடல் பொருளாவி மூன்றையு மொருங்கே காக்க வல்லன்.

"மானிலங் காவலனாவான் மன்னுயிர்க்
காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன்
பரிசனத்தால்
ஊன் மிருபகைத் திறத்தாற்கள்வரா
லுயிர்தம்மால்
ஆனபய னமைந்துந் தீர்த்தறங் கப்பா
னல்லனோ" (உரு)

என்றார் பெரிய புராணம் முடைய சேக்கிழார் சுமிவாமி கள். இதனாலே மன்னவன் மாந்தரது உடல் பொருள் கள் காக்குமாறு பெற்றாம்.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்'' (உசு)

என்றார் திருக்குறளுடைய தெய்வப் புலமைத் திருவள் ளுவனார். இன்னும்

"மாதவர் நோன்பும் மடவார் கற்புங்
காவலன் காவல் இன்றெனில் இன்றால்'' (உஎ)

என்றார் மணிமேகலை யுடைய மதுரைக் கூலவாணிகன் சாத்தனார். இவற்றினாலே அரசன் மக்களது ஆவியைப் பாதுகாக்குமாறு பெற்றாம்.

மேற்கூறி யாங்குத் தன் கீழிருக்குங் குடிகளைப் பாதுகாக்கும் கோமானை மறக்கவு மொண்ணுமோ? கடவுளிடத்துப் பக்தியுடையாராதல் போலக் காவல னிடத்தும் மக்கள் பக்தியுடைய ராவரன்றே.

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்' (உஅ)

என்றார் சீவக சிந்தாமணி யுடைய திருத்தக்கதேவரும்

மேற்கூறியவாறு அரசனுக்குங் குடிகளுக்கு முள்ள இயைபினை நன்குணர்ந்தவராகிய நம் இந்தியர் கள் தம்மன்னவர் ஜாதியினாலும் சமயத்தினாலும் வேறுபட்டவராயினும் அன்னார்க்கடங்கி அவரதாணை வழி யொழுகும் இராஜ பக்தர்கள். 'வல்லான் வகுத் ததே வாய்க்கால்' என்றிருக்க முற்காலங்களிலேயே

நம் இந்தியர் நிலைமையிற்றென்றால், எளியரும் வலிய ரும் வேறுபாடின்றி ஒரு தன்மையாராய்ப் பாராட்டி நடத்தப்படும் நடுவு நிலைமையும் நீதியும் வாய்ந்த நம் ஆங்கில அரசாட்சிக் காலத்தில் நம் இந்தியர்களிடத் தில் இராஜபக்திக் குறைவு எங்ஙனம் ஏற்படும்? ஒரு நாளும் ஏற்படாதென்பது திண்ணம்.

பாஷை நடையுடை, ஜாதி, சமயம், நிறம் முதலிய பலவாற்றானும் வேறுபட்டமையின் இந்தியரும் ஆங் கிலரும் தொடக்கத்தில் ஒருவரை யொருவர் நன்கு ணராது இருவர்க்கும் வேற்றுமை யுணர்ச்சியேற் படுவ தாயிற்று. வரவர ஆங்கிலபாஷை இந்தியருட் பரவுவ தாயிற்று; மேற்புலவாணரது நடையுடைகளும் ஓராற் றாற் பின்பற்றபடுவன வாயின. ஆகவே நம் இந்தியர்க் கும் ஆங்கிலர்க்கு முள்ள வேற்றுமை யுணர்ச்சி குன்றி ஒற்றுமை யுணர்ச்சி மிகுந்துகொண்டே வருகின்றது. அஃதாவது முன்னையினும் இப்போழ்தத்து இராஜ பக்தி மிகவும் வளர்ந்துவருகின்றது.

இவை யனைத்திற்கும் அறிகுறியாய் நம் விஜயை மகாராணியார் காலஞ்சென்றபோது நம் இந்தியர்கள் எய்திய துக்கத்திற்கோரளவுண்டோ? தாயிழந்த புனிற்றிளங் கன்றெனக்கதறினர். மற்று மகாராணி யாரது மூத்தபுதல்வரும் அரசுரிமை வாய்ந்தவருமா திய எட்வர்டு வள்ளலார் சிங்காதன மேறினமைகேட்டு நம் இந்தியரனைவரும் பேரானந்தக் கடலினுள் திளைத்து விளையாடினர். இதுபோலவே நம்முடைய சக்கரவர்த்தியாரது முடிசூட்டுக் கொண்டாட்டத்தி னிமித்தம் அக்காட்சியை நேரே காண வேட்டுச் சீமை

சென்றவரும் பரிசில் கொடுக்கச் சன்னத்தரானவரும், அன்னதானம் செய்யவேட்டவரும், பாடல் பாடு நரும், கடவுளைத்துதிப்பவரும், அவ்வானந்தத்தி னறி குறியாக நாடகமாட விரும்பியவருமாயிருந்தனர். இவ்வாறு நம்மவர் இராஜபக்தி தலைக்கிளர்ந்தோங்கி வெளிப்பட்டுலவும் அமையத்து, 'அரசர்க்கு உடம்பு செவ்வையில்லையாதலின் முடி சூட்டுக்கொண்டாட்டம் இதுபோழ்து நிறுத்திவைக்கப்பட்டது' என்று இடிவிழுந்தாற்போல்வதோர் செய்திகேட்டு நம் இந்தியா முழுவதும் நடுங்கிக் கலங்கலுறெய்திற்று. அங்ஙனம் மனந்தளர்ந்த நம் இந்தியராவார் வாளாதிராது உடனே தேவாலயஞ் சென்று மன்னவர் பெயராற் பூஜை செய்வதும், அர்ச்சனை புரிவதும் சோதிடர்பாற் சென்று கேட்பதும், பத்திரிகைகளில் தந்திச் சமாசாரங்களைப் பார்ப்பதுமாயிருந்தனர்.

பின்னர்ப் பத்திரிகைகளும் அரசரது சௌக்கிய நிலையைப்பற்றி நற்செய்திகள் சொல்லிவரவே எம்மவர் மனங்களெல்லாஞ் சிறிது ஆறுவனவாயின. 'அரசர் முற்றிலும் சௌக்கியமே! பட்டாபிஷேக மகோற்சவம் அடுத்த மதியில் நிகழும்' என்ற செய்திகேட்டு, மூங்கையானுன் பேச்சுவன்மை பெற்றெனக் களிகூர்வோமாயினேம். கூடியவிரைவினில் நம் எட்வர்டு மன்னவர்க்குப்பட்டாபிஷேகம் நிகழ்ந்து நம் இந்திய ரனைவர்க்கும் இன்பம் பயப்பதாக.

இனி இராஜபக்தி நிரம்பிய நம்மவர்மேல் இராஜ விசுவாசக் குறைவு காண்பதாக வாய்ப்பறையறைந்து திரியுஞ்சில போலிமாக்களது வெருட்டுரை நம் இந்தி

யரை யச்சுறுத்தும் வலியிலவாய்க் கழியுமென்க. இந்தியரது ஆக்கமுஞ் சிறப்புங்கண்டு பொறாமை கொண்ட புல்லறிவாளர் சிலர் பொய்க்கதைகள் புனைந்துகூறி நம் இந்தியர்மீது அரசாட்சியார் கொண்டுள நல்லெண்ணத்தை மாற்றுவான் புக்கனர். புக்குமென்? அவரது கருத்துக் கைகூடாது போகவே வாய்பிளந் தேகினர்.

"அரசனுங் குடிகளுமம்ம வேறல
ருரைசெயினுயிருலா முடல மாவரால்" (உகூ)

—மதிவாணன்

தமிழ் வியாசங்கள்
முற்றிற்று.

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| | |
|---|---|
| அந்தணர் நூற்கும் | 113 |
| *அரசனுங் குடிகளு | 116 |
| அவமதிப்பு மான்ற | 84 |
| அழுக்காறென | 84 |
| உறங்குமாயினு | 113 |
| *என்றுமென்குறை | 54 |
| கண்ணெணப்படுவ | 111 |
| குற்றமே தெரிவார் | 74 |
| செந்தாமரைக் | 37 |
| சென்றது மன்னெனங் | 80 |
| தம்மினுங் கற்றுரை | 83 |
| தம்மை யிகழ்ந்தமை | 52 |
| தன்னெஞ்சறிவது | 77 |
| *திருவளர் செல்வ | 9 |
| தெரியாதவர்தங் | 52 |
| *தொன்று தோன்றிய | 76 |
| தோளையே சொல்லு | 36 |
| நள்ளி வாழியோ | 86 |
| நாருத்தகடேபோ | 82 |
| நுண்ணுணர்வின்மை | 80 |
| நெறியாலுணராது | 53 |
| பல்லான்ற கேள்விப் | 79 |
| பல்லுயிரும் பலவுலகும் | 100 |
| பொய்ந்நின்ற நெஞ்சிற் | 37 |
| பொலம்பூத்த | 2 |
| மன்னவனு நீயோ | 91 |
| மாசிலாவையகத் | 19 |
| மாதவர் நோன்பும் | 113 |
| மாணிலங்காவல | 112 |


* உடுக்குறியுற்றன ஆசிரியரியற்றியவை, மற்றவை மேற்கோட்பாக்களாம்.

இந்நூலிலுள்ள வியாசங்கள் கீழ்க்கண்ட சஞ்சிகைகளிலிருந்து எடுக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | தற்காப்பு நியமம் | தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டது. |
| 2 | பொய்த் தோற்றங்கள் | விவேக சிந்தாமணி |
| 3 | ஜீவராசிகளின் நாநாவித வர்ணங்கள் | ஷை |
| 4 | மனவமைதி | ஞானபோதினி |
| 5 | உயர்தனிச் செம்மொழி | செந்தமிழ் |
| 6 | பதினெட்டாம் நூற்றாண்டின் தமிழ்ப் பாஷாபிவிர்த்தி | விவேகசிந்தாமணி |
| 7 | சொற்பொருளாராய்ச்சி | ஞானபோதினி |
| 8 | ஓர் நண்டுத்தெறுக்கால் | ஷை |
| 9 | தமிழ் நூலாராய்ச்சியின் தற்கால நிலைமை | Christian College Magazine, Madras |
| 10 | வறுமையுந் தமிழ்ப்புலமையும்* | ஞானபோதினி |
| 11 | தமிழ்ப்புலவர் பொறாமை* | ஷை |
| 12 | தமிழ் அகராதி* | ஷை |
| 13 | தமிழ் நூலாதரிப்போர்* | ஷை |
| 14 | சுதேச பாஷை நீக்கம்* | ஷை |
| 15 | சர்வகலாசாலை விசாரணை* | ஷை |
| 16 | சுதேச பாஷையாக்கம்* | ஷை |
| 17 | தமிழ்ப் பாடசாலைகள்* | ஷை |
| 18 | இந்தியர் ராஜபக்தி* | ஷை |

* உடுக்குறியுற்றன இந்நூலாசிரியர் திருவாளர் M. S. பூர்ணலிங்கம் பிள்ளையவர்களுடன் பத்திராதிபரா யிருந்த காலத்தில் பத்திராதிபர் என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டவையென்று திருவாளர் பூர்ணலிங்கம் பிள்ளையவர்களின் சொற்படி மற்றவையுடன் இவை பிரசுரிக்கப்பட்டன.

சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத்
தமிழ் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி.ஏ.,**

அவர்கள் இயற்றியவை

## 1. கலாவதி 2 0 0

இஃது ஒரு புதிய தமிழ்நாடகம். மகளிராடவர் மகிழ் சிறந்து படிக்கற்பாலது. கதையினடியாய்ச் சிறப்பு வாய்ந்த நீதிகள்பல கட்டுரைப்பது. கற்றாருங் கல்லாருங் கண்டு, ஒருங்கே களிகூறத்தருவது. ஸ்ரீமான். டி. ராமகிருஷ்ண பிள்ளை B.A., F.M.U., F.R.H.S., அவர்களுடைய முகவுரையுடன் கூடியது.

## 2. நாடகவியல் 1 8 0

இது நாடகத் தமிழிலக்கணநூல்; நாடகவமைதியை நன்கு விளக்கி, இனிமைதோன்றக்கூறுவது. தமிழ்மொழியின்மீது ஆர்வமுடையார் யாவருக்கும், நாடகாசிரியர்க்கும் இன்றியமையாதது. மிகவும் புதுமையாக அமைக்கப்பட்டுளது. அண்ணாமலைச் சர் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராயிருந்த ந. பலராமய்யர் எழுதிய விரிவுரையுடன் கொண்டது.

## 3. ரூபாவதி 1 4 0

இது ஓர் புதிய தமிழ் நாடகம். ஆடவரும் பெண்டிரும் அகமகிழ்ந்து வாசிக்கத்தக்கது. கதையின்மூலமாய்ச் சிறந்த நீதிகள்பல கற்பிப்பது. எப். ஏ., பரீக்ஷைக்குப் பாடமமைக்கப்பட்டிருந்தது.

## 4. தமிழ் மொழியின் வரலாறு 1 0 0

இஃது தமிழ்ப் பாஷையின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி வேறுபாடு, சிறப்பு, சீர்திருத்தம், சரித்திரம் முதலியன கூறும் ஓர் அரியதமிழ்நூல். யாவரும் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க செந்தமிழ் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. தமிழர் எவர்க்கும் இன்றியமையாதது. பி.ஏ. பரீக்ஷைக்குப் பாடமானது.

## 5. மான விஜயம். 1 0 0

இது ஓரங்கத்தில் முடிந்துள்ள ஓர் தமிழ்நாடகம். முழுதும் செய்யுளாகவே அமைந்துள்ளது. அறிஞர் விருப்பும், கவிஞர் மதிப்பும் பெற்றது. சுதேசமித்திரன் ஆசிரியர் காலஞ்சென்ற ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள், பி. ஏ., எழுதிய முகவுரையுடன் கூடியது. அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ஸ்ரீமான். ந. பலராமய்யர் எழுதிய உரையுடன் கொண்டது.

## 6. பாவலர் விருந்து (முதல்நாள்) 1 0 0

இனிமையும், புதுமையும், வாய்ந்த அநேக சிறிய செய்யுள் நூல்கள் கொண்டது; ஆங்காங்குச் சில புதிய கருத்துக்கள் பொதித்துளது. பண்டிதரும் பாமரரும் படித்துணர்ந்து பயன் பெறத்தக்கது. அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ஸ்ரீமான். ந. பலராமய்யர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

## 7. தனிப்பாசுரத் தொகை 1 0 0

(முதல்வரிசை) இது 43 தனிப்பாசுரங்களடங்கியதோர் உறுதிநூல். அருமையும் பெருமையும் வாய்ந்த பல பொருள்களை யெடுத்துரைப்பது. மாணாக்கர் யாவர்க்கும் பெரிதும் பயன்படத்தக்கது. "பரிதி மாற்கலைஞன்" என்னும் புனைவுப்பெயரில் வெளியிட்டது. கனம் பொருந்திய ஜி. யூ. போப்பையரவர்களால் ஆங்கில பாஷையினுஞ் செய்யுளாக மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அண்ணாமலைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ந. பலராமய்யர் எழுதிய குறிப்புரையுடன் கொண்டது.

## 8. மதிவாணன் 0 12 0

இது மிகவும் உயரிய செந்தமிழ் நடையில் இயன்றுளது. புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை. தமிழுலகில் இணையற்றது. இதனைப் படிப்பவர் எவரும் இதனைக் கைவிடார் என்பது திண்ணம். தமிழில் நற்பயிற்சியுண்டாக்கும் கதாரத்தினம்.

## 9. தமிழ் வியாசங்கள் 0 12 0

இது எளிய நடையில் எழுதப்பட்டதோர் அரிய நூல். தற்காப்பு நியமம், பொய்த்தோற்றங்கள் முதலிய அரிய வியாசங்கள் கொண்டது. ஆசிரியர் பல்வேறு சமயங்களில் பல பல சஞ்சிகைகளிலும் தனிப்பட்ட வியாசமாகவும் வெளியிட்டதை ஒருங்கே தொகுக்கப் பட்டுளது.

## 10. தமிழ்ப் புலவர் சரித்திரம் 0 8 0

இது, புகழேந்தி, செயங்கொண்டான் முதலியோரைப்பற்றியும் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்த தமிழ்ப் புலவர்களைப்பற்றியும் அவர்களியற்றிய நூலைப் பற்றியும் கூறுவது. சி. வை. தாமோதரம் பிள்ளையின் சரித்திரமும் உடன்கொண்டது.

## 11. ஸ்ரீ மணிய சிவனார் சரித்திரம் 0 4 0

இஃது இடையிடையே வடமொழி மேற்கோள்கள் பெய்யப்பட்டதோர் சரிதம். எளிய நடையில் எழுதப்பட்டுளது. சைவமதத்தின் உண்மை பல தெரிவிப்பது. ஆசிரியருடைய தந்தையாகிய, கோவிந்த சிவனாருக்கு ஞானகுருவானவர் ஸ்ரீ மணிய சிவனார் என்பவரே.

## 12. பரிதிமாற் கலைஞன் (அச்சில்)

இது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்து காலஞ்சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பி.ஏ. அவர்களுடைய சரித்திரம் அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ந. பலராமய்யர் எழுதியது.

# Complete Works

OF

**V. G. SURYANARAYANA SASTRIAR, B.A.,**

*Senior Tamil Professor, Christian College, Madras.*

All his Works! In Two Volumes !!

**In the Press—Will be ready Shortly**

**Useful for Scholars, Pandits and Libraries.**

Register your orders now !

சென்னைக் கிறிஸ்தவ

கலாசாலைத் தலைமைத் தமிழ் ஆசிரியராயிருந்த

**வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி.ஏ.,**

அவர்களது

## நூல் தொகுதி

இரண்டு பகுதிகளாக வெளிவரும்.

மாணவர்க்கும், பண்டிதர்க்கும், புத்தகசாலைகட்கும் தகுந்தது.

உடனே பதிவு செய்து கொள்ளுங்கள் !

---

**வி. சூ. சுவாமிநாதன், மதுரை & திருநெல்வேலி.**

---

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.